Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 36 | 28 - 03 - நவம்பர் - 2005

## பிரிவினையின் வல்லவர்கள்...

## பெல்ஜியத்தின் முற்றத்தில்...



ஜி8 என்ற குழுமத்திலே கனடா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, ஜப்பான், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் அடங்குகின்றன.

உலகில் உத்தியோக பூர்வமாகச் சந்தைப்படுத்தப்படும் ஆயுதங்களில் 84 விழுக்காடு அளவினதான ஆயுதங்களை இந்த ஜி8 நாடுகளே விற்பனை செய்கின்றன.. என்று சர்வதேச மன்னிப்புச்சபை, ஒக்ஸ்பாம் ஆகிய அமைப்புக்களின் ஜி8: உலகளாவிய ஆயுத ஏற்றுமதியாளர் (TheG8: Global Arms Exporter) என்ற அறிக்கை கூறுகின்றது.

இந்த நாடுகளால் வழங்கப்படும் ஆயுதங்கள், மனித உரிமைகளை மீறும், மக்களை ஏழ்மைக்கு உள்ளாக்கும், அயல் நாடுகளோடு சண்டையிடும் ஒடுக்குமுறை அரசுகளால் பயன்படுத்தப்படுகின்றன என்று அபிவிருத்திசார் முகவர் அமைப்பின் அறிக்கை கூறுகின்றது.

ஜரோப்பிய யூனியனால் ஆயுதத்தடைக்கு உட்படுத்தப்



சிறுரக ஆயுதங்களை ஜப்பான் ஏற்றுமதி செய்துள்ளது.

கவசப் பாதுகாப்புடனான வாகனங்கள் உள்ளிட்டதான ஆயுத விற்பனைக்கான கட்டுப்பாடுகள் இல்லாத அனுமதிப் பத்திரங்களை, அல்ஜீரியா, மொராக்கோ, பாகிஸ்தான்,சிரியா,சவூதிஅரேபியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கான ஆயுத விற்பனைக்கென இங்கிலாந்து வழங்கியுள்ளது. மேலே குறிப்பிட்ட நாடுகளின் ஆயுதப்படைகளும் பொலிசாரும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வரும் நிலையிலேயே இந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலுக்கு அகல்விரிவான வகைப்பட்ட ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் அமெரிக்கா இந்தியாவுடன் ஆயுதப்போட்டியில் ஈடுபடும் முனைப்புள்ள பாகிஸ்தானுக்கும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்கிறது.

28.7 பில்லியன் டொலர் அளவினதான இந்த ஆயுத வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் 10 நாடுகளில் ஜி8 நாடுகள் ஆறு இருக்கின்றன.

மனிதநேய, பாதுகாப்பு அடைந்து வரும் நாடுகளுக்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஆயுத ஏற்றுமதியானது கடன்களில் இருந்து விடுபடுதல், எய்ட்ஸ்-ஐ எதிர்த்து போராடுதல், வறுமை ஒழிப்பு, ஊழல்/ இலஞ்ச ஒழிப்பு,நல்லாட்சியை முன்னெடுத்தல் போன்ற உறுதி மொழிகளுக்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கிறது" எனவும் இவ்வறிக்கை கூறுகிறது. கணக்குக் காட்ட முடியாதவையும் சரியான பயிற்சி அற்றவையுமான படைகளுக்கு வழங்கப்படும் ஆயுதங்கள், மனித உரிமைகளை ஒடுக்கவும், மூலவளங்களை ஈவிரக்கமின்றி சூறையாடுதலை ஊக்கப்படுத்தவும் சூழலை மாசடையச் செய்யவும் உதவுகின்றன என இவ்வறிக்கை மேலும் கூறுகின்றது.(நன்றி-காடியன்)

மேற்குறிப்பிட்ட ஆயுதங்களை பெறும் நாடுகளில் சிறிலங்காவும் அடங்குகிறது என்பதும் சிறிலங்காவில் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன, மூல வளங்கள் ஈவிரக்கமின்றி அரசு அமைச்சாகளாலேயே கொள்ளையடிக்கப்படுகின்றன, சூழல் படுமோசமான பாதிப்புக்குள்ளாக்கப்

# உலகில் அதிக ஆயுதங்களை விற்பனை செய்யும் பணக்கார நாடுகள்..!

பட்ட மியான்மார், சீனா, சூடான் போன்ற நாடுகளுக்கு பிரான்ஸ், ஜேர்மனி இரண்டுமே ஆயுதங்களை ஏற்றுமதி செய்கின்றன.

சூடான், எத்தியோப்பியா, ஈரான் போன்ற நாடுகளுக்கு ரஷ்யாவும் ஏற்றுமதி செய்கிறது.

கனடா தனது படைய உபகரணங்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது. அமெரிக்காவோ அவற்றை கொலம்பியாவுக்கும் அது போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது. கனேடிய அரசு இந்த நரடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்திருக்காது.

கென்ய பொலிசார் கடுமையான அடக்கு முறைகளை பிரயோகித்தாலும் அந்நாட்டுக்கு பிரான்ஸ் கண்ணீர் புகைக்குண்டுகளை ஏற்றுமதி செய்வதாக இதே அறிக்கையில் உதாரணம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் கண்ணீர்ப்புகை ஏற்றுமதியை இங்கிலாந்து இடைநிறுத்தியுள்ளது.

இத்தாலி நாடானது அல்ஜீரியாவுக்கு சிறுரக ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது. உத்தியோக பூர்வமாக "எந்தவொரு ஆயுதத்தையும் ஏற்றுமதி செய்யாத'' ஜப்பான் கூட அல்ஜீரியாவுக்கு சிறுரக ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதன்படி அல்ஜீரியா, லெபனான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு குறிப்பிடத்தக்களவு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு செலவிடப்படும் தொகைகளோடு ஒப்பிடும் பொழுது இது மிக அற்ப தொகை தான் எனக்கூறும் இந்த அறிக்கை மேற்குறித்த நாடுகள் மரபுவழியான/ சிறுரக ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதாகவும் கூறுகின்றது.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கான உதவித்திட்டங்களுக்கு ஜி8 நாடுகளில் பலவும் பெருமளவில் நிதி வழங்குனர்களாக இருக்கின்றனர்.

"எனினும் அபிவிருத்தி

படுகின்றது என்பதும் ஒன்றும் இரகசியமான விடயமல்ல..

ஆனால் சிறிலங்காவுக்கு ஆயுதம், பயிற்சி, ஆலோசனை என வழங்கும் இந் நாடுகள் இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் புலிகளுக்கெதிராக மனித உரிமைமீறல் குற்றங்களை சுமத்தி ''வரவேற்புத் தடையை'' விதித்திருப்பதும் விளங்காப் புதிர்களாகவே இருக்கின்றன.

## படித்ததில் பிடித்தது

### கட்சியின் சின்னமாய் கழுதை

உயர் ரக அவல்போல்
சலவைத்தூள்
அல்சினால் அழுக்கு நீக்கும்
அநேக விலை இயந்திரங்கள்

குவிந்தாலும் குவிந்தன சந்தையில்
துவைத்துக் காய்ந்த துணிகள் கண்கூசும்

உடல் பொருந்தாத கால்கள் பெற்ற
ஜீவராசி மறக்கப்படலாமா?

நடு[illegible] குரைக்கும் நாய்போல் தொந்தரவு தராது
கு[illegible] ஓடி பூனைபோல்
போ[illegible] வேலை கெடுப்பதும் கிடையாது

[illegible] இ[illegible]த்தில் நிற்கும்
எப்போ[illegible] [illegible]னாலும் அதிர்ஷ்டக் காற்றுத்தான்

பல்தோல் மாமிசம் எதுவும்
எவருக்கும் தேவையில்லை உண்மைதான்

அழகி கிளியோபாத்ரா கழுதைப்பாலில்
குளித்த அழகுக்குறிப்பு போதாதா பிறவிக்கு?
மற்றொரு செய்தியும் மருத்துவ சுவடிகளில் உண்டு
கழுதையின் பால் சித்தபிரமை போக்கும்
வழிபண்ண வேண்டும் தாமதம் செய்யாமல் அரசாங்கம்

கொடி விலங்குகளுக்கும் சரணாலயங்கள்
குட்டிச் சுவர் ஓரமும் காணமுடியாமல்
கழுதைகள் மறைந்த பாவம் என்ன
எதுவாகவும் இருக்கட்டும்
மழைவரத்தான் கல்யாணம் என்பது மறந்து
இனம் பிழைக்க நடத்தியாக வேண்டும்
தினம் கழுதைகள் கல்யாணம்


இதெல்லாம் மறந்துபோனால்
கட்சியின் சின்னமாய் கழுதை
அந்நிய தேச தேர்தலில்தான் முகம்காட்டும்
கண்காட்சிக் கூண்டுகளில்
குரங்குக்கு கிடைத்த இடம்கூட பெறாமல்
ஞாபகம் வைத்துக்கொள்ள
கழுதை பற்றிய கடைசிக் குறிப்பு
குனிந்த தலை நிமிராது.

தமிழில் – இ.றஜித்
ஆங்கிலத்தில் – காரைக்குடி சீரவீலியா

# பிரிவினையில் வல்லவர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பரப்புரைகளை தீவிரப்படுத்தியுள்ளார். 14 இலட்சம் வாக்கு வங்கியைக் கொண்டதான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மற்றும் ரவூப்ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவும் இவருக்குக் கிடைத்திருப்பதன் காரணமாக இவர் தனது வெற்றி வாய்ப்பில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்.

ஒக்ரோபர் ஏழாம் திகதி நியமன



தினத்திற்கு 11 நாட்களுக்கு முன்னதாக 27.09.2005 இல் இவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தார். பொருளாதார மீட்சி, சமாதான முன்னெடுப்பு, ஆறு படைப்பிரிவுகள் நிர்ணயம் செய்யப்படுதல், கிழக்கில் விசேட ஆயுதப்படைப்பிரிவு உருவாக்கல், பத்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கல், சமுர்த்தித் திட்டம் மாற்றப்பட்டு சுயசக்தித்திட்டம் ஏற்படுத்தல், சீதனத்துக்குத் தடை, யுத்தத்தால் இடம்பெயர்ந்தோருக்கான தனியான அமைச்சு என்று பல விடயங்கள் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினை தொடர்பாகக் குறிப்பிடுகையில், பேச்சுவார்த்தை மூலம் இறுதித்தீர்வுக்கு இணங்கிய பின்னர் புதிய அரசியலமைப்புத்திட்டம் மக்களின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்திருப்பதுடன் பிரிவினைக்கு இடமளிக்காமல் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாத்து ஐக்கிய இலங்கைக்குள் சகலரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வுக்கே சம்மதிப்போம் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னர் 18.09.2005 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு ஒன்று கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடைபெற்ற வேளை மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆண்டிலேயே சனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற ஐக்கிய தேசியக்கட்சியின் கோரிக்கைக்கு வலுச்சேர்ப்பதற்காக தெவிநுவரவிலிருந்து கொழும்புவரை பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் 30 இலட்சம் கையொப்பங்கள் வைத்து ஆதரித்தமக்களுக்குக் நன்றி தெரிவிப்பது முதலாவது தீர்மானம்.

“....... பிரிவினையைத் தோற்கடித்து அனைத்தின மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்து ..... எனக் குறிப்பிட்டு ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு பாடுபட வேண்டுமென்பதற்கு உறுதியெடுப்பதாக இரண்டாவது தீர்மானம் தெரிவிக்கிறது.

மூன்றாவது தீர்மானம் சனாதிபதித் தேர்தல் நீதியாக நடைபெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரிவினைக்கு இடமளிப்பதில்லையெனவும், விசேடமாக நாட்டில் பிரிவினையைத் தோற்கடிப்போமெனவும் சூளுரைக்கிறார்.

2001ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 40இலட்சத்து 86ஆயிரத்து 26 வாக்குகளின் மூலம் 109 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்று பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் 2002-பெப்ரவரி 22இல் விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் உள்நாட்டுப் போர் தற்காலிக ஓய்வைப் பெற்றது. போர் ஓய்வைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுடன் ஆறு சுற்றுப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட தன் காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென இருதரப்பும் ஒப்புக்கொண்டனர். இந்த நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கு முன்னர் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்று ஏற்படுத்துவது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளினால் அதிகாரசபை வரைவு ஒப்படைக்கப்பட்ட நான்காம் நாள் சனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களை தன்வசமாக்கிக் கொண்டதன் பேரில் ரணில் விக்கிரம சிங்கவின் அரசு கவிழ பொதுத் தேர்தல் நடைபெற வேண்டியதாயிற்று.

2004-ஏப்ரல் மாதம் ஜே.வி.பியைக் கூட்டாகக் கொண்ட சுதந்திரக்கட்சி- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 42 இலட்சத்து 23ஆயிரத்து 970 வாக்குகள் கிடைத்து 105 ஆசனங்கள் மூலம் ஆளும் கட்சியானது 3504200 வாக்குகளினூடாக 82 ஆசனங்களைப்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியானது ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராகி யதை மக்கள் நன்கறிவர்.

**அதிகாரத்தை தங்களுக்குள் வைத்திருப்பதில் தமக்கிடையே பிரிவினை வாதத்தை வளர்த்தார்கள். மக்களிடையேயும் பிரிவினைவாதத்தை வளர்த்தார்கள்.**

**மொழிப்பிரிவினையை, மதப்பிரிவினையை, நிலப்பிரிவினையை வளர்த்தார்கள். இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமையை பறித்ததன் மூலம் இந்தியத் தமிழர் இலங்கைச் சிங்களவர் எனப் பிரிவினையை வளர்த்தார்கள்.**

இதன் மூலம் பிரிவினைக்கு இடமளிப்பதில்லை எனவும் பிரிவினை யைத் தோற்கடிப்போம் எனவும் சூளுரைக்கும் இன்னொரு பிரிவு உத்வேகம் கொண்டதைக் கண்டோம்.

ரணில் சனாதிபதியானால் விடுதலைப் புலிகளுடன் பேசி இந்திய அரசியலமைப்பு முறை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட வேண்டுமென்று ரணில் தெரிவிப்பதன் மூலம் அவரது அரசியல் ஆற்றல் அல்லது நேர்மைத்திறன் கேள்விக்குள்ளாகிறது. அவர் பொறுப்பு வாய்ந்த தலைவர். ஐ.தே.க அனுபவம் மிக்க கட்சி. அது ஏலவே காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் தனது புதிய அரசியல் வரைவை வரைந்திருக்க வேண்டும் அல்லவா? அவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் பேசித்தீர்ப்போம் என்று சொல்வதென்பது ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவரின் கூற்றெனக் கொள்ளலாமா?

பிரிவினையைத் தோற்கடிப்போமென மாநாட்டில் முழங்குகிறார். பிரிவினைக்கு இடமளிக்கமாட்டோம் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறுகிறார். பிரிவினைபேதங்களுக்கு ஆப்பு என்று சுவரொட்டி ஒட்டுகிறார். இந்த வார்த்தைப் பிரயோகங்கள் யாவும் தமிழரின் கோரிக்கைகளை நசுக்கிவிட வேண்டுமென்ற உத்வேகத்தையே கோடிட்டுக்காட்டுகிறது.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதனாலும் இப்பிரச்சினைகளுக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமைப்பங்கை வகித்துப் போராடி வருகிறார்கள் என்பதாலுமே விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டிய தேவை அரசினர்க்கு ஏற்பட்டது. ஆனால் இதனை ஒரு தந்திரோபாயமான செயற்பாடாகக் கருதுவார்களாயின் இதனால் சீரழிந்து போகப்போவது இந்த நாடுதான் என்பதை “கப்பேரட்ட கப்பே பலடிஸ” என முழக்கமிடுகின்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் எப்போதுதான் புரிந்துகொள்ளப் போகிறார்கள்?

பிரிவினையைத் தோற்கடிப்போம் என சூளுரைக்கிறார் ரணில். மகிந்த ராஜபக்ஷ என்ன சொல்கிறார்: அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தடல் புடலான விளம்பரத்துடன் வெளியிட்டு வைத்துள்ளார். பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுப நேரம் பார்த்து தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்தா.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும். தமிழர்களுக்கு சுயநிர்ணய அந்தஸ்து வழங்கப்பட முடியாது. தன்னாட்சி அதிகாரசபை தேவையற்றது. சுனாமி பொதுக்கட்டமைப்பு செயலாற்றப்படமாட்டாது போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒற்றையாட்சி அரசமைப்பு நீக்கப்பட்டு அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக இறையாண்மை மிக்க நிர்வாகக்கட்டமைப்பு உருவாக்குவதற்கு ஏதுவான அரசமைப்புத் திருத்தமானது பிரிவினைவாதம் என்றுதான் சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் பேசிவருகின்றனர். இந்த அடிப்படையில் மகிந்தவின் சிந்தனையும் பிரிவினையைத் தோற்கடிப்போம் என்பதேயாம்.

ஆட்சி அதிகாரத்தை பிடிக்க விரும்புகின்ற சிங்களத் தலைவர்கள் இனவாதம் கக்குவதில் வல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஆயினும் சிற்சில வேளைகளில் அவர்களை அறியாமலேயே சில உண்மைகளைக் கூறி விடுவதும் உண்டு.



தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கும் . வேட்பாளர், நியமனத்திகதிக்கு முன்னதாக ‘பிஸ்னஸ் ருடே’ ஆகஸ்ட் மாத இதழுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விசேட செவ்வி வழங்கியுள்ளார். “.....தமிழர் போராட்டம் நியாயமானதே. தவறென வாதிடுவது முட்டாள்தனம்.... பேச்சுவார்த்தை மூலமே இனப்

## ஆறுமுகம்

பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும். அதேநேரம் நாடு பிளவுபடுவதையும் அனுமதிக்க முடியாது....” என்று கூறியுள்ளார். தமிழரின் போராட்டம் தவறெனக் கூறுவது முட்டாள் தனம் எனக் கூறுகின்ற பிரதமர் இந்தப் போராட்டத்தின் நியாயத்தன்மையை அடியோடு மறுக்கின்ற ஜே.வி.பியுடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டது படு முட்டாள் தனம் எனத் தமிழ்கள் கருதமாட்டார்கள் என நினைக்கின்றாரா? பதவிக்கு வரவேண்டுமென்பதற்காக உண்மைக்கு திரைபோட முயல்கிறார்.

ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் சந்திரிகா அம்மையாரும் சில நடிப்புத் திறனை வெளிப்படுத்தவே செய்தார். விதவைகளின் கண்ணீரின் வெப்பம் எத்தனை டிகிரி செல்சியஸில் இருக்கும் என்பதை நானும் அனுபவித்தவள் தான்; தந்தையைப் பறிகொடுத்தும் கணவனைப் பறிகொடுத்தும் தாளாத துயரத்தை அனுபவித்தவள் தான் நான்; தமிழரின் பிரச்சினைகளை நன்கு அறிந்த நான் கணவன் குமாரதுங்கவுடன் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் சென்று பிரபாகரனைச் சந்தித்து வந்தேன். நான் அதிகாரத்துக்கு வந்தால் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன் என்று கூறிய சந்திரிகா கண்ணீர் மல்கிய பெண்களின் படங்களைக் காட்டினார், கை, கால் ஊனமுற்ற படையினரைக் காட்டினார், விதவைகளைக் காட்டினார், விம்மிய குழந்தைகளைக் காட்டினார், அரசியல் போராட்டத்தில் பலியாகிய இராணுவ அரசியல் தலைவர்களின் படங்களை பிரசுரித்தார் உற்சாகமான வரவேற்புடன் அரியாசனம் ஏறினார் அம்மையார். நடந்தது என்ன? வையகம் அறியும் இப்போது.

பிரிவினைவாதத்தையும் விடுதலைப்புலிகளையும் தோற்கடிக்க வேண்டுமென்ற அணியினருக்கு பக்க பலமாக இருக்கிறார். ரணில் சொல்கிறார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு இல்லாமல் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என்று. மகிந்த சொல்கிறார் ஒற்றையாட்சியமைப்பு இல்லாமல் வேறுவகையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று.

ரணில் தரப்பு தீர்வுக்கு உடன்பட்டால் மகிந்த தரப்பு அதை எதிர்த்து நிற்கும். .அவருக்கு இவர் மறைமுகமாக ஆதரவு வழங்குகிறார் என்பதே இதன் அர்த்தமாகும். இனப்பிரச்சினைத் தீர்வில் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும் காட்சிகளையே தமிழர்கள் கண்டு வருகின்றனர் என்பதே கடந்த கால வரலாறாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி 1944-இல் தனது கட்சி மாநாட்டில் சிங்கள மொழியே தேசிய மொழியாக வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இருபத்தினான்கு மணித்தியாலத்தில் சிங்கள மொழியை தேசிய மொழியாக்குவேன் என்று 1956-இல் ஆட்சியைப்பிடித்தார் பண்டாரநாயக்க.


1958-இல் தமிழர் பிரதேசங்களில் பிரதேச சுயாட்சிக்கு பண்டாரநாயக்க இணங்கியபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கண்டி நோக்கிய பாதயாத்திரையைத் தொடங்கி இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்.

1965-இல் நியாயமான தமிழ் மொழி உபயோகச் சட்டத்தைக் கொண்டு வந்தது ஐக்கிய தேசியக் கட்சி. இதற்கு எதிராக சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி 1966- சனவரி எட்டாம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவ்வேளை பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிக்குவின் நினைவுச் சின்னம்இன்றும் கொழும்பில் அமெரிக்கத் தூதுவராலயத்திற்கு முன்பாக நிறுவப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# நறுக்கென...

## பிக்குகளின் அரசியல்..!



அரசியலில் இருந்து பௌத்த பிக்குகள் வெளியேற வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்துள்ளார்.

பிக்குகள் அரசியலில் நுழைவதற்கான கதவுகளைத் திறந்துவிட்டது ஜாதிக ஹெல உறுமய எனவும் தெரிவித்துள்ளார்.

உடுவே தம்மலோக தேரர் கூறிய கூற்றை அவர் இப்போதுதான் கூறினாலும் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இதனைத்தான் விரும்புகிறார்கள் என்பது வேறு விடயம்.

இதேவேளை தம்மலோக தேரர் கூறிய கூற்றோடு மேலும் ஒரு விடயத்தைச் சேர்த்திருந்தால் இன்னும் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும். அதாவது அரசியலில் இருந்து பௌத்த பிக்குகள் வெளியேற வேண்டும் அல்லது பிக்குகள் அரசியலிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தால் தேரரின் கூற்று இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

ஏனெனில் அரசியலிலிருந்து இந்தப் பிக்குகள் தாங்களாகவே ஒரு போதும் வெளியேறப் போவதில்லை. எனவே இவர்களை வெளியேற்றவாவது வேண்டும். அரசியலில் பிக்குகளின் தலையீடுகளால் நாட்டில் இனவன்முறையும், இனக்குரோதமுமே அதிகரித்துள்ளன.

இத்தகைய காரியங்களை ஊக்குவிக்கும் வகையில்தான் அரசியலிலிருக்கும் பிக்குகளும் தமது பேச்சுக்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் மக்களின் மனங்களையும்,குணங்களையும் ஆன்மீகரீதியில் நல்வழிப்படுத்தி அமைதிக்கு வழிகாட்ட வேண்டிய இந்தப் பிக்குகள் புரியும் அரசியல் அராஜகம் மிகக் கொடியது.

உலகின் எப்பக்கத்திலாயினும் அரசியல் என்று பார்த்தால் அங்கு சாக்கடைத்தனமே நிரம்பியுள்ளது. அதற்குள் இந்தப் பிக்குகளின் பிரசன்னமானது புனிதமான ஆன்மீக சிந்தனையையுமல்லவா நாசப்படுத்தி விடுகிறது.

இதிலும் குறிப்பாக இலங்கை அரசியலில் ஈடுபட்ட, ஈடுபடுகின்ற பௌத்த பிக்குகளின் செயற்பாடானது என்றும் மதிக்கத்தக்கதாகவோ முன்னோடியானதாகவோ இருந்ததில்லை.

அரசியலில் பிக்குகளின் செயற்பாட்டை ஊக்குவித்த எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கவையே வளர்த்தகடா மார்பில் பாய்ந்த கதையாக கைத்துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார்கள்.

அதன் பின்னர் ஜாதிக ஹெல உறுமயவினரின் செயற்பாடும் எத்தகையது என்பது வெளிப்படையானது.

எனவே தம்மலோக தேரர் எந்த அர்த்தத்தில் கூறியிருப்பினும் உண்மையும் இதுவே. இதேவேளை இதனைக் கூறும் தம்மலோக தேரர் ஒன்றும் அரசியலைவிட்டு வெளியில் நிற்கின்றவர் அல்ல. அவரும் இதற்குள்ளிருந்தே இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

## திருந்தாத ஜென்மங்கள்..!



சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் அதாவது ஈ.பி.டி.பியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்த தமிழ் மக்களுக்கு ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார்.

அதாவது ஜே.வி.பி மற்றும், ஹெல உறுமய போன்றவற்றோடு கூட்டுச் சேர்ந்து தேர்தலில் குதிக்கும் மகிந்த ராஜபக்ஷவை தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டுமாம்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவின் நிபந்தனைகளை ஏற்றிருந்தாலும் ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு என தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தாலும் அது பற்றி தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்திருக்கிறார்.

என்ன அருமையான யோசனை. யார் எக்கேடு கெட்டாலும் என்ன, தமிழ் மக்கள் எவ்வாறு அவமானப்படுத்தப்பட்டாலும் சரிதான், தேர்தலில் ஈ.பி.டி.பி ஆதரிக்கும் மகிந்த ராஜபக்ஷவை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்பதே டக்ளஸ் தேவானந்தவின் அவாவாகும்.

ஏற்கெனவே நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் ஈ.பி.டி.பி கட்சிக்கு வழங்கிய சாட்டையடி போதுமானதாகும். அத்தோடு அந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் இவர்களை நிராகரித்த போதும், இன்னமும் தாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இனவாதிகள் முன் காட்டிக்கொள்ளப் படாதபாடு அத்தனையையும் படுகிறார்கள்.

கொழும்பிலுள்ள இந்த இனவாத சக்திகளும் இவர்களை தங்கள் ஏவலாளர்களாக நடத்துவதில் வல்லவர்களாகவும் அதை இந்தக் கெடுகுடிகள் சிரமேற் கொண்டு செய்வதில் வல்லவர்களாகவும் காட்டி வருகின்றனர்.

ஆனால் எதை எதுவரை செய்வது என்பதும், எதை எதுவரை பேசுவதென்பதற்கும் ஒரு வழிமுறையும் வரையறையும் இருக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் தூக்கி வீசிவிட்டு அடிமைப் பேச்சுப் பேசுவது இவர்களுக்கு எந்த உணர்வையும் ஏற்படுத்தவில்லையா என்பது தெரியவில்லை.

சில வேளைகளில் இவர்கள் தமிழ் மக்களை முட்டாள்கள் என நினைத்து விட்டனரோ என்னவோ. ஏனெனில் தாம் கூறுவதையெல்லாம் தமிழ் மக்கள் கேட்பார்கள் என்று கருதிவிடுகிறார்கள் போலுள்ளது.

இதனைத்தான் டக்ளஸ் தேவானந்த மகிந்த ராஜபக்ஷவுக்காக வக்காளத்து வாங்குவது குறிக்கிறது.

தமிழ் மக்களின் தாயகம், தன்னாட்சி, அவர்களின் கௌரவம் என்பவற்றை எள்ளி நகையாடும் வகையில் தேர்தல் கூட்டையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்குமாறு கோர இவர்கள் வெட்கப்படவில்லையா.

இவர்களுக்கு ஏது வெட்கம். இவர்களுக்கு ஏது இனமானம். இல்லாவிட்டால் இத்தனை காலமாக இனத்தைக் காட்டிக்கொடுக்கும் செயலில் ஈடுபடுவார்களா...?

## வாய்ச்சொல் வீரர்கள்..!



நாட்டின் எந்தப் பகுதியிலும் விமானங்களை இயக்கும் உரிமை விமானப்படைக்கு உள்ளது. இதில் போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என சிறிலங்காவின் விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா கொக்கரித்துள்ளார்.

சிறிலங்காவின் விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லாத வேவு விமானம் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் பறந்து வேவு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் வீழ்ந்து நொருங்கியிருந்ததையடுத்து எழுந்த சர்ச்சைகள் தொடர்பாகவே விமானப்படைத்தளபதி டொனால்ட் பெரேரா இவ்வாறு முழங்கியுள்ளார்.

டொனால்ட் பெரேரா இவ்வாறு கொக்கரிப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் இந்த விமானம் வீழ்ந்து நொருங்கியது தொடர்பாக படைத்தரப்பின் மீது இரண்டு வித விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

ஒன்று-இந்த ஆளில்லாத வேவு விமானம் புலிகளிடம் உள்ள அதிவிசேடமான ஏவுகணை ஒன்றினால் தாக்கப்பட்டிருக்கலாம் அல்லது புலிகளின் விமானம் ஒன்றினால் வழிமறித்து சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்பது.

இரண்டு-புலிகளின் நிர்வாகப்பகுதிக்குள் வேவு விமானம் மூலம் வேவு நடவடிக்கையில் ஈடுபடுவது ஒரு யுத்தநிறுத்த மீறல்தான் என்ற கண்காணிப்புக்குழுவின் அறிக்கை.

முதலாவதன் படி புலிகளால் இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் என விமானப்படை ஏற்றுக்கொண்டால் புலிகளின் போர்த்திறனை ஏற்றுக்கொண்டதாக அமைந்துவிடுவதோடு எதிர்காலத்தில் விமானப்படை சந்திக்கப்போகும் நெருக்கடிகளையும் ஏற்றுக்கொண்டதாக அமைந்துவிடும்.

இரண்டாவதன் குற்றச்சாட்டின்படி இதுவொரு யுத்தநிறுத்த மீறலேஅல்ல என்றே படைத்தரப்பு ஆரம்பம் முதல் வாதிட்டு வருகிறது. இதுவொரு யுத்தநிறுத்த மீறல்தான் என ஏற்றுக்கொண்டால் உப்புச்சப்பில்லாது அரசும், அரச படைகளும் கூறும் இலங்கையின் இறையாண்மை கேள்விக்குறியாகிவிடும் என்பவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டே விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா மேற்படி கொக்கரித்துள்ளார்.

ஆனால் இவை இரண்டு விடயங்களுமே உண்மையானவை. புலிகள் இயக்கத்திடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதும் உண்மை. விமானம் மூலமாக வேவு நடவடிக்கையில் படைத்தரப்பு ஈடுபட்டதும் ஒரு யுத்தநிறுத்த மீறல் என்பதும் உண்மை. இந்த நிலையில் டொனால்ட் பெரேரா வாய் கிழிய கத்தினால் மட்டும் என்ன உண்மை பொய்யாகிவிடுமா?

நாட்டின் எந்தப் பகுதியிலும் விமானங்களை இயக்கும் உரிமை விமானப்படைக்கு உண்டு என வாய்ச்சவடால் விடும் இவர்களின் போர்த்திறன், கடந்த காலங்களில் எவ்வாறு இருந்தது என்பது தெரியாதா?

இவர்களைத்தான் "வாய்ச்சொல்லின் வீரர்" என்று கூறுவதோ தெரியாது.

## கட்டுநாயக்கவில் பெண்ணுக்கு இழைத்த அநீதி..!



சிறிலங்காவில் பெண்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு சர்வதேச தரத்துக்கு உயர்ந்துவிட்டது.

காரணம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள இன்ரபோலின் உதவியைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

சிறிலங்காவின் பொருளாதார அடிமைகளாக வர்ணிக்கப்படும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகவும், மற்றும் வேறுபல தொழிலாளர்களாகவும் சென்று அந்நியச் செலாவணிகளை உழைக்கும் இந்தப் பெண்களுக்கு இந்த நாடுகளில் உரிய பாதுகாப்புக் கிடைப்பதில்லை.

அத்தோடு, உழைப்புத் தேடிச்செல்லும் இப்பெண்மணிகளின் பிள்ளைகளுக்கோ, குடும்பங்களுக்கோ பாதுகாப்புக் கிடைக்காத நிலையில் இந்தப்பெண்களின் குடும்பங்களின் கட்டுக்கோப்புக்களை இழந்து அவர்களுக்கு எஞ்சுவது வெறும் துயரங்கள் மட்டுமே.

ஆனால், இந்த பெண்மணிகள் மூலமாகத் திரட்டப்படும் அந்நியச் செலாவணிகளை மட்டும் குறிவைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனையும்,பெண்கள் தொடர்பான அபிவிருத்தி அமைச்சுக்களும் செயற்படுவது வெளிப்படையானது.

ஆனால் இவர்கள் தேடும் பணத்தின் மீதான பற்றின் அளவுக்கு அவர்களின் பாதுகாப்பு மீதான கரிசனை எதனையும் சிறிலங்காவில் கொள்வதாகத் தெரியவில்லை.

இதேநேரம் சிறிலங்காவில் பெண்கள் தொடர்பாகவும்,சிறுவர்கள் தொடர்பாகவும் மிக விழிப்பாகச் செயற்படுவது போல தங்களைக் காட்டிக்கொள்ளும் சமூக சேவகிகளும்,சேவகர்களும் ஒரு உயர் பாதுகாப்பு வலயத்துள் ஒரு சர்வதேச கவனம்மிக்க இடத்தில் ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக மௌனம் சாதிக்கப்படுகிறது.

இன்னுமொரு வகையில் இது தொடர்பாக இவர்கள் மௌனம் காப்பது அதிர்ச்சிதரும் விடயமல்ல. ஏனெனில் இவர்கள் உண்மையான, நேர்மையான வழியில் தமது சேவை ஆற்றுபவர்கள் அல்ல. அரசு வழங்கும் அற்பசொற்ப சலுகைகளுக்காகவும், இலவச வெளிநாட்டு சுற்றுப்பயணம் மற்றும், உயர் விருந்துகளுக்காகவும் சேவையை விற்கும் கேடிகள் இவர்கள்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அந்தப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதியானது வேலியே பயிரை மேய்ந்த கதையாகும். இத்தகைய செயற்பாடானது வெளிவந்திருப்பது இது மட்டுமே. ஆனால் வெளிவராத எத்தனை அநீதிகள் உள்ளன என்பதை பாதிக்கப்பட்டவர்களை அணுகினால் தெரியவரும்.

இந்த நிலையில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பாக நீலிக்கண்ணீர் வடிப்பவர்களின் அக்கறையும், ஆர்வமும் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தான் வரையறுக்கப் பட்டிருக்கிறதோ என கேட்கத்தோன்றுகிறது.

ஏனெனில் வடக்கு கிழக்கில் அதுவும் தமிழ்ப்பெண்கள் மற்றும் தமிழ் சிறுவர்கள் தொடர்பாக கவலை தெரிவிப்பதும் கண்டனம் தெரிவிப்பது என்ற வாக்கில் இவர்கள் செய்வதெல்லாம் அரசியல் மோசடிகளாகும்.


இதை ஆழமாகப் பார்க்கும்போது உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் அரசியல் தேவைகளுக்காக மட்டுமே செயற்படுகின்றனவா என்பது தெரியவரும்.

வேழினி

## இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களின் ஏக்கம்

# தற்காலிக வாழ்க்கையே நிரந்தரமாக்கப்பட்டு விடுமா..?





"மழைகாலம் என்றால் தம்பி இஞ்ச இருக்க ஏலாது, வெள்ளம் வழிஞ்சி போக வாய்ப்பில்லை. ஏனென்றால் நிலம் அப்பிடியிருக்கு. இந்த நிலையில பெரும் மழை காலங்களில் எப்படித்தான் இருக்கப் போறம் எண்டே தெரியேல்லை.

என மிக வேதனையுடன் கூறினார் வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் குடியிருப்பில் வசித்து வரும் ஒரு முதியவர்.

அவர்களின் உண்மையான நிலைமையும் அப்படித் தான் உள்ளது. வருகின்ற மாதங்கள் மழைகாலம். இக் காலங்களில் பொதுவாக அனைத்து மக்களுமே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த முண்டு. இந்த நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்து இடைத்தங்கல் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும் இடர்களுக்கு முகம் கொடுக்கப் போகிறார்கள் என்பது வேதனை தரும் விடயமாகவுள்ளது.


அதாவது இனி வரப்போகும் பெரும் மழை காலங்களில் தற்காலிக சுனாமி இடைத்தங்கல் குடியிருப்புப் பிரதேசங்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கப்போகிறது. அதில் ஒரு பிரச்சினைதான் இக்குடியிருப்புப் பிரதேசங்களில் மழையால் தேங்கி நிற்கும் வெள்ள நீர் வழிந்தோட முடியாததாகும். காரணம் அதன் தரைத்தோற்ற அமைப்பு.

எனவேதான் பெரும் மழை காலங்களில் பெரும் பாலான இக் குடியிருப்புப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமுண்டு. பொதுக்கட்டமைப்பு மூலம் பன்னாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்று தங்கள் வாழ்வு ஓரளவுக்கேனும் வழமைக்குத் திரும்பும் என்ற நம்பிக்கை அற்றுப் போய் இந்தத் தற்காலிகமான வாழ்க்கை நிரந்தரமாக்கப்பட்டு விடுமோ என்ற ஏக்கம் இம் மக்களிடம் இப்போது காணப்படுகிறது.

அத்தோடு தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப் பட்ட கிடுகுகளிலான கொட்டகைகளில் பெரும்பாலா னவை ஒழுகுகின்றன. இவை இனி வரும் கடும் மழையை தாங்குமா என்ற சந்தேகமுண்டு. மேலும் அத்திவாரமின்றி அமைக்கப்பட்ட சிறு சுவர்கள் என்பதால் அவையும் உடைந்து விடும் நிலை இருப்பதாகக் கூறுகின்றனர்.

எனவே மழை காலங்களில் அம் மக்கள் காலநிலை பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ பெரும் இடர்களை சந்திக்கவேண்டியுள்ளது.

இதைவிட சுகாதார பிரச்சினை என்பது பெரும் பிரச்சினையாக மாறப்போகிறது. இப்போதே பெரும் பாலான மலசல கூடங்கள் உடைந்த நிலையில் கடும் துர்நாற்றத்துடன் நிரம்பிய நிலையில் உள்ளது. மழை காலங்களில் அவையும் நிரம்பிவழிந்து வெளியில் வரும் நிலையே காணப்படுகிறது. இவ்வாறான ஒரு நிலை ஏற்படின் ஒரு குறுகிய பரப்புக்குள் வாழ்கின்ற குழந்தைகள் உட்பட பல நூற்றுக் கணக்கான மக்களின் நிலை மிக மோசமானதாக மாறிவிடும்.







இப்போதே தங்களிடம் நாளாந்தம் வருகின்ற சராசரி நூறு வெளிநோயாளர்களில் இருபது பேரளவில் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின் றார். மருதங்கேணி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திருமதி யூடிரமேஸ் ஜெயக்குமார். அவர் மேலும் கூறுகையில் பெரும்பாலும் முகாம்களில் குழந்தைகள் வெளிப்புரப்புகளில் மலம் சலம் கழிப்பதால் பல்வேறு பட்ட தோல் நோய்கள் ஏற்படுகின்றதாகக் கூறுகின்றார். அத்தோடு மழை காலங்களில் இவ்வாறான நிலைமைகள் தொடரின் ஆபத்தான நோய்கள் அனைவருக்கும் பரவும் நிலையும் ஏற்படக்கூடும் என்கிறார்.

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது மலகூடங்களே. அவை உடைந்த நிலையில் முகம் கொடுக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுவதுடன் பெருமளவான ஈக்களுடன் காணப்படுகிறது.

இதைவிட குளிப்பதற்கென அமைத்துக் கொடுக்கப்பட்ட இடங்களில் நீர் நீண்ட காலமாக தேங்கி நிற்கிறது. இதனால் அவையும் பாசிகள் பூத்த நிலையில் நாற்றத்துடன் காணப்படுகின்றன. அத்தோடு நுளம்பு பெருகும் வாய்ப்பும் உள்ளது.

எனவே ஏற்கனவே சுனாமியால் வந்த மண் ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. அத்தோடு சிறுவர்கள் மலசலம் கழிப்பது பின் அதே மணலில் சென்று விளையாடுவது போன்ற நிலைமைகளால் வயிற் றோட்டம், தோல் நோய்கள், சுவாச நோய்கள் என்பன ஏற்பட்டுள்ளன. இனி அதிகளவில் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. நாளாந்தம் வருகின்ற நூறு நோயாளர்களில் இருபது பேருக்கு வயிற்றோட்டம் என்றால் இது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

| இடைத்தங்கல் குடியிருப்பு | முகாம்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01.கேவில் | -30 |
| 02.கட்டைக்காடு பகுதி II | -114 |
| 03.கட்டைக்காடு பகுதி I | -115 |
| 04.வெற்றிலைக்கேணி (விநாயகபுரம்) | -85 |
| 05.இடைக்காடு | -107 |
| 06.பாடசாலை வீதி ஆழியவளை | -164 |
| 07.கொடுக்குளாய் வீதி ஆழியவளை | -145 |
| 08.கொடுக்குளாய் வீதி உடுத்துறை | -83 |
| 09.10ஆம் வட். உடுத்துறை | -130 |
| 10.9ஆம் வட். உடுத்துறை | -205 |
| 11.வாரிவிட்டான் | -120 |
| 12.அரசடி | -135 |
| 13.மருதங்கேணி | -125 |
| 14.தாளையடி | -80 |
| 15.செம்பியன்பற்று | -120 |
| 16.மாமுனை | -120 |

மேலும் கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்த உலர் உணவுப் பொருட்களும் தரம் குறைந்து வண்டுகளுடன் காணப்பட்டதாகவும் கடந்த தடவை நிர்வாக சேவையின் தலையீட்டின் பின் தற்போது ஒழுங்கான பொருட்கள் வழங்கப்படுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதைவிட இடைத்தங்கல் முகாம் என்றாலே இடைஞ்சல்கள், இடர்கள் நிறைந்த முகாம்களாகவே எண்ணத் தோன்றுகிறது. பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் தாங்கள் அதைச் செய்வதாகவும் இதை செய்வதாகவும் கூறிக்கொண்டு ஆரம்பத்தில் வந்த வேகத்தில் தற்போது இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் தாங்கள் அதைச் செய்வதாகவும் இதைச் செய்வதாகவும் கூறிக்கொண்டு ஆரம்பத்தில் வந்த வேகத்தில் தற்போது இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

ஆறுமாதங்களுக்கே இந்த தற்காலிகக் குடியிருப்புகள் என்று கூறி அதற்கேற்ப அமைத்துக் கொடுக்கப்பட்ட கொட்டகைகள் இவையெனவும் நிலைமைகளைப் பார்த்தால் ஆறுவருடங்களானாலும் இங்கேயே வாழ வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் கவலை கொள்கின்றனர் அம்மக்கள்.

நிறுவனங்களின் விளம்பரப் பலகைகள் மாத்திரம் அழகாகவும் அட்டகாசமாகவும் ஆங்காங்கே காணப்படு கின்றனவே தவிர தங்களது வாழ்வின் அடுத்தகட்டத் தொடர்பில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கை யுமில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு குறித்து சிறிலங்கா அரசிடம் இன்றுவரை எவ்வித ஆக்கபூர்வமான தெளிவான உறுதியான திட்டங்கள் எதுவுமே இல்லை. இந்நிலையில் தான் அம் மக்களின் வாழ்க்கை சென்றுகொண்டிருக்கின்றது.

எனவேதான் உரியவர்கள் உசாராக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள அந்த மக்கள் மழை காலங்களில் வேறு விதமான தாக்கங்களுக்கு, உள்ளாகக்கூடாது. தற்காலிக இடைத்தங்கல் குடியிருப்புகள் பெரும் ஆபத்துகளை நோக்கி நகர்வதாகத் தெரிகிறது. எனவே விரைந்து நடவடிக்கை எடுப்பது காலத்தின் கட்டாயமாகிறது.

சுழியன்

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 28 . 10 . 2005

மின் அஞ்சல :—weekly @ eezhanatham.com

# அரசின் மனித உரிமை மீறல்..!

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் புனர்வாழ்வளித்தல் என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருபத்தெட்டு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் அரச அதிகார எல்லைக்குள் வைத்து அரசின் பாதுகாப்பில் இருந்த சமயமே மிகமோசமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களின் கொலையோடு சம்பந்தப்பட்டிருந்தவர்கள் அரச அதிகாரிகளுமாகும்.

சர்வதேச மனித உரிமை விதிகளின் படி இந்தப் புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் நடாத்தப்படாத துடன் அவர்களுக்கு வழங்க வேண்டிய சட்ட ரீதியான பாதுகாப் பைக் கூட அரசு வழங்கத் தவறியிருந்தது.

விளைவு இருபத்தெட்டு தமிழ் இளைஞர்களின் உயிர்கள் மிக மலினமாக அதிகாரக் கரங்களின் துணையோடு பறிக்கப்பட்டது.

பின்னர் நாடு தழுவிய ரீதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இக்கொலை தொடர்பாக கண்துடைப்புக்காக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் நிறைவேற்றப் பட்டதா?

பின்னர் இந்த குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை சிறிலங்காவின் உயர் நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டதுடன் குற்றமிழைத்த குற்றவாளிகளுக்கு நிரபராதிகள் என்ற அந்தஸ்துடன் விடுவிக்கப்பட்டு தமிழர்களுக்கு நீதி மறுக்கப்பட்ட ஒரு காட்சியை சிங்கள தேசம் அரங்கேற்றியிருந்தது.

அத்தோடு இக் கொலை தொடர்பாக ஆராய்வதற்கென விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்த விசார ணைக்குழு தனது அறிக்கையினை சனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்த போதிலும் அது வெளியிடப்படாமலேயே கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தான் அரசு எந்த விசாரணைக் குழுவின் அறிக்கையை வெளியிடாமலே மூடிமறைக்க முயன்றதோ அந்த அறிக்கையை அதுவும் மனித உரிமை அமைப்பொன்று இப்பொழுது வெளியிட்டு குழிதோண்டிப் புதைக்க முயன்ற அரசின் மனித உரிமை மீறலொன்றை அம்பலப்படுத்தியிருக்கிறது.

அதாவது இந்த விசாரணை அறிக்கையை ஆசிய மனித உரிமை மையம் இரகசியமான முறையில் பெற்று புதுடில்லியில் வைத்து வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையிலே பிந்துனுவெவ படுகொலைச் சம்பவங்களுடன் பொலிசார் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தது குறித்து இவர்கள் மீது அரசு நட வடிக்கை எடுக்காததுடன் பதவி உயர்வு வழங்கியது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிறிலங்கா அரசு தமிழ்மக்களுக்கு இழைக்கும் மனித உரிமை மீறல் தொடர்பாகவும் சிறிலங்காவில் தமிழர்களுக்கு நீதிவழங்குவதில் பாரபட்சம் காட்டும் செயற்பாட்டை அம்பலமாக்கியிருக்கிறது.

அண்மையில் கூட சிறிலங்காவிற்கு விஜயம் செய்திருந்த மனித உரிமை ஆர்வலர் இயன்மார்ட்டினிடம் மனித உரிமை விவகாரங்களில் அரசுக்கு அதிக ஆர்வமிருப்பதாகக் காட்டிக் கொள்ளும் வகையில் மனித உரிமை தொடர்பான செயற்பாடு தொடர்பாக இயன் மார்ட்டினோடு பேசியிருந்தது.

ஆனால் உண்மையான அர்த்தத்தில் மனித உரிமைகளை பாதுகாப்பதிலோ அது தொடர்பான செயற்பாடுகளிலோ அரசு எதிர் மறையாகவே செயற்பட்டு வருகிறது.

இந்த மனித உரிமை செயற்பாடுகள் மீதான அரசின் பாதகமான செயற்பாடுகள் வெளியில் வராமல் அறிக்கை மூடி மறைப்பதிலும் அரசு என்ற வகையில் தனக்கிருக்கும் ராஜீக வழிமுறைகள் மூலமாக தனது பிரச்சாரங்களால் உலகை ஏமாற்ற முனைகிறது.

இந்த நிலையில் தான் தமிழ்மக்கள் சிறிலங்கா அரசிடமிருந்து எந்த விதமான நீதியான செயற்பாடுகளையும் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறு எதிர்பார்ப்பதென்பது வெறும் அபத்தமான செயற்பாடாகவே நோக்குகிறார்கள்.

ஆயினும் அரசினால் வெளியிடாது மூடி மறைக்கப்பட்ட பிந்துனுவெவ படுகொலை விசாரணை அறிக்கையினை ஆசிய மனித உரிமைகள் மையம் வெளியிட்டதன் மூலம் அரசின் சாயம் உலகின் முன் ஒரு முறை கலைந்திருக்கிறது.

இதே வேளை தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன்னும் எத்தனையோ படுகொலைகள் இன்னமும் கண்டு கொள்ளப்படாமலும் விசாரணைகளும் விசாரணை அறிக்கைகளும் மூடி மறைக்கப்பட்டும் இருக்கிறது.

இவற்றையும் உலகம் கண்டு கொள்ள வேண்டும் என்பதோடு இவை தொடர்பாக சர்வதேச மனித உரிமை அமைப் புக்களும் சர்வதேச நாடுகளும் எத்தகைய விளைவுகளை காட்டப் போகின்றன என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் உள்ள ஐரோப்பிய நாடுகளின் தலைமையகம் முன் சுமார் இருபதாயிரம் புலம் பெயர் தமிழர்கள் ஒன்று கூடி ஐரோப்பிய யூனியனின் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை வரவேற்பதில்லை என்ற அறிவிப்புக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

முன் எழுக தமிழ் நிகழ்வின் மூலமாக புலம் பெயர் தமிழர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

இன்றைய யதார்த்தத்தின்படி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது சர்வதேச சமூகம் காட்டும் எத்தகைய செயற்பாடுகளாயினும் அது முழு ஈழத்தமிழ் மக்களைத்தழுவி எடுக்கப்படும் செயற்பாடாகவே தமிழ் மக்களால் இன்று பார்க்கப்படுகிறது.

சிதைப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவே செய்கிறது.

ஆனால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை சிதைக்கும் அடிப்படை நோக்கத்தை வைத்துக்கொண்டு செயற்படுகின்ற நிலையில் அதற்கு இசைவாக உலகம் செயற்படுவதென்பதை ஈழத்தழிழ் மக்களால் என்றும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகத்திடம் அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் நீதியான செயற்பாட்டை மட்டுமே.

இரண்டு வலுமிக்க தரப்புகளாக அமர்ந்து சமாதான முன்னெடுப்புக்களை






பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் சுமார் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட புலம் பெயர் தமிழர்கள் ஒன்று கூடியது என்பது சாதாரணவிடயமல்ல. ஏனெனில் இங்கு கூடிய மக்கள் பல்வேறு நாடுகளில் இருந்தும் சென்றே பிரசல்ஸில் கூடியிருந்தனர் என்பது முக்கியமானதாகும்.

அத்தோடு

தமிழீழ விடுதலைப்புலிகளே. தமது அரசியல் அபிலாசைகளையும் வெளிப்படுத்தி வருபவர்கள் என்பதோடு அவர்களே அதனை முன்னெடுத்து

# பெல்ஜியத்தின் முற்றத்தில் 'எழுக தமிழ்'

பிரசல்ஸில் நடைபெற்ற இந்த எழுக தமிழ் நிகழ்வின் மூலமாக உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தமது தாயகம் மீதான அவாவையும், அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின்மீதும் அதன் தலைமைமீதும் கொண்டிருக்கும் தளராத

வருபவர்கள் என்பதை சர்வதேச சமூகத்தின் முன்பாக எழுக தமிழ் நிகழ்வினூடாக புலம்பெயர் தமிழ் மக்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

தமிழ் மக்களுக்கே உரிய அரசியல் உரிமை என்பது பேரம் பேசுவதற்குள்ளோ விட்டுக்கொடுப்பதற்குள்ளோ இல்லை என்பதில் தமிழீழ

முன்னெடுத்து வருகின்ற சூழ்நிலையில் சமாதானத்தை உலகம் விரும்புவதாக இருந்தால் அதற்கு அனுசரணையான செயற்பாடுகளை உலகம் வெளிப்படுத்துவதை விடுத்து நீதி நழுவிய செயற்பாடுகளில் உலகம் ஈடுபடுவதென்பது சமாதானத்தின் பயணத்தின் பாதையை மாற்றுவதாகவே அமையும்.

**தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது இராணுவ வலிமையினூடாக நிர்வகித்து வரும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வாழும் மக்களுக் குள் மட்டும் வியாபிக்கப்பட்டிருக்கும் தேசமல்ல. அது முழு ஈழத்தமிழ் மக்களுக்கான தேசமென்பதை உலகத்தின் முன் எழுக தமிழ் நிகழ்வின் மூலமாக புலம் பெயர் தமிழர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.**

நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது இராணுவ வலிமையினூடாக நிர்வகித்து வரும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வாழும் மக்களுக்குள் மட்டும் வியாபிக்கப்பட்டிருக்கும் தேசமல்ல. அது முழு ஈழத்தமிழ் மக்களுக்கான தேசமென்பதை உலகத்தின்

விடுதலைப்புலிகள் இயக்கம் உறுதியாக இருப்பது இன்று ஒரு பெரும் பிரச்சினையாக சிங்கள அரசிற்கு இருக்கிறது.

இந்த உறுதியை குலைப்பதற்காக சிங்கள தேசம் தன்னுடைய படை வலுவினாலும், அரசியல் வலுவினாலும் முயன்று கொண்டே இருக்கிறது. இதற்காக படையரீதியா எல்லா ஈழப்போர்களிலும் அது முயன்று தோற்றுப்போயுள்ள நிலையில் அரசியல் ரீதியாக புலிகளின் பலத்தை அல்லது அதன் உறுதியை

இந்த நிலையில் பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்துக்கு முன்பாக எழுக தமிழ் நிகழ்வினூடாக புலம்பெயர் தமிழ்மக்கள் ஐரோப்பிய யூனியன் புலிகளின் தூதுக்குழுக்களை வரவேற்பதில்லை என்ற அறிவிப்புக்கு எதிராக தமது எதிர்ப்பை காட்டியதனூடாக சமாதானத்தின் மீதான தமது பற்றுறுதியையே வலியுறுத்தியுள்ளார்கள்.

— புகழன் —

நேர்நோக்கு

# சந்திரிகாவின் உள்நோக்கம்..!

போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பற்றி அண்மைக்காலத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புகழ்ந்து பேசிவருகின்றார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து அவர் தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்கின்றார் போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் வகையில். ஆனால் அவரது 11 வருடகால சேவைக்குப் பாராட்டுத் தெரிவிக்கவென நடத்தப்படும் கூட்டங்களில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றுகையிலேயே இவ்வாறான புகழாரம் சூட்டப்படுகிறது.

2002 பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட இப் போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாக நாட்டில் சமாதானம் நிலவுவதாகவும் தடைப் பட்டிருந்த வெளிநாட்டு முதலீடுகள் குவியத் தொடங்கியுள்ளதாகவும் அவர் இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்டத்தில் கூறியிருக்கின்றார்.

மேலும் உடன்படிக்கையின் பின்னர் மூளைசாலிகள் வெளியேற்றம் குறைவடைந்துள்ளதாகவும் வெளியேறிச் சென்ற புத்திஜீவிகளும் இராஜதந்திரிகளும் திரும்பிவரத் தொடங்கியுள்ளதாகவும் எட்டு மாகாண சபைகளின் தலைவர்கள், பிரதித் தலைவர்கள் நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு அவர் பாராட்டுத் தெரிவிப்பது போர் நிறுத்த உடன் படிக்கையை ஓரளவேனும் ஏற்றுக் கொள்வதைக் காட்டுகிறதா? என்ற கேள்வி எழுகின்றது. அதாவது அவர் போர்நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ளதாகக் கூறும் நன்மைகள் சிறிலங்காவைப் பொறுத்து உண்மையானவை என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. அவர் கூறுவதை விடவும் பல நன்மைகள் தென்பகுதிக்குக் கிடைத்துள்ளமையை அவராலும் மறுக்க முடியாது.

தென்பகுதியில் இந்தப் போர்நிறுத்தம் நிலைபெறுவது அல்லது புலிகள் மீதான நிழல் யுத்தம், படையினரின் யுத்தநிறுத்த மீறல்கள் மத்தியிலும் தொடர்வது விருப்பத்துக்குரியதாகவே இருக்கின்றது என்பதில் சந்தேகத்துக்கு எதுவுமில்லை. ஏனெனில் வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகள், மறிப்புகள், சோதனைகள் போன்ற இடையூறுகள் இன்மை பொருளாதார வளர்ச்சி என்பன போன்ற பல்வேறு தாம் அனுபவிக்கும் நன்மைகள் குறித்து அவர்களுக்கு மகிழ்ச்சியே.

ஆனால் தமிழ் மக்களின் உரிமை தொடர்பிலேயே சிங்கள அரசியல் வாதிகளும் இனவாதிகளும் கசப்புணர்வு கொண்டவர்களாக இருக்கின்றனர்.



எனினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தப் பாராட்டுகள் மனப்பூர்வமானவை தானா? உள் நோக்கம் அற்றவை தானா? என்பது குறித்து சந்தேகம் கொள்ள வேண்டியே உள்ளது.

ஏனெனில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலும் ஒப்பந்தம் சரிவர அமுலாகி விடக்கூடாது என்பதிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னாலான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டார்.

நோர்வே அனுசரணையாளர்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்ட வேளை ஒப்பந்தத்திலுள்ள விடயங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. அவ்வேளை சனாதிபதி என்ற முறையில் அவருக்கு ஒப்பந்த விடயங்கள் குறித்துத் தெரிவிக்கப் பட்டபோது அதனை குழப்பும் நோக்குடன் ஊடகங்களுக்கு கசியவிட்டார்.

ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட பின் அவர் முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் அதற்கு எவ்வளவு இடையூறுகளை விளைவிக்க முடியுமோ அவற்றையெல்லாம் செய்தார். அதிலும் குறிப்பாக கடற்படையினர் இந்த யுத்தநிறுத்தத்தை முறியடிக்க தூண்டுதலாக கடற்படைத் தளபதி தயாசந்தகிரிக்கு சேவை நீடிப்பும் பதவி உயர்வும் வழங்கி அவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்.

அதேவேளை உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்திருந்த இராணுவம் அவற்றிலிருந்து வெளியேற மறுத்தபோது அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

பின்னர் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்த பின்னர் யுத்தநிறுத்தத்தை படிப்படியாகப் பலவீனப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் பல. புலிகள் மீது ஒரு நிழல் யுத்தத்தை நடத்தியதன் மூலம் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் படிப்படியாகச் சிதைவடையச் செய்தார்.

இப்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் சீரான முறையில் அமுலாக்கம் செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் குறித்து புலிகள் தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளபோதும் அப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான சூழலை ஏற்படுத்தாது புலிகள் மீது வீண்பழி சுமத்துவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான காலமே தேர்தல் நடைபெற இருந்தபோதிலும் நிறைவேற்று அதிகாரம் சனாதிபதியின் வசமே உள்ளது. ஆனால் அதனைப் பயன்படுத்தி போர்நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த எந்த ஒரு முயற்சிக்கும் தயாராக இல்லாத சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாராட்டிப் பேசுவது நிச்சயமாக உள்நோக்கம் கொண்ட ஒன்றே.

அதாவது இப்பொழுது தனது சகாவான மகிந்த ராஜபக்ஷ அவரது வார்த்தைகளையும் மீறி நடந்துகொண்டிருப்பது அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. அத்துடன் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் பண்டார நாயக்க குடும்பத்தின் அரசியல் வாழ்க்கை முடிவடைந்து விடுமோ என்ற அச்சம் அதைவிடப் பெரியது.

இந்நிலையில் மகிந்த வெற்றிபெற்றுவிடாமல் பார்த்துக் கொள்ளும் முயற்சியில் அவரும் அவரது சகோதரர் அநுராவும் ஈடுபட்டிருக்கின்றனர். இதன் காரணமாக அவர் எதிரணி வேட்பாளருக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கிவருகிறார்.

அத்துடன் அவரது 11 வருட ஆட்சிக் காலத்தில் சுமார் ஆறுவருடங்களுக்குமேலாக பாரிய யுத்தமொன்றை நடத்தியதுடன் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக யுத்த நிறுத்தத்தை செயலிழக்கச் செய்த அவர் ஆட்சிக்காலத்தின் இறுதியில் யுத்த நிறுத்தத்தின் நன்மை பற்றியும் சமஷ்டி பற்றியும் பேசுவது சர்வதேச நாடுகளை ஏமாற்றவே.

அவர் உலக அமைப்புகளில் குறிப்பாக ஐ.நாவில் உயர் பதவி ஒன்றைப் பெறும் நோக்கம் ஒன்றைக் கொண்டவராக இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தப் பதவியைப் பெறும் நோக்கத்தையும் மகிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்வதையும் பண்டார நாயக்க பரம்பரையும் சுதந்திரக் கட்சியும் அமைதியை விரும்புபவை போலவும் காட்டுவதையும் நோக்கமாகக் கொண்டதே, போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் புகழ்வதாகும். உண்மையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் அவர் பற்றுறுதி கொண்டவராக இருந்தால் அதனை இவ்வளவு தூரம் சிதைத்திருக்க மாட்டார்.

வேலவன்

---

வாசிப்பு

# கற்கும் நூல்கள் ஆழமான இன்பத்தைத் தரும்

"நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு....."

என்ற ஔவையாரின் மூதுரையிலிருந்து அறிவு எவ்வாறு கிடைக்கிறது. அதன் வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.நூலகம் அறிவை வளர்க்கும் நிலையம். வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்.

உலகத்திலே எழுத்தறிவுடையோர் தொகை எங்கு கூடியதாக இருக்கின்றதோ அங்கு வாசிப்போரின் தொகையும் கூடியதாகவே இருக்கும். ஒரு நூலகத்தை திறக்கும்போது ஆயிரம் சிறைச்சாலைகளை மூடி விடலாம் என்றார் சுவாமி விவேகானந்தர். ஆலயத்தை நிறுவுவதற்கு முன்னர் ஓர் அறிவுக்கூடத்தை நிறுவ வேண்டும் என்றார் அமரகவி சுப்பிரமணிய பாரதியார். இந்த உண்மை நிலையை அறிந்து எம் சமூகத்திலும் நூலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

"இளமையில் கல்" என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. நூல்களையும், நூலகங்களையும் சிறு வயதிலேயே அறிமுகப்படுத்திவிட வேண்டும் என்பதற்காக கல்வி அமைச்சினால் பாடசாலை நூலகங்கள் கட்டியெழுப பப்படுகின்றன.

"எப்பொருள் எத்தன்மை தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" கல்வி கேள்வி மூலம் பெற்ற அறிவை ஆராய்ந்து ஒரு தெளிந்த முடிவுக்கு வருதலே மெய்யறிவு. மெய்யறிவுப்பயிற்சியைப் பெறுவதற்கு வாசிப்புப் பழக்கம் என்பது மிகத் துணைநிற்கின்றது. கற்கக்கற்க அறிவு ஊறும் என்றே கூறப்படுகிறது.அதனால் திருவள்ளுவரும் "கற்றனைத் தூறும்அறிவு" என்றார். உடலுக்கு தேகப்பியாசம் போன்றதே மனத்திற்கு வாசிப்பு. வாசிப்புப் பழக்கமற்ற எந்தச் சமூகமும் முன்னேறியதாக வரலாறு இல்லை . எவரும் வாசிப்புப் பழக்கத்தை பட்டினி போட்டுவிடக் கூடாது. கற்கும் நூல்கள் ஆழமான இன்பத்தை தரவல்லன. அவை "தொட்டனைத்தூறும் மனக்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு" என



கற்கக் கற்க புதுப் புதுப் பொருட்கள் சுவைகளைத் தோன்றச் செய்வன.

இன்று எமது நாட்டில் கிராமங்கள், பிரதேசசபைகள் , பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எனப் பல இடங்களிலும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நூல் நிலையங்கள் பல்கலைக்கழகம் போன்றது. பல துறை சார்ந்த நூல்கள் இருக்கும். பாமர மக்களைக்கூட பாவலராக மாற்றக்கூடிய தன்மை வாய்ந்தது நூலகம்.

எமது சமூக மேம்பாட்டுக்கு அறிவு அவசியமாகின்றது. இந்த அறிவைத் தருபவை நூல்கள். நாம் கற்ற அறிவு 1% தத்துடன் மிகுதி 99% அறிவையும் பல்வகைப்பட்ட நூலகங்களிலிருக்கும் நூல்களை வாசிப்பதன் மூலமே. பெற்றுக் கொள்ளலாம். அறிவைத்தேடி வாசிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். வாசிப்பு பிறவிப்பண்பு அல்ல. அது தொடரும் பழக்கத்தினால் பெறும் பண்பாகும்.சிறு வயதிலேயே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்க வேண்டும்.மாணவப்பருவத்திலே இப்பண்பு வளர்க்கப்படுமேயானால் எமது முன்னேற்றம் உறுதியாக அமையும்.

எமது பிரதேசத்தில் நூலகங்கள் கடமைக்காகத் திறந்து விடப்பட்டிருப்பதாகவே இருக்கின்றன.பிரதேச சபை நூலகங்கள் பெயரளவில் சில நூல்களுடன் காட்சியளிக்கின்றன. அரசு நூலகக் கட்டடத்திற்கு நிதி ஒதுக்காமலும், நூல்களை வழங்கமலும் இழுத்தடிப்புச் செய்வதோடு, எமது பிரதேசத்தில் பயிற்றுவித்த நூல்கள் என்று சொல்லக்கூடிய ஒரு நூலகமும் இல்லையென்பது வேதனைக்குரியதே. தென்பகுதியுடன் ஒப்பிடும் போது நூலக வளர்ச்சி எமது பிரதேசத்தில் 10% என்றே சொல்லலாம்.இதில் அரசைப் பிழைசொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் அரசு எமது கல்வியை முடக்குவதென கங்கணம் கட்டி நிற்கும் வேளை நூலக அபிவிருத்தி என நாம் அரசின் காதில் கூவினாலும் அது அரசிற்கு கேட்கப்போவதில்லை. இந்த நிலையில் எமது பிரதேசத்தில் வாழுகின்ற கல்வி மான்கள் தான் இதை உணர்ந்து செயற்படவேண்டும். எமது பண்பாடு, வரலாறு என்பவற்றை நூலாக்குவதற்கு முனைய வேண்டும். நூலகங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யவேண்டும். "எழுத்தாளனின் நேரங்களில் மிகக் கணிசமான அளவு வாசிப்பிலேயே கழிகிறது. நல்லதொரு நூலை எழுதுவதற்கு நூலகத்தின் அரைப் பங்கு நூல்களின் பக்கங்கள் புரட்டப் படுகின்றன" என்றார் சாமுவேல் ஜோன்சன்.

எதிர்காலச் சந்ததியினர் எழுத்தறிவுள்ளவர்களாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் இருக்குமானால் இன்றே நூலகங்களை உயிர்ப்பூட்டத் துணிவோம். வாசிப்பு மாதமாகிய ஒக்டோபர் மாதத்தில் நாங்கள் நல்ல நூல்களை வாங்கி நூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்வோம். எமது சமூகத்தை புத்திஜீவிகளின் சமூகமாக்குவோம். வாசிப்போம், நினைவில் கொள்வோம், வாழ்வில் உயர்வோம் என வாசிப்பு மாதத்தில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

அகவிழி

# நிகழ்வியல்

நிகழ்வியல் (Phenomenology) இன்றைய சமுதாய மாற்றத்தைத் தத்துவக் கண்ணோட்டத்தில் ஆராயும் ஒரு புதிய கோட்பாடு நிகழ்வியல். "ஒரு மனிதனின் அனுமானங்கள், பாரபட்சக் கருத்துக்கள் மற்றும் தத்துவ நெறிகளைத் தவிர்த்து, அவனது உணர்வுபூர்வமான அனுபவங்களில் தொடங்கும் ஒருமுறை என வரையறுக்கப்படுகின்றது. கிரேக்க மொழியில் 'நிகழ்வு' (Phenomenon) என்றால் தோற்றம் என்ற பொருள் கொள்ளப்படுகிறது. எனவே நிகழ்வியலானது செயல்படுத்துவோருக்கு தோற்றமளிக்கும் வகையில் ஒரு நிகழ்வு ஆராயப்படும்.

சமுதாயம் மாறுகின்றதா? இல்லையேல் கீழ்த்தரமான எண்ணங்களும், கீழ்நிலை நோக்கமாய் வழிமாறிப் பயணிக்கின்றதா? குரோதமும் வன்முறைகளும் சமுதாயத்தையே வழிநடத்துகின்றனவா? கேவலமான சிந்தனைகளைப் போர்வைகளாக்கி நீதிநெறிக்கு அப்பாற்பட்ட கொடும் நினைவுகளையும் கொடூரங்களையும் பிறர்மேல் ஏற்றித்தான் வளர்வதாக வீழ்ந்துகொண்டிருக்கிறதா? நிகழ்கால இவ்வக்கிரப்போக்குகள் எதனை நிலைநாட்டப்போகின்றன? சுயநலமும் சூழ்ச்சிகளும் நிறைந்த மனிதத்தைத் தோற்றுவிக்கப்போகின்றனவா?


மனிதனின் அன்றாட வாழ்வில் ஏற்படும் அனுபவங்கள் ஒரு நிகழ்வாகக் கருத்தில் கொண்டு ஆராயப்படும். சமுதாயத்தின் பொதுத்தன்மை, ஒருவரது தனிப்பட்ட அனுபவங்கள் மூலம் ஆராயப்படுகிறது. இது மனித சமுதாயத்தைப் படிக்க மேற்கொள்ளும் பொதுத்தன்மையுடைய (Objective) அணுகுமுறை. மனிதனுடைய விழிப்புணர்வை ஆராயும் முறை எனவும் கூறப்படுகிறது. இவ்வகையில் எமது உரிமைகள் பற்றிய சிந்தனைகள் முக்கியத்துவமானவை. தமிழர் உரிமைகள் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உரியது. தரக்குறைவாய் எந்த மாண்டமும் உலகில் நினையாத

பெண்கள் உரிமை, அனைத்துப் பெண்களின் உரிமைகள் பற்றிய பிரகடனமாக எழுவது. பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகமா? வன்முறையா? பாதுகாப்பின்மையா? அவற்றுக்கெதிராகக் குரல்கொடுப்பது. பாரபட்சமின்மையையும் நடுவு நிலைமையையும் போதிப்பது. முதியோர் உரிமை என்பது முதியோரின் நலன் கருதியவை. அவர்களின் பராமரிப்பையும் பாதுகாப்பையும் கருத்தில்கொள்பவை. அனைத்து உரிமைகளும் சுயகௌரவம், சுயமரியாதை எனும் தொனிப்பொருளுக்கு அழுத்தம் கொடுப்பவை.

தொழிலாளன் ஒருவனை நியாயத்திற்கப்பாற்பட்ட விதத்தில் துன்புறுத்தியோ, அதே மாதிரி சிறுவனோ, பெண்ணோ, முதியவரோ துன்பியலுக்குள்ளாக்கப்பட்ட வேகத்தில், பெருந்தன்மையான விசும்பல் போக்கில் உரிமை பற்றிய பிரகடனம் தேவையற்றது. ஒவ்வொருவரின் உரிமையும் தனித்துவமானது. கருத்தில் கொள்ளப்பட வேண்டியது. நியாயத்திற்கு விலை பேசுவதற்காய் உரிமைகள் உணர்வுபூர்வமாக எழுந்தவையா?

ஒவ்வொரு தமிழனும் தனது உரிமையை உறுதியாகக் கேட்கின்றான்.

எழுந்தவை. வன்முறைகளும் விபச்சாரங்களும், துரோகங்களும் மலிந்துபோய் உருவாகியவை. இவைதானா உரிமையை உண்மையான தீர்வுகளை நிலைநாட்டுபவை. இக்கேவலமான போக்குகள், சக மனிதனைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவதிலேயே தன் முனைப்புப் பெறுபவை. இவை தூய்மையைப் போதிப்பனவா? தூய்மை என்றால் என்ன? அடுத்தவன் போகின்ற பாதையிலே அநியாயங்களை



அல்பிரட் ஸ்கற்ஸ் நிகழ்வியலை ஆழமாக ஆராய்கிறார். இவர், அன்றாட வாழ்வை ஏற்படுத்தும் மனிதனின் முறைகளில் கவனம் செலுத்துகிறார். மனிதன் ஏற்படுத்திய அன்றாட வாழ்வை அறிந்துகொள்ள அவன் உருவாக்கிய சமுதாய உண்மைகளில் கவனம் செலுத்துகின்றார். சமுதாயக் கட்டமைப்பு என்ற கருத்தானது மனிதனின் தனிப்பட்ட விழிப்புணர்வோடு வேரூன்றியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தன் செயற்பாங்கில் தனித்துவத்துடன் மிளிர்வதுடன் அடுத்தவனைத் துன்புறுத்துவதில் காலம் கழிப்பது எவ்விதத்திலும் முன்னேற்றப்பாங்கை எடுத்துச் செல்ல உதவாது. தூசிகளைச் சுமக்கின்ற மனிதன் அடுத்த மனிதனிடம் தனது தூசிகளைத் திணிப்பதை நிறுத்துதல் வேண்டும். தூய்மை பற்றிய கடும் பிரார்த்தனையில் ஈடுபடுபவர்கள் இத் தூசிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

அடிமைத் தனம் எது? சிறுவர் நலனைக் கருத்தில்கொள்வதா? வயது முதிர்ந்த பெற்றோரைப் பராமரிப்பதா? வன்முறைகளும் கொடூர நினைவுகளும் உள்ளவர்களின் அட்டூழியச் செயற்பாடுகளா? எவை? இல்லையேல் ஆக்கிரமிப்பும் அநியாயமும் நிறைந்தவர்களின் ஆட்சிப்பீடமா? எது? எப்போதும் அடுத்தவனையே சிந்தித்து அவன் வாழ்வையே குறை மதிப்பீடு செய்து தம்மை மிகை மதிப்பாக்குவதாக எண்ணுபவர்கள் எப்போது திருந்துவார்கள்? எப்போது திருத்தப்படுவார்கள்?

ஆனால், மனித உரிமைகள் மகுடம் சூட்டியதுடன் பேச்சற்றுப் போய் விட்டனவா? நாடளாவிய ரீதியில் அரசியல் பிதற்றல்கள் வெறும்வாக்கு வங்கிகளை நிரப்புவதற் காகவோ, நிழற்றுவதற்காகவோ கர்ண கடூரமாக கர்ச்சனை செய்கின்றன. அதனுடன் தமிழர் உரிமைகள், நியாயமான

விதைப்பதா? ஒரு கண்ணை மூடி மற்றக் கண்ணைத் திறப்பதா? தனது கேவலமான வக்கிரமான எண்ணங்களை மற்றவர்மீது திணிப்பதா? வஞ்சகமும், சூழ்ச்சியும் செய்து அவனது வாழ்வைக் கெடுப்பதா? தனது பகட்டாலும் பதவியாலும் பொய்யும் புரட்டும் பேசி ஆட்களைத்

நிகழ்காலத்தில் பல பிழைப்புக்கள் பிழையாக. நடந்து கொண்டிருக்கின்றன. ஊழல்களும், மோசடிகளும், இலஞ்சங்களும் தாராளமாகிப் போய்விட்ட காலம். களவும் கொள்ளைகளும் கண் முன்னே காட்சி அளிக்கும் காலம். பணம் அற்பமானது. அந்த அற்பம் அனைத்து உயிர்களையும் ஆட்டுவிக்கின்றதுபோலும். நிபந்தனைகள் எதற்காக எழவேண்டும்? நேர்மை வழியில் செல்பவனுக்கு நிபந்தனைகள் தேவையற்றவை. ஒரு ஏழையின் வியர்வைத்துளியில் நனைந்த கசங்கிய பணத்தின் பெறுமதி என்ன?

**உலகம் நவீனத்துவங்களால் வளர்ந்திருக்கின்றது. ஆனால் அதில் வாழும் மனிதர்களெல்லோரும் வளர்ந்திருக்கிறார்களா? துன்பங்களும், கொடூரங்களும் மறைந்துவிட்டனவா? அடுத்தவனைக் கெடுக்கும் அற்ப காரியம் தொலைந்து விட்டதா? "ஒரு தாய் மக்கள் நாமாவோம்" என்று ஒற்றுமை பற்றி அழகாக ஆனந்த சமரக்கோன் பாடிவிட்டார் என்பதற்காக, எல்லாம் மறந்தனவா? ஒரு தமிழ் மாணவன். அதே மாணவன் "எங்கள்தேசம் எங்களுக்கு அப்போ வாழ்வோம் ஒரு தாய் மக்களாய்" திருப்பிப் பாடுவான். நியாயமற்ற கோரிக்கைகள் ஒருவருக்கும் உதவாதுதான். தான் தப்பிக்கொள்வதற்காய் எழுந்தவை தனது பாதையால் தன்பாட்டில் செல்பவனுக்கும் குந்தகப் பேச்சு கேவலமான கேடு விளைவிக்கும் நினைவுகள் நிலை பெறுமா?**

நின்று நிலவுகின்ற உரிமை. சனாதிபதிப் போக்கில் அள்ளிவைப்பதும், கிள்ளிவைப்பதும் உலக அரங்கில் எவ்வழியில் வெளித்தெரியினும் சர்வதேசம் முழுவதும் பேசப்பட வேண்டியதாம்.

தொழிலாளர் உரிமை, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நீதி நடைமுறைகளுக்கேற்ப ஊழிய ஊதியத்தையும், ஓய்வு, விடுமுறைகளையும் நலன்களையும் கருத்தில் கொள்ளவேண்டியது. ஒரு தொழிலாளன் இந்நடைமுறைகளினின்று விடுபட்டாலும் அவ் உரிமை உரிமையாகாது. சிறுவர் உரிமை அனைத்துச் சிறுவர்களின் உரிமையையும் கவனத்தில் கொள்வது, சிறுவர் துஷ்பிரயோகம், இடைவிலகல், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் அனைத்து விடயங்களையும் கருத்தில்கொள்வது. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காய் உரிமைக் குரல் கொடுப்பது. அனைத்துச் சிறுவரும் சமன் என்பதை வலியுறுத்த எழுந்தது.

கோரிக்கைகள் எங்கெங்கும் எழுச்சிகளாக உரிமைக் குரலாக வெளித்தெரியக் காண்கின்றோம்.

Gusserl கூறும் பொழுது ,நிகழ்வியல் எவ்வாறு மனிதர்கள் தங்களது உண்மையான உலகை உருவாக்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுகிறது. இவரது நோக்கமானது, செயற்படுபவரின் விழிப்புணர்வின் கட்டமைப்பை அறிந்துகொள்ள வேண்டுமென்பதேயாம். நிகழ்காலத்தில் ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் வாழ்பவர்களோ, அவர்களைப் பின்தொடர்பவர்களோ, தொலைக்காட்சித் தொடர்களில் வரும் தில்லுமுல்லுகள், அநியாயங்கள், குழிபறிப்புக்கள் மூலம் தமது வாழ்வியல் கோலங்களை வடிவமைக்க முற்படுகிறார்கள். நியாயமான அப்பிரச்சினை சார்ந்த தீர்வுகளோ, விழிப்புணர்வோ எள்ளவும் கிடையாது.

திரைப்படங்களோ, மெகாத் தொடர்களோ வெறும் பிழைப்புக்காக

திரட்டுவதா? முகம் தெரியாத ஆள் மோசடியாய் வாழ்வை மோசடி செய்வதா? எது? எது?எது? எவை?

உலகம் நவீனத்துவங்களால் வளர்ந்திருக்கின்றது. ஆனால் அதில் வாழும் மனிதர்களெல்லோரும் வளர்ந்திருக்கிறார்களா? துன்பங்களும், கொடூரங்களும் மறைந்து விட்டனவா? அடுத்தவனைக் கெடுக்கும் அற்ப காரியம் தொலைந்து விட்டதா? "ஒரு தாய் மக்கள் நாமாவோம்" என்று ஒற்றுமை பற்றி அழகாக ஆனந்த சமரக்கோன் பாடிவிட்டார் என்பதற்காக, எல்லாம் மறந்தனவா? ஒரு தமிழ் மாணவன். அதே மாணவன் "எங்கள்தேசம் எங்களுக்கு அப்போ வாழ்வோம் ஒரு தாய் மக்களாய்"திருப்பிப் பாடுவான். நியாயமற்ற கோரிக்கைகள் ஒருவருக்கும் உதவாதுதான். தான் தப்பிக் கொள்வதற்காய் எழுந்தவை தனது பாதையால் தன்பாட்டில் செல்பவனுக்கும் குந்தகப் பேச்சு கேவலமான கேடு விளைவிக்கும் நினைவுகள் நிலை பெறுமா?

ஊழல் வழிகளிலும், போதைவஸ்துக் கடத்தல்களிலும் கேவலமான வழிகளிலும் ஈட்டிய பணத்திற்குப் பவிசு ஏது? கால் மணிக்கும் கணக்கில் கொள்ளப்படாதவைகள், கண்ராவி உயிராகிப் போனவைகள் தம்பாட்டில் ஏதோ பிதற்றிக்கொண்டிருக்கின்றன. புளுத்த புழுவாய் நாற்றமெடுத்த உயிராகிப் போனவையெல்லாம் புளுனிக் குஞ்சுகளாக மாறிவிட்டனவாம். புளுனிக்குஞ்சின் தனித்துவத்தைக் குறைக்கலாமா?

கேடு சூழ் நினைவுகளால் பிறரைக் கெடுப்பதுடன் நின்று விடாமல் தொடரும் திருகுதாளங்களை நிபுணத்துவமாய் நிலை நிறுத்துவதும் கைங்கரியம். நியாயம் கேட்பதற்கு எந்த ஒரு பிரஜைக்கும் உரிமையுண்டு. மூடிமறைத்து கேவலப்படுத்தி பாரபட்சம் செய்வதற்கு ஒருவருக்கும் உரிமையில்லை. அடுத்தவனின் ஆக்கத்திறனை பிரசாரமாக்கி மறு பிரசுரிப்பாய் பறக்க விடும் அநியாயங்கள் எப்போதும் நின்று நிலவும் வரை எப்போது நீதி கிடைக்கும்.

இடையில் இடராக, தமது நலனே குறியாக வாழ்பவர்கள், பெரும் உத்திகளைக் கையாள்கிறார்கள். நாட்டுக்கு ஒருவன் வீட்டுக்கு ஒருவன். கோட்பாடுகள் யாவும் நியாயம் பெற்று நின்று நிலவ வேண்டுமே. அடுத்தவனின் நிர்க்கதியைப் போதிப்பவையா?

ஜார்ஜ் பெர்கர் மற்றும் தாமஸ் லக்கிமேன் தங்களது பகுப்பாய்வை (AnaLysis) தனி மனித அளவை மனித நிகழ்வில் வைத்து தொடங்குகின்றனர். ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் மக்களால் உருவாக்கப்பட்டவை ஆயினும் இவை பொதுத்தன்மை மிக்கதாகவும், சார்புக் கருத்துக்களற்றவையாகவும் இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றனர். நேருக்கு நேர் ஊடாட்டம் அற்ற உறவுகள் அர்த்தம் கொள்ளப்படாதவை எனும் கருத்தை வலியுறுத்துகின்றன. இவர்களது கருத்தின்படி அர்த்தங்கள் பகிர்ந்துகொள்ளப்படாத மாற்றப்படாத முறைமைகளில் அவை பயனற்ற நிலைமைகளை உருவாக்குகின்றன என்கின்றனர்.

மன்னிப்பு எனும் கருத்தாக்கமானது ஒருவர் பிழையின் தவறின் நிமிர்த்தம் கோரிக்கையாக வெளியிட்டு நிற்பது. நியாயம் தராத மன்னிப்பை இடையில் நிற்போர் சந்திவழி சதிர்க்கச்சேரியாக வெளிப்படுத்துவது சரியா? இல்லாத பொல்லாத விசமத்தனமான வ்தந்திகளுக்கு எங்கே தீர்வு? நியாயம் எங்கே? வெறும் ஏமாற்று வித்தை தானா? வணிகம்! எதிலும் வணிகம்! எங்கும் வணிகம்! வியாபாரம் பெருக விளம்பரம் செய்க. ஆனால் தனியொரு மனிதனின் சுயகௌரவத்தை, தன்மானத்தை வியாபாரம் செய்து முடித்தவுடன் மன்னிப்பு தோற்றம்பெற்றுவிட்டதா?

அன்பு என்றால் என்ன? தாய்க்கானது, சகோதரனுக்கானது, சிநேகிதிக்கானது, குடும்பத்துக்கானது.... ஆனால், அதற்கு கொடுக்கும் அர்த்தம் துஷ்பிரயோகத்துக்கானதா? வாழ்வு மோசடிக்கானதா? நினையாத, விரும்பாத, வில்லங்கமான துர்நிலைமைகளுக்கு வழிசமைப்பதில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதா? எது? எது?

தெளிவான கருத்துக்களுடன் நற்சிந்தனைகளை நல் நோக்குக் கருதியவையாக முன் நிறுத்துங்கள். நீதியான சமூகத்தை நிர்மாணியுங்கள். மனித உயிர்களே பெறுமதியற்ற இவ் உலகினிலே மனிதம் மாண்புமிகு உயரிய சிந்தனைகளால் வாழ வழி விடுங்கள். பழிவாங்கல் என்பது அடுத்தவனின் வாழ்வில் குறுக்கீடு செய்து அவன் செல்லும் வழியெல்லாம் பின்தொடர்ந்து கேடு விளைவிக்கும் கீழ்த்தரமான செயல்களுடனும் முற்றுப்பெறலாம்.

பாதிக்கப்பட்டவன் நியாயம் கோரி நிற்பதும், நீதிகேட்டு நிற்பதும் ஒருபோதும் பழிவாங்கல் படலத்துள் உட்புகுத்த முடியாதது. எல்லோரும் ஒரே விதமான நியாயக் கண்கொண்டு பார்க்கப்பட வேண்டியவர்கள். நிகழ்வியல் நோக்கில், நிகழ்காலச் சிந்தனை வெளிப்பாட்டில் தார்மீக நெறிச் சிந்தனைவழி அனைத்து வித கொடுஞ் செயல்களையும், மூடிமறைக்காமல், கண்துடைப்பு நிகழ்த்தாமல் தீர்வுகள் காண்போம். இதுவே எம் அனைத்து உரிமைகளுக்கும் மகுடவாசகமாக அமைந்து விடும்.

**இனியவள்**

# ரணிலை விளங்கிக்கொள்ளுதல்

MBC/MTV ஊடக வலையமைப்பு சிறிலங்காவின் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் பற்றிய மக்கள் கருத்துக் கணிப்பீடொன்றினை நடாத்துகிறது. கருத்துக்களைக் கேட்டறியும் அல்லது கேள்விக்கொத்து போன்ற வழமையிலான முறையிலன்றி செல்லிடப் பேசிகளின் குறுஞ்செய்திச் சேவை (SMS) மூலமாக இந்தக் கருத்துக் கணிப்பு நடாத்தப்படுகின்றது. இந்தக் கருத்துக் கணிப்பில் இரு பிரதான வேட்பாளர்களிடையே பலத்த ஏற்றத் தாழ்வு காணப்படுகின்றது.

கடந்த வார நிலவரத்தின்படி ரணில் 63 விழுக்காட்டுக்கு அண்மையாகவும் மகிந்த ராஜபக்ஷ 29 விழுக்காட்டுக்கு அண்மை யாகவும் இருந்தனர். இதன்படி பார்த்தால் ரணில் விக்கிரமசிங்க தனது பிரதான போட்டியாளரை விடவும் இரண்டு மடங்கு அதிகமான மக்கள் ஆதரவுடன் திகழ்வதாகக் கருதப்படக் கூடும். அவ்வாறெனில் 1994 ஆம் ஆண்டில் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகையில் சந்திரிகா அம்மை யார் பெற்ற 62.3 விழுக்காட்டு வாக்கு களையும் தாண்டி ரணில் முன்னணியில் நிற்கவேண்டும்.

ஆனால் உண்மை நிலைமை என்ன? இதில் இரண்டு விடயங்களைக் கூறுகுறிப்பாக பார்க்கவேண்டும். கருத்துக்கணிப்பு நடத்தப்பட்ட விதம் முதலாவது அடுத்தது கருத்துக் கணிப்பை நடாத்தும் நிறுவனம். செல்லிடப் பேசிகளின் குறுஞ்செய்திச் சேவை (SMS) என்பது ஓரளவு படித்த மற்றும் இளைய சமூகத்தின் மத்தியிலேயே பிரபல்யம் பெற்றுள்ள ஒன்றாகும். உயர் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரும் வியாபார சமூகமும் செல்லிடப் பேசிகளையும் அதன் ஒரு வசதியான SMS ஐயும் அதிகம் அதிகம் பயன்படுத்துகின்றனர். இவ்வாறானவர்கள் மத்தியிலேயே இந்தக் கருத்துக் கணிப்பு நடாத்தப்படுகின்றது என்பதே உண்மை. அப்படிப் பார்த்தால் ஏழை மக்களின் கருத்து இதில் பிரதி பலிக்கவில்லை என்பது வெளிப்படும். அதே வேளை இந்த ஏழை மக்களின் வாக்குத் தளம் என்பது பெருமளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பானதுமல்ல என்பதுவும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.



கருத்துக் கணிப்பை நடாத்தும் தனியார் ஊடக வலையமைப்பான MBC/MTV என்பது சந்திரிகா அம்மையாரால் மிகக் கடுமையாக பெயர் குறித்து தாக்கப்படும் (சில வேளைகளில் தூசிக்கப்படும்) நிறுவனமாகும். இது மும்மொழிகளிலும் ஒளி, ஒலி பரப்புக்களை கொண்டிருப்பதுடன் இலங்கைத் தீவில் அதிகம் சென்று சேரும் இலத்திரனியல் வலையமைப்புமாகும். இன் நிறுவனத்தில் செய்தி இயக்குநராகப் பணியாற்றிய ஒரு ஊடகவியலாளர் ஒருமுறை சென்னார் MTV/MBC உரிமையாளர் மகாராஜா (மகேந்திரன்) ஒரு கிங்மேக்கர். இது எந்தளவு தூரம் உண்மையானது என்பதற்கு அப்பால் மகாராஜா கூட்டு நிறுவனம் கொழும்பு அரசியலில் அவ்வாறான ஒரு பாத்திரத்தை வகிக்க வெகுவூாக முயன்றுகொண்டிருக்கிறது. இந்த நிறுவன ஊழியர் மகேந்திரனின் பின்னே உலகின் பிரதான வல்லரசொன்றும் அதன் உளவு நிறுவனமும் செயற்படுவதாகத் தகவல்களுமுண்டு.

1994 இன் பின்னான நாட்களில் மகாராஜா நிறுவன அதிபரின் மனைவி பத்மா மகாராஜா சந்திரிகா அம்மையாரின் மிக நெருங்கிய தோழியாக இருந்தார். சந்திரிகாவின் பொது நிகழ்வுகளில் அவருக்கு அருகாக காணப்படுபவர்களில் பத்மாவும் ஒருவராக விளங்கினார். ஆனால் பின்னாளில் இந்த உறவு முறிந்து போய், மகாராஜா நிறுவனம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான நிலைப்பாட்டுக்குப் போக நேர்ந்துவிட்டது. இதன் பேறாக 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் போது அதற்காக உழைத்தவர்களுள் மகாராஜா கூட்டு நிறுவனமும் அதன் ஊடக வலையமைப்பும் அடங்கின. பாரியளவில் இதில் உழைத்த பெருந் தலையாக விளங்கியவர் மிலிந்த மொறகொட. பின்னர் அவர் சக்தி மிக்க அமைச்சரானார். பேச்சு வார்த்தைக்கான அரச குழுவிலும் இடம் பிடித்துக்கொண்டார். இவரது அமெரிக்க பின்புலம் பரகசியமானது.

இப்போது உங்களுக்கு நிலைமை விளங்கியிருக்கும் சந்திரிகா அம்மையார் அடிக்கடி கூறுவது போல இலங்கையின் 75 விழுக்காட்டு ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமானவை. அத்தோடு அந்த ஊடகங்களின் உரிமையாளர்கள் கொண்டுள்ள சர்வதேச தொடர்புகள் மிக முக்கியமானவை. இந்த சக்திகளின் தேவைகளை முன்நிறுத்தியே மேற்படி ஊடகங்கள் இயங்குகின்றன. இயங்கவும் முடியும். இவ்வாறான ஊடகங்களின் செல்வாக்குக்குட்பட்ட: அவற்றின் முயற்சியால் பதவியை பிடிக்கும் ரணிலும் இதற்கு விதிவிலக்கல்ல. எனவே ரணிலுக்கென்றொரு சர்வதேச வேலைத்திட்டம் உள்ளது, இடுபணி உள்ளது, அதைத்தான் அவரால் செய்யமுடியும்.

> ரணிலின் அதிஸ்ரமாக சந்திரிகா அம்மையார் எடுத்த அதிரடி நடவடிக்கைகள் அமைந்துவிட்டன. இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு கையாளப் போகிறது என்பதை தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்கு முன்பாகவே அம்மையார் ரணிலின் மூன்று அமைச்சுக்களை பறித்தெடுத்ததன் மூலம் ரணிலை காப்பாற்றி விட்டார் என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் அம்மையார் அவ்வாறு செய்திருக்காது விட்டால் ரணிலின் உண்மை முகத்தை இலங்கை காண நேரிட்டிருக்கும்.

தான் வெற்றிபெற்றால் நாட்டை எந்த திசையில் நகர்த்துப் போவதாக ரணில் சொல்லியிருக்கிறார்? அவரது மக்கள் வேலைத்திட்டம் சொல்வது என்ன? இது தொடர்பாக தமிழ் மக்களின் பார்வை என்ன? அல்லது தமிழ் மக்கள் தொடர்பாக மக்கள் வேலைத்திட்டத்தின் பார்வை என்ன?

இதன் ஊடாகத்தான் நாங்கள் ரணிலை புரிந்துகொள்ள வேண்டும்.

ஒஸ்லோ, ரோக்கியோ பிரகடனங்களுக்கு அமைவாக ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பாராம் ரணில். இந்த ஒஸ்லோ பிரகடனம் என்பது சமஷ்டி முறைக்குள் இனப்பிரச்சினைக்கான தீவைக்காண இணங்குவதை குறிப்பதாகும்.

இதைப் பார்க்கும் ஒருவருக்கு ஒற்றையாட்சிக்குள்ளேதான் தீர்வு எனச் சொல்லும் மகிந்தவை விடவும் ரணில் எவ்வளவோ மேல் என்பதாகத் தெரியக் கூடும். ஆனால் இந்த ஒஸ்லோ பிரகடனம் வெளியான ஒரு சில மாதங்களுக்குப் பின்னர் ஏன் பேச்சுக்கள் முன்னகராமற் போயின? என்பதும் இந்தப் பிரகடனத்துக்கு முன்பாக நடந்த முதற் சுற்றுப் பேச்சுக்களின் பயனாக அமைக்கப்பட்ட சிரான் உள்ளிட்ட உப குழுக்கள் அல்லது கட்டமைப்புக்கள் ஏன் செயலிழந்து போயின? என்பதுவும் கவனத்திற்கு எடுக்கப்படாமலே போய்விட்டன.

விடுதலைப்புலிகள் ஏன் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்த வேண்டும் என கோர வேண்டி ஏற்பட்டது? என்பது கவனமாக நோக்கப்படவேண்டும். பேச்சுக்கள் ஆரம்பமாகிய [illegible] கடற்படைத் தளத்திலிருந்து படிப்படியாக அதிலிருந்த உற்சாகம் வழிந்தோடத் தொடங்கியது ஏன்?

ரணிலின் அதிஸ்ரமாக சந்திரிகா அம்மையார் எடுத்த அதிரடி நடவடிக்கைகள் அமைந்துவிட்டன. இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு கையாளப் போகிறது என்பதை தமிழ் மக்கள் அறிந்துகொள்வதற்கு முன்பாகவே அம்மையார் ரணிலின் மூன்று அமைச்சுக்களை பறித்தெடுத்ததன் மூலம் ரணிலை காப்பாற்றி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அம்மையார் அவ்வாறு செய்திருக்காது விட்டால் ரணிலின் உண்மை முகத்தை இலங்கை காண நேரிட்டிருக்கும்.

ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பின்பற்றிய சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் என்பது மிகக் கவனமாக நோக்கப்பட வேண்டியதாகும். அமெரிக்கா, இந்தியா ஆகிய சர்வதேச, பிராந்திய சக்திகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்து கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிராந்தியத்திற்குள்ளும், சர்வதேச ரீதியாகவும் சுற்றிவளைத்து தனிமைப்படுத்துவதே ரணிலின் நிலைப்பாடு/மூலோபாயமாக இருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதய நிலைப்பாடு கூட ரணிலின் காலத்தில் கால் கோளிடப்பட்ட இந்த போக்கினுடைய கனிதான். கிறிஸ்ரீனா றொக்காவும் ராஜித சேனாரட்ணவும் இது தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் இதற்குச் சான்று.

ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் மென்மையாகவும் இனிமையாகவும் பேசியபடியே குரூரமான திட்டங்களுடன் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது மென்மையான பேச்சைக் கண்டு மயங்குவது என்பது எமக்கான தீர்வை நாமே எழுதிக்கொள்வதாகவே அமையும்.

பு.சத்தியமூர்த்தி



# மண்ணின் மைந்தர்களின் கதை

# நினைவுகளில் அசைபவன்

மாவீரன் 2ஆம் லெப்ரினன் சதீஸ் (மிருணன்) என்றதுமே அவனது துடிப்பும், விவேகமான வேகமும் அவனைத் தெரிந்தவர்களுக்கு நினைவுகளில் வரும்.

எந்தக் கடினமான வேலையைக் கொடுத்தாலும் அதை செய்து முடிக்கும் திறனை எப்படி அவன் பெற்றிருந்தான் என்பது அவனுக்குத்தான் தெரியும். இவனுக்கு அப்போதைய எமது புலனாய்வுப் பொறுப்பாளரான மாவீரன் லெப்.கேணல் உருத்திரா ஆசிரியர் இட்டபெயர் துடியன். அந்தப்பெயர் நாளாக நாளாக மருவி பெரிய இடியாக மாறியது. இடியன் என்றதுமே மூக்குக்கு மேலால் கோபம் வரும் அந்தப் பொடியனுக்கு.

“டேய் இன்றைக்கு இடியன் வாறானாமடா” என்றதுமே எல்லோரும் ஒரே சிரிப்பாய் சிரிப்போம். வந்து என்னென்ன வெடியெல்லாம் வெடிக்கப்போறானோ தெரியாது என்று எமக்குள் சத்தமாகக் கதைத்தாலும் அவன் வந்துவிட்டால் அமைதியாகிவிடுவோம்.

வருகுது... வருகுது.... இதோ இடி வருகுது என்று எம்மை நகைப்பில் ஆழ்த்துவான்.

ஆனால் நாங்கள் யாரும் சொன்னால் மூக்கிலோ பல்லிலோ இரத்தம் கசியும் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தோம். அந்தளவுக்கு அவன் சுட்டிப்பையனாக இருந்தான். எல்லாம் நன்றாகச் செய்வான். எந்தச்சண்டைக்குள்ளும் வன்மையான எதிரியின் பாதைக்குள்ளும் பயமில்லாமல் போய்வருவான். ஆனால் கோபம் வந்தால் பாய்ந்தெழுவான்.

அவனது கோபத்தை தளபதிகளான உருத்திரா ஆசிரியரும், றமணனுமே ஓரளவு கட்டுப்படுத்துவர். ஆனால் தளபதி நியூட்டன் அவர்களைக் கண்டால் பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டு ஒன்றுமே செய்யாத நல்லபிள்ளையாக நடிப்பான்.

அவனது திறமைக்காக தளபதி நியூட்டன் எப்போதுமே அவனைப்பாராட்டி ஊக்கப்படுத்துவதுண்டு.

துன்பமும் வன்மையும் நிறைந்த காட்டுவாழ்க்கை ஒவ்வொரு நாளும், ஆமிக்காரன் கலைக்கக் கலைக்க எமது இடங்களை மாற்றிக்கொள்வோம். அத்தோடு அந்தக்காலப்பகுதியில் எமக்கே அதாவது புலனாய்வுத்துறைக்கே கனமான சுமைகளும், கடினமான வேலைகளும்.

கைதிகள், ஆவணங்கள், அறிக்கைகள், மிக முக்கியமான படையச்சொத்துக்கள், பிரதான தொலைத்தொடர்பு சாதனங்கள் என எல்லாமே எமது பொறுப்பில் இருந்ததனால் இடம்விட்டு இடம்மாறுவ தென்பது மிகத்துயரமானதாக இருக்கும் நிலையிலும் எம்மோடு நிறையவே பொதி களைச் சுமந்துகொண்டு வருவான்.

இதைவிட எமது வேலையின் நிமிர்த்தம் வெளியில் சென்று பெறுமதி மிக்க தகவல்களுடன் வரும்போது நாம் எமது இடத்தை மாற்றியிருப்போம். அதன்போதெல்லாம் தொலைத் தொடர்பு வசதியில்லாமலும் காட்டில் பெரும்பாலான இடங்களில் எதிரி சூழ்ந்த போதிலும் சதீஸும் இடம்மாறி மாறி சிலவேளை பல இரவுகளை தனியாக பல இடங்களில் கழித்து இறுதியாக நாமிருக்கும் இடத்திற்கு பெறுமதியான தகவல்களுடன் வந்து சேர்வான்.

மாவீரன் 2ஆம் லெப்.சதீஸ் புலனாய்வு வேலைக்காகவே பிறந்தவன் என்ற அளவிற்கு தன்னை வருத்தி, எதிரியின் பிரதேசத்திற்குள்ளும், எதிரியின் படை நிலைகளுக் குள்ளும் துரோகிகளின் நிலைகளுக்கும் சென்று வருவான்.

ஏதோவொரு முக்கிய தகவல் திரட்டுவதற்காக சதீஸ் சென்று விட்டான் என்றால் அந்தத் தகவல் நிச்சயமாக விபரத்தோடும் வந்துவிடும் என எல்லோரும் நம்பியிருப் போம். அதேபோல் சிக்கலான தாக்குதல்களில் மிகவும் வித்தியாசமாகத் தாக்கிவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பிவிடுவான். அக்காலத்தில் சதீஸ் நின்று வேலைசெய்யும் மட்டுநகர், காத்தான்குடி, கல்லாறு, ஆரயம்பதி, களுவாஞ்சிக்குடி போன்ற இடங்களில் ஒரு தாக்குதல் நடைபெற்றிருந்தால் அது நிச்சயமாக சதீஸும், அவனது செயற்பாடும் என்பது தெளிவாக இருக்கும்.

மாவீரன் வீரவேங்கை 2ஆம் லெப்.சதீஸ்-மிருணன் (நாகலிங்கம் தவச்செல்வன்/ ஆரயம்பதி, மட்டக்களப்பு) இந்திய இராணுவத்தினரின் தேசவிரோத கும்பல்களிலும் பலமுறை விசாரிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டவன். அவனது ஊரான ஆரயம்பதியிலுள்ள போராளிகள் பலர் இவனுக்கு உறவுக்காரர் என்பதனால் சில சில உதவிகள் செய்ததை யாரோ துரோகிகள் காட்டிக்கொடுத்துவிட்டதனால், தொடர்ந்து பிடிப்பதும் அடிப்பதுமாக சித்திரவதைக்கு உள்ளானான்.

எனவே தொடர்ந்து இப்படியான நிலைமையிலேயே வாழமுடியாது என்பதனை உணர்ந்தவன் போராட்டத்தில் இணைவதே தமது குறிக்கோளாகக்கொண்டு முடிவுசெய்து மூத்தபோராளி மாவீரன் கப்டன் லக்ஷ்மனை தேடித்திரிந்து இயக்கத்தில் இணைந்துகொண்டான். அம்பாறை 07ஆவது பயிற்சி முகாமிற்கு அவனை அனுப்பி பயிற்சி முடிந்ததும் தளபதி நியூட்டனிடம் சொல்லி புலனாய்வுத்துறையில் சேர்த்துக்கொண்டார்.

1989இன் ஆரம்ப காலத்தில் தொடர்ந்த அவனது புலனாய்வுப்பணி தொடரும் போது எங்களது பிரிவின் நம்பிக்கையும் வேகமாகத் தொடர்ந்தது.

ஒன்று இரண்டு மூன்றென சதீஸின் தாக்குதல்கள் தொடர்ந்தன. இவனுக்கு ஏற்றவாறு கெனடியும், கெக்லரும், வோசனும் சிலவேளை இணைந்து கொண்டால் அவர்கள் எடுக்கும் காரியத்தை செய்துமுடித்துவிட்டே வருவார்கள்.

சதீஸ் வியக்கத்தக்க பல தாக்குதல்களை துரோகிகள் மீதும், எதிரிகள்மீதும் செய்திருக்கிறான். ஒரு காலத்தில் மட்டக்களப்பு நகரில் சதீஸ் என்றாலே கலங்கும். எதிரி யாரைப் பிடித்தாலும் டேய் சதீஸ் தெரியுமா... சதீஸ் எங்கே என்றே மாறி மாறி கேள்விகள் கேட்பதுண்டு.

இப்படியாக ஒருநாள் சதீஸும் முகுந்தனும் வாழைச்சேனைக்குள் புகுவதற்கு வாகரைப் பக்கத்திலிருந்து மயிலங் கரைச்சிக்குள்ளாக வந்து கொண்டிருந்தபோது திடீரென எதிர்பாரா நேரத்தில் இவர்கள் நீண்டநாள் தேடித்திரிந்த துரோகி ஒருவன் எதிர்ப்பட்டு விட்டான். பக்கத்தில் நிறையச்சனங்கள். அதைவிட எதிரியின்ர காவல்நிலை யொன்று இந்த நிலையில் அந்தத்துரோகியும் இவர் களைக் கண்டுவிட்டான். இப்போது தாக்குவதென்றால் பிரச்சினை அதிகம். ஆனால் கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு இப்போது சுடாவிட்டாலும் இனி எப்போதுமே சுடமுடியாது.

எனவே முகுந்தனிடம் சொல்கிறான் மச்சான் அலேட்டாகிட்டான் நான் பயந்து ஓடுறமாதிரி ஓடுறன் கட்டாயம் என்னை துரத்துவான் பின்னால ஓடிவந்து நீ சுடு.

நாசீவன் தீவுப்பக்க மாக ஓடி ஒரு சிறு ஒழுங்கைக்குள் புகுந்திட அந்தத் துரோகியும் எதிரிக் குக் கொட்டி கொட்டி என சொல்லிவிட்டு துரத்தினான். சனங்களும் ஓடினர். அப்போது முகுந்தனும் சனத்தோடு சனமாக ஓடி தனது 3.8 ரக கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டே ஓட மக்கள் மீண்டும் எதிர்த்திசையில் கலைந்து ஓடினர். அச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திய முகுந்தன் நிதானமாக மறைந்து நின்று மூன்று சூடுகளைச் சுட்டான். அந்தத்துரோகி கீழே விழவும் பின்னால் எதிரிகள் துரத்தவும் சரியாக இருந்தது. நிச்சயமாக துரோகி கொல்லப் பட்டுவிட்டான் என்பது இருவருக்கும் தெரிய இருவருமாக எதிரிமீது ஓரிரு ரவைகளைச் சுட்டுவிட்டு குச்சொழுங்கைகளுக்குள்ளால ஓடித்தப்பிவிட்டனர்.

இதுபோன்ற எத்தனையோ தாக்குதல்களுக்கு உரித்தான அந்த வீரன் கடமை ஒன்றின் நிமிர்த்தம் பேரூட் பிரதேசத் தில் அமைந்திருந்த எமது பதிமருந்து தோட்ட முகாமி லிருந்து 4.9 பிரதேசத்திற்கு தளபதி றமணன் அவர்களின் முகாமிற்கு சென்றுவந்து கொண்டிருந்தபோது அக்காலத்தில் மிகவும் ஆபத்தான பாதையான உன்னிச்சை நாலரைக்கட்டையில் வைத்து எதிரியை நேருக்குநேர் சந்திக் கிறான். அவனோடு வந்தவர் களிடம் தமது ஆவணங்களை கொடுத்து இருக்கச்செய்து விட்டு இரண்டு குண்டுகளுடன் பாதையை சரிபார்க்க நகர்ந்த போது எதிரியை காண்கிறான் உடனே அவனது இரண்டு குண்டுகளும் வெடித்து எதிரியை நிலைகுலையச் செய்ய பின்வாங்க முயற்சித்தபோது எதிரியின் குண்டுபட்டு அவ்விடத்தில் தாய்மண்ணை முத்தமிட்டான்.

— க.மிரேசு —



சன நூலகம்



# ஒரு வீடு... சுதந்திரமான நடமாட்டம்... எப்போது வரும்..?

சனங்கள் கூட்டங் கூட்டமாக வாழும் இடங்களில் கழிவுகள் ஒரு பெரும் பிரச்சினைதான். இந்த வகையில் சுனாமியால் பாதிப்படைந்த மக்கள் தமது துயரவாழ்வின் ஓராண்டை நெருங்கிக் கொண்டு இருக்கின்றனர். இவர்கள் இன்னமும் ஒரு சுயமான தமக்கேதமக்கு உரியதான சுதந்திரமான வாழ்க்கைக்கு திரும்ப முடியவில்லை. எலி வளையானாலும் தனிவளை வேண்டுமென்பார்கள். தனி வீடு வைத்திருப்போரே கிணற்றடியிலோ, மலசல கூடத்திலோ, நான் நீயெண்டு போட்டி போடுவதுண்டு. அப்படியிருக்க பொதுவாகப் பலர் உபயோகிக்கும் கிணற்றடியும் மலசலகூடமும் எவ்வளவு பிரச்சினையைத்தரும்.

மக்களிடையே இயல்பாகவே பஸ்ரான்ட், ஆஸ்பத்திரி போன்ற இடங்களை தமதாகக் கருதும் குணம் இல்லை. இங்கே வருமா? 'பொதுக்கிணற்றில் ஆக நான்கைந்து குடும்பங்கள் தான் குளிக்கிறார்கள். மற்றவர்களுக்கு கொஞ்சமும் விட்டுத்தருவதில்லை. இதனால் நாம் குளிக்க வெகுதூரம் செல்கின்றோம்' என்றனர் பெண்கள். சில குடியிருப்புக்களில் போதிய இடம் இருந்தும் மலசலகூடங்கள் வீடுகளின் அருகிலேயே கட்டப்பட்டுள்ளன. தவிரவும்,

இந்த புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் இலையானுக்கு கொண்டாட்டமான மாதங்கள். பற்றாக் குறைக்கு கொசுக்களும், நுளம்புகளும் கூடப் பெருகிவரும். இவைகளை நாட்டுப்புறத்தே பனங்காய்க்காலம், 'பனங்காய் தலையில விழுந்திடும் எண்ட பயத்தில இலையான் முழுக்க வீட்டுக்க வந்திடும்'என்று முதியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.இலையான்கள் தொல்லையால் பகலில் சமைக்க முடியவில்லை என்றார் வத்திராயன் முகாமில் ஒரு இளைஞர். சரிவர சுகாதார வசதிகள் கவனிக்கப் படவில்லைஎன்பது சிலரது குற்றச்சாட்டு. முகாமில் இருப்பவர்களின் சாதாரண உரிமைகள் கூட அயலவர்களால் பறிக்கப் படுகிறது. என ஆதங்கப்பட்டார் ஒருவர்.

வத்திராயன், கொக்கிளாய், தாளையடி போன்ற சகல முகாம்களிலும் ஒலிபெருக்கிச் சாதனங்களுடனான வானொலிப்பெட்டியை வைத்திருக்கும் சிலர் மற்றவர்களின் செவிகளைப் புண்ணாக்குவதுடன் அங்குள்ள பிள்ளைகளின் கல்விக்கும் இடைஞ்சல் கொடுக்கின்றனர். மாவட்டத்துக்கே ஒரு வானொலி என்ற கொள்கை நல்லதுதான். அது மற்றவர்களின் உரிமையைப்பாதிக்கலாமா?

இலையான்கள் இருந்து பேசக்கூடவிடவில்லை. இதற்கு மருந்தடிக்கக் கூடாதா? நோய் வந்துவிடுமே,மழைவேறு பிடித்துக் கொண்டதே பயனாளிகளாகவுள்ள இளைஞர்களிடம் சின்னதாக ஒரு நிகழ்ச்சி. செய்து காட்டுங்கள் என்றபோது வந்த ஒரு நிகழ்ச்சி. வைத்தியர் நோயாளி வருத்தத்தில் துடித்துக்கொண்டிருக்க, 'கொஞ்சம் பொறும்', என்று கையமர்த்தியபடியே செல்போனில் தன் நண்பர் யாருடனோ அக்கறையாக உரையாடியமை பற்றியது. மற்றொன்றில் கிராமசேவையாளரிடம் ஒரு கையொப்பம் வாங்க அலையும் கிராம முகாம் வாசியின் துயரம் பற்றியது. துயரம் முடிவில் கோபமாக மாறியது! இந்நிகழ்ச்சி அருமையாகப் பார்வையாளரைக் கவர்ந்த போதுதான் அதன் பின்னுள்ள உண்மை தெரிந்தது.

முகாங்கள் அதிகம், மக்களும் அதிகம்தான். நிறுவனங்களாகப் பொறுப்பெடுத்து நன்கு பராமரிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் இம் முகாம்களுக்கான பிரதான வீதியில் இனி (மழைகாலம்) போவதும் வருவதும் கேள்விக்குறிதான். பலதரப்பட்ட வாகனங்கள் ஓடித்திரியும் பிரதான வீதிகள் ஏன் கவனிக்கப்பட வில்லை.

தமிழீழத்தின் வருமானத்தில் பெரும்பகுதி மீன்பிடியில்தான். ஆனால் மீனவ மக்களுக்கு மட்டும் விடிவேயில்லையா? நேவி வந்தாலும் முதல் தாக்குதல்,ஆமி வந்தாலும் முதல் தாக்குதல், சுனாமி வந்தாலும் முதல் தாக்குதல் என்று எல்லாவற்றுக்கும் முகம் கொடுக்கும் மக்களுக்கு இந்தநிலை. எந்த முகாமிலும் முதலுதவிச் சிகிச்சை நிலையம் இல்லை. பாழடைந்த வீதி வழியாக வெகுதூரம் வைத்திய சாலைக்குப் போக வேண்டும். கண்கண்ட கடவுளாக திலீபன் மருத்துவமனை பேசப்படுகிறது. மற்றப்படி அவர்களுக்குத் தேவை ஒரு தனிவீடு, சுதந்திரமான நடமாட்டம் எப்போது வரும்?



## விசுக்விசுக் விசாலாச்சி

இப்ப என்ன? எல்லாப்பிரச்சினைக்கும் முடிவு கண்டாச்சு. நாங்கள் ஒருநாளும் யுத்த நிறுத்த உடன்படிக்கைய மீறயில்லை. மீறவேயில்லை எண்டவைக்கு திருடனுக்கு தேள் கொட்டின கதையா ஆகிப்போச்சு. கவனமாத்தான் எல்லாங் கொண்டு நடத்தினாலும் ச்சா... பிசகிப் போச்சுது. 'பொடி' கிடைச்சாயெல்லோ 'கொறுணல்' நடத்த. இது ஒரு சாதாரணச் சாவுதான்.

ஆனா அங்கால பண்டார நாயக்கா காலத்தில இருந்து ஓடின கட்சிக்கு 'சகடயோகம்' சகடயோகமெண்டாத் தெரியுந்தானே ஒவ்வொரு பக்கமும் மேலவரும் பிறகு கீழபோகும். பண்டார நாயக்கா காலத்திலயிருந்து அந்தக்கட்சி அப்பிடித்தான். இப்ப ஒரேயடியா "கொட்ட உடதமாய் (கட்டையிலதான்) போல கிடக்கு. இவன் அநுராவக் காப்பாத்த அக்காவுக்கு ஒரேயொரு சான்சுதான் கிடக்கு. அதுகும் நான் நினைக்கேல்ல... சிங்களச் சனம் இவள கதையையும் கேட்டு அங்கலாய்க்குதுகள்தான்.

ஆனா, ஒட்டகத்துக்கு கூடாரத்துக்க இடங் குடுத்திட்டார் மகிந்தர். தெரியுந்தானே ஒட்டகத்தின்ர கதை. பாலைவனத்தில மணல் புயல் அடிக்குது. ஒருதன் கூடாரமடிச்சு, பாதுகாப்பா அதுக்க இருக்கிறான். அப்ப பாவம் ஒரு ஒட்டகம் தவிச்சு ஓடி வந்துது. "சரி கண்ணுக்க மண்ணடியாம தலைய மட்டும் கூடாரத்துக்க வச்சிரு" எண்டான் கூடாரக் காறன்.

ஒட்டகம் சரியெண்டு தலைய மட்டும் உள்ளுக்க நீட்டிச்சுது. பிறகு புயல் அடிக்க, அடிக்க, மெதுவா உடம்பத் தட்டி விடுவமெண்டு தலையத் தூக்கித்திரும்பிச்சுது. கூடாரம் ஒட்டகத்தின்ர தலையோட எழும்பிற்றுது. ஒட்டகத்துக்குக் கூடாரம் குடுத்தவன் கூடாரமும் இல்லாம நிண்டான்.

இது போலதான் இப்ப மகிந்தர் ஜே.வி.பீக்கும் பிக்கு முன்னணிக்கும் கூடாரத்துக்க இடங்குடுக்க அதுகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையே அழிச்சுப் போட்டு மீண்டும் முன்னணிக்க வந்துட்டுது! மூண்டு முன்னணியுமாச் சேர்ந்து கட்சியை மட்டுமில்ல நாட்டையும் பின்னணிக்குக் கொண்டு போய் விடப் போகினம் எண்டதில ஆருக்குஞ் சந்தேகமில்லை.

அப்ப சனாதிபதி சந்திரிகா அம்மணிக்கு வருமே? பார்த்தா, சாட்சிக்காறன்ர கால்ல விழுறதிலும் பார்க்க, சண்டைக்காறன்ர கால்ல விழுறது பரவாயில்லை. எண்டிட்டு ரணிலோட பேச்சு வார்த்தை நடத்தப் போயிட்டா. இனி என்ன பேசினவை எண்டதவிட, சேர்ந்து பேசினவை எண்டதே பெரிய விசயம். இதுக்கு முதலே வீரவன்சர், இனிமேல் சந்திரிகா பிரச்சாரக் கூட்டத்தில பேசவேண்டாம் எண்டு சொல்லிட்டார். மகிந்தர் பாடு மூண்டாந்தாரமா குமரியக் கட்டினவன்ர நிலை. என்ன செய்யிற கைகட்டி வாய் புதைச்சு நிக்கிறார். இதுக்க மதுபான உற்பத்திய அதிகரிக்கப் போகினமாம். நாட்டில இதால வருமானம் பெருகப் போகுது. மதுபான உற்பத்தியிலதானே இப்ப நாடே நிக்குது.

மக்களின்ர உழைப்புத்திறனை விருத்தி செய்து அவயக் கலக்கிக் கலக்கத்தில வச்சிருந்தாயெல்லோ நாங்கள் அமைதியாக் கொண்டு போக. இப்ப எல்லாச் சனத்துக்கும் தெளிவில்லாத ஒரு விசயம் இது தான். இருவது முப்பது வரியமாச் சண்டை பிடிச்சு ஏலாம காசுங்கரைஞ்சு, மனமுங்கரைஞ்சு வெடிச்சத்தங் கேட்டாலே வயித்தால போற நிலையில நிண்ட நாடு, எப்பிடியாவது சமாதானத்துப் பேசி, சமாதானத்தக்காட்டி அதோட சேர்த்துப் பல்லையுங்காட்டி நாலு நாடுகளின்ர உதவியக்கிதவிய வாங்கவெண்டுதானே ஓடுப்பட்டுத் திரிஞ்சவை. இப்பிடி மகிந்தரையாவும் கூட்டாளியளும் எப்பிடிச் சொன்ன சொல்லைக் காப்பாத்தப் போகினம் எண்டு மண்டையக் குழப்பினாலும் தெளிவில்ல.

இப்பிடி அத்தடிப்பட்டுக் கொண்டிருக்க பாழ்பட்ட ஆகாசக் கப்பல் போய் விழுந்து துலைச்சதில ஆராய்ச்சியள் கூடிப்போச்சே. விபத்தா, கொலையா, தற்கொலையா... ஒண்டுமா விளங்கேல்ல யெண்டாலுஞ் சாத்திரிமார் இருக்கினமே. பேப்பரில ராசிபலன் எழுதுறவை, இவயளுக்குள்ள பெரிய சாத்திரியார் ஒராள் இருக்கிறார். முன்ன தீச்சுவாலையில ஆனையிறவு பிடிக்கிறத 'நேரடிரிப்போட்' எடுக்க வந்து காலைக் காப்பாத்திக் கொண்டு ஓடினவர். இப்பவும் தன்ர சாத்திரவல்லமையால கண்டுபிடிச்சுச் சொன்ன ஒரு உண்மை ஒண்டு தெரியுமோ? புலியளட்ட அஞ்சு ஆகாசக்கப்பல் இருக்காம். அதில ஒண்டுதான் வானத்துக்க நிண்டு கொக்கைத்தடி போட்டுக் கொழுவி விழுத்தினதாம். இல்லாட்டி அவயட ஆகாசக் கப்பலுகள் புலியளின்ர பக்கம் வந்தா விழுந்ததேயில்லயாம். ம்... பொடியள் நெச்சாக் கட்டு நாயக்காவிலும் கொளுத்துவாங்கள் தெரியாதே.

# காரசாரம்

-மாயா-

தீபாவளியைக் கொண்டாடுவோம். இந்தத் தினத்திற்கு மதச்சாயம் பூசி, எம்மை நாமே அழித்துக்கொள்ள வேண்டாமே? ஆதிவாசிகளாக மக்கள் வாழ்ந்த காலத்தில், கல்வி அறிவில்லாத காலத்தில், குழந்தை எப்படிப்பிறக்கிறது என்பதை அறியாத காலத்தில், மனிதர்களை உருவாக்கும் சக்தியைக் கொண்ட தாய் தெய்வமாகவே கணிக்கப்பட்டாள். காலம் மாறமாற ஒரு சிலர் தமக்குள் சிந்தித்துச் சிந்தித்து சித்தர்களானார்கள். இவர்களது சிந்தனையே சாஸ்திரங்களாயின. சிற்ப சாஸ்திரம் , வைத்திய சாஸ்திரம், மனையடி சாஸ்திரம் எனப் பரந்து விரிந்து அறுபத்து நான்கு கலைகளாயின. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட நோய்கள் மக்களைப் பீடிக்கின்றதன் மர்மம் தேடப்பட்டது. பொதுவாக புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் நோய்களின் புகலிடமானது. இதை ஆய்வு செய்தால்......

வெயில் காலத்துக்கும் மழைகாலத்துக்கும் இடைப்பட்ட மாதம். வெயில் காலத்தில் தன்னிச்சையாகப் போடப்பட்ட, வீசப்பட்ட கழிவுகள் உலர்ந்தும் உலராமலும் எங்கும் பரவியிருக்கும். மழை, புதுமழை தொடங்கி இவை ஊறிச் சிதம்பி புதுவெள்ளத்துடன் அள்ளுண்டு எங்கும் பரவிப் பாய்ந்து பள்ளங்களிலும் நிலைத்து திடல்களிலும் பரவிச் சுவறிவிடுகிறது. இவற்றைத் தொடர்ந்து இலையான், ஈ, கொசு, நுளம்பு, பக்றீரியாக்கள், பங்கசுக்கள் எனக் கிருமிகளும் வெளிவருகின்றன. பள்ளத்தில் வாழும் ஒருவீட்டில் ஏற்படும் வயிற்றோட்டத்தை, கண்வருத்தத்தை, குலைப்பன் காய்ச்சல் (மலேரியா) எல்லா இடங்களுக்கும் இக்கிருமிகளே காவிச்செல்கின்றன.

இவைபற்றிய தத்துவங்களை, அச்சுக்கலை ஆசிரியர்கள், சுகாதாரப் பிரிவுகள் என வளர்ந்துள்ள இந்தக் காலத்திலேயே, எல்லோரையும் எட்டச் செய்ய முடியாதுள்ளது. அக்காலத்தில் மன்னராட்சி நிலவிய காலத்தில் அரசனூடாகச் செய்யக்கூடிய ஆகக்குறைந்த மக்களை பணியவைக்கக்கூடிய ஒரு ஐதீகக் கதையை அன்றைய அறிஞர்கள் தேடினர். விளைவு 'நரகாசுரன்' தோன்றினான். பெயரைக்கவனியுங்கள் எந்தப் பெற்றாரும் தன்பிள்ளைக்கு 'நரகம்' கொண்ட பெயரைச் சூட்டமாட்டார்கள். 'நரகாசுரன்" என்பது பெருகிவரும் புதுவெள்ளத்தில் பரவிவரும் அழுக்கு. நரகாசுரனை அழித்தது 'கிருஷ்ணர்' 'கிருஷ்ணம்' என்றால் மழை முகில். கிருஷ்ணம் நரகாசுரனை அழிக்கும் நாளை - அதாவது பெருமழை வந்து அழுக்கைக் காவியகற்றும் நாளை நாமும் கொண்டாட வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை அசுரன் விட்டானாம். எப்படிக் கொண்டாட வேண்டும். வீடுகளைக்கழுவி, மெழுகி, சுத்தம் செய்து, அழுக்குகளைக் களைந்து எரித்து, புத்தாடை புனைந்து, நல்ல உணவுகளை உண்டு, கவனியுங்கள். தினமும் கஞ்சிகுடிக்கும் ஏழையானாலும் பண்டிகைக்கென சேமித்துவைத்தோ, கடன் பட்டோ இவற்றைச் செய்வான். உடல் நலத்துக்கு இந்தக்காலத்தில் நல்ல உணவும் தேவை. மனநலத்திற்கு உறவினர்கள் நண்பர்களுடன் கூடிக்கழித்துக் கொண்டாடுங்கள். இத்தினம் வரும் நாள் நிறைந்த அமாவாசை இருண்டநாள் இருளகற்ற ஒளியேற்றுங்கள். இருட்டும் கிருமிகளைப் பெருக்கும். பட்டாசுகளைக் கொளுத்தி கந்தகப்புகையைப் பரப்பி விடுங்கள். இக்கொண்டாட்ட காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும், விரதகாலங்களையும் கவனியுங்கள் 'சுத்தம் சுகம் தரும்' என்றால் எமது சிறுவர்களுக்கே கூடப் புரியும்.

இன்று என் வீட்டில் நோய் என்பதற்காக என் வீட்டை மட்டும் சுத்தம் செய்தால் கிருமிகள் அடுத்த வீட்டில் புகுந்து கொள்ளும். அவர்களும் வேறொரு நாளில் சுத்தம் செய்தால் மீண்டும் கிருமிகள் மற்ற வீடுகளுக்கு பரவும். ஒரே நாளில் , எல்லோரும் கூடிச் சுத்தம் செய்து ஒரே நாளில் கழிவுகளை அகற்றும் போது நன்மை விளையும் என்பதை நம்பித்தான் கல்வியறிவற்ற மக்களுக்கு நரகாசுரன் கதையை ஒரு குறியீடாகக் கற்பிக்க வேண்டிய தேவை நம் முன்னோருக்கு ஏற்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை. பண்டிகைகள், கொண்டாட்டங்கள் எல்லாமே காரணத் தோடுதான். பகுத்தறியும் தன்மை மனிதனுக்கு வேண்டும். முதலில் முன்னோர் எல்லாம் மூடர்களல்ல என்று புரிந்து கொள்ளவேண்டும். இடையே எமக்குள் புகுந்த, சாதி, மத பேதங்களை அகற்றி நல்லவற்றைக்கொள்ள ஏன் மறுக்க வேண்டும்.



இந்தியாவின் மும்பாய், காஞ்சிபுரம், பெங்களூர் போன்ற பிரபல ஆடை உற்பத்தி நிறுவனங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா வயதினருக்குமான நவீன ஆடைத்தெரிவுகளுக்கு....

யாழ்நகரில்.... என்றும் மலிவு விலையில்
நிறைந்த ரகங்கள் நிகரில்லா தரங்கள்

# கிறீன் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி,
திருநெல்வேலி.

(சி-12982)



## தீபாவளிப்பண்டிகையை எம்முடன் கொண்டாடுங்கள்...!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜவுளித்தெரிவுகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான இடம்



# ராசி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ஆடவர் மகளிர்
சிறுவர்களுக்கேற்ற
ஆடை வகைகளை
பெற்றுக்கொள்ள
கைராசி நிறுவனம்

யாழ்நகரில் உங்கள் விருப்பத்தெரிவுக்கு
கைராசியான இணை நிறுவனங்கள்

# நல்லி சில்க்ஸ்

121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 5573



(சி-12983)





முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலையின்
தீபாவளி பண்டிகைக்கால மாபெரும் சிறப்புத்தள்ளுபடி

சுபமுகூர்த்தப்பட்டுப்புடைவைகள்
சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைவகைகள்
அழகுசாதனப்பொருட்கள்
மற்றும் சகல விதமான ஆடைத்தெரிவுகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பெரியவர்கள். குழந்தைகளுக்கான அனைத்து தைத்த புடைவை வகைகளுக்கும் சாறி வகைகளுக்கும் சிறப்புத்தள்ளுபடி வழங்கப்படும்.



# முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை

யோகபுரம்.மல்லாவி. யாழ்சாலை,கிளிநொச்சி.

(சி-12984)

சுபமுகூர்த்தப்பட்டுப்புடைவைகளின் அரங்கம்




அனைத்துத்தரப்பினருக்கான சேட், ரீசேட், கோட் சூட் வகைகள், டெனிம்,
சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணி வகைகள்,
ஜம்பர் வகைகள், பட்டு சாறி வகைகள், பேபி கவுண் வகைகள்,
ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், சல்வார் கமீஸ் வகைகள்,
கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகளை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

(சி-12715)

தீபாவளி பண்டிகைக்கால
அதிரடி மலிவு விற்பனை!

# மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10, மின்சார நிலைய வீதி, பெரியகடை,
யாழ்ப்பாணம். (மலாயன் கபே முன்பாக)
தொ. பே:021-4590174



(சி-12985)



தீபாவளி பண்டிகைக்கால மாபெரும் மலிவு விற்பனை
சுபமுகூர்த்தப்பட்டுப்புடைவைகளின் மகத்தான தரமான
தெரிவுகளுக்கு நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்
மகா சில்க்ஸ்
பியூட்டி சில்க்ஸ்
32, 40A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
69, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7359
தீபாவளியை முன்னிட்டு
31-10-2005 வரை
மலிவு விற்பனை
நடைபெறும் என்பதனை
அறியத்தருகின்றோம்.
கவுஸ் ஒவ் செலெக்ஷன்
இல:75B, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-12980)




தீபாவளிப்பண்டிகைக்கால விற்பனை!
இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய பட்டுப்புடைவைகள்,நவநாகரீக நங்கையர் விரும்பும்
ஆடைவகைகள், சிறுவர்கள், பெரியோர்களுக்கான ஆடைவகைகளைப்பெற்றுக்கொள்ள...
லிட்டில் இந்தியன் பெஷன்
இல:77,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-12979)




தீபாவளிப்பண்டிகைக்கால சிறப்புத்தள்ளுபடிவிற்பனை!
ELAVARASI JAFFNA
சேலைகளின் சோலை
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்ஜியம்
இளவரசி சேலைச்சோலை
இல:57, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே:021-222 2503
(சி-12978)





தீபாவளிப்பண்டிகைக்கால சிறப்பு விற்பனை!
சகல விதமான ஆடைத்தெரிவுகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்
புடைவை மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்
இல:21(94), சிறப்பு அங்காடி, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:021-222 2826




யாழ் நகரில் புதுப்பொலிவுடன் உதயம்...
திருமணப்பட்டுப்புடைவைகளின் கைராசி நிறுவனம்
அனைத்து வகையான புடைவை வகைகளுக்கும்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இல:105, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:021-222 6953




அனைவருக்கும் அன்புகலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பட்டுச்சாறி வகைகள் ஸ்கேட் அன் பிளவுஸ்
கவுன் வகைகள்சல்வார் கமீஸ்வகைகள்
ஆகியவற்றை ஒரேஇடத்தில்
பெற்றுக்கொள்ள
DRESS POINT
ட்றெஸ் பொயின்ட்
இல:-23, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்
SM Graphis
(சி-12981)



## சிறுகதை

# தூரத்துத் தண்ணீர்

முன்பெல்லாம் பிரகலாதனை "இவர் அருணாசலத்தாரின் மகன்" என்று தான் எல்லோரும் அறிமுகப் படுத்துவார்கள். ஆனால் இப்போ எல்லாரும் அருணாசலத்தாரை அறிமுகம் செய்வதே "இவர் பிரகலாதனின் அப்பா" என்று தான் அந்தளவிற்கு பிரகலாதன் கல்வி, ஒழுக்கம், பண்பு என்பவற்றில் சிகரமாகி விட்டான். அருணாசலத்தாரே தனது மகனின் அபார வளர்ச்சியும் அறிவுத் திறனையும் கண்டு பிரமித்துப்போவதுண்டு. மகனின் வளர்ச்சியில் எத்தனை நிறுவனங்கள், பாடசாலைகள் தனிமனிதர்கள் செல்வாக்குச் செலுத்தியிருக் கிறார்கள் என்று சிந்திப்பதுண்டு.

இருந்தபோதும் தனது மகனின் இந்த உச்ச வளர்ச்சிகண்டு தினம் தினம் மகிழ்ச்சியில் குளிப்பார். மகனின் தொலைபேசி அழைப்பிற்காக அவர் காத்திருப்பதில்லை. நிச்சயமாக தினமும் மாலை எட்டு மணிக்கு அவனின் தொலைபேசி அழைப்பு வரும். அதற்கிடையில் அவர் ஏனைய அலுவல்களை முடித்துக்கொண்டு குறித்த நேரத்துக்கு வந்து தொலைபேசி முன் அமர்ந்துகொள்வார்.

சொன்னதுபோலவே மகனின் அழைப்பு வரும். இருவரின் உரையாடல் தொடங்கிவிடும். உரையாடல் உச்சக் கட்டத்துக்குப் போய் அவர்கள் தொலைபேசியில் உரையாடுகின்றோம் என்பதை மறந்து நேரிலே நின்று உரையாடுவதுபோல் உரை யாடுவார்கள். பிரகலாதன் தான் கடமையில் ஈடுபடும்போது நடந்த சம்பவங்களை சுவாரஷ்யமாகக் கூறுவான். அருணாசலத்தார் அறிவுறுத்தலும் வழிகாட்டலும் வழங்குவார். தினமும் தாங்கள் நெடுந்தூரத்திற்கப்பால் இருக்கின்றோம் என்ற உணர்வே இல்லாமல் உரையாடல் நடைபெறும்.

பெரும்பாலும் சமையல் அலுவலில் நிற்கும் பிரகலாதனின் தாயும் இடையிடையே வந்து கணவனிடம் தொலைபேசியைப் பறித்து கதைப் பதுண்டு. அவரின் உரையாடலில் அதிகம் "என்ன சாப்பிட்டனி அப்பு" என்ற வினாவே இருக்கும். என்ன தான் மகன் சுகாதார ரீதியில் அறிவு பெற்றிருந்தாலும் தாயின் உணவுக் கட்டுப்பாட்டுப் பட்டியல் அவன் மீது திணிக்கப்படும். அது அவர்களின் அன்புப் பிணைப்பு.

தினமும் சுறுசுறுப்பாக இயங்கும் அருணாசலத்தாரின் மனைவி இரண்டொரு நாளாய் தனது செயற்பாட்டில் சோர்வு காணப்பட்டதை உணர்ந்தாள். இருந்தும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் வழமையான வேலைகளில் ஈடுபடுவதற்கு 'பனடோலை' துணைக் கழைத்துக்கொள்வாள். தனது சோர்வு இப்போ எல்லைமீறிவிட்டது. இனிமேலும் தனது கணவருக்கு மறைக்க முடியாது என்பதை உணர்ந்த அருணாசலத்தாரின் மனைவி கோகிலாம்மா.

"எனக்கேதோ உடம்புக்கு ஒருமாதிரி இருக்கு" "ஒரே களைப் பாய் இருக்கு" அருணாசலத்தார் திகைத்துப்போனார். "ஏன்..! என்ன..! செய்யுது" "எப்பகூடி இப்படியிருக்கு"

"இப்ப ஒரு கிழமையா இப்பிடித் தான் இருக்கு"

"அப்ப ஏன் இவ்வளவு நாளும் சொல்லேல்ல" அருணாசலத்தார் வேதனையால் சினத்தார். "கொஸ்பிற்றலுக்குப் போவமே..." என்று கேட்டவர் மனைவி கோகிலாவின் பதிலை எதிர்பார்க்காமல் கார்க்காரனிடம் புறப்பட்டார்.

அப்போது நேரம் எட்டுமணி இரவு. தொலைபேசி மணி நிலைமை புரியாமல் அழைத்தது. முதல் முதலாக இந்தநேரம் தொலைபேசி [illegible]ாது அருணாசலத்தார் சினந்தது இப்போதுதான்.

"பிரகலாதன் தான் எடுப்பான் அவனிட்ட எனக்கு வருத்தம் எண்டு சொல்லிப்போடாதேங்கோ. பிறகு அவன் யோசிச்சு கவலைப்பட்டுக் கொண்டிருப்பான்" என்று தனது நோய் வேதனையை யும் பொருட்படுத்தாது கூறினாள் அருணாசலத்தாரின் மனைவி கோகிலாம்மா.

அருணாசலத்தார் தொலை பேசியை எடுத்தார். "ஹலோ" "ஹலோ" "ஹலோ நான் பிரகலாதன் பேசுறன்" அப்பாவே சொல்லுங்கோ என்று கூறியவன் அப்பாவின் பக்கமிருந்து கதை குறைவாகவே வந்ததால் தானே கதைத்தான். அருணாசலத்தார் "ஆஙா" "ஆஙா" "பேந்து" போன்ற வார்த்தைகளை மட்டும் இடையிடையே உதிர்ந்துகொண்டிருந்தார்.

"இண்டைக்கு அப்பா ஒரு பெரிய ஒப்ரேசன் வெற்றிகரமாய் முடிச்சிட்டன்"

"ஆஙா என்ன ஒப்ரேசன்" இது தந்தை அருணாசலத்தார்.

"அதப்பா ஒரு வெள்ளைக்கார னுக்கு குடலில் ஒரு குழாய் ஒன்று பழுதடைஞ்சு போச்சு. அதை வெட்டி அகற்றிப்போட்டு அதற்கொரு செயற்கைக்குழாய் பொருத்தவேண்டியிருந்தது. இண்டைக்கு ஆறு மணித் தியாலம் மினக்கட்டு வெற்றிகரமாய் பொருத்தியாச்சு. இப்ப பூரணமாய் வேலைசெய்யத் தொடங்கிற்றுது நல்ல சந்தோஷமப்பா எனக்கு"

"நல்லது கெட்டிக்காரன், எனக்கும் சந்தோசமாயிருக்கு. வாழ்த்துக்கள்" இது தந்தையின் பதில்.

பிரகலாதனுக்கு தந்தையின் வார்த்தை இப்படி உணர்வின்றி துண்டு துண்டாக இருப்பதை உணர்ந்துகொண்டான். இருந்தும் அதை பெரிசாக எடுக்கவில்லை. தொடர்ந்தும் பேசினான்.

"ஆரம்பத்தில அப்பா அந்த வெள்ளைக்காரனுக்கு நான் அதாவது ஒரு கறுப்பினத்தவன் ஒப்ரேசன் செய்யிறது விருப்பமில்லை. ஏனெண்டா என்ர திறமையில நம்பிக்கையில்லை. ஒரு மாதிரி சம்மதிச்சினம். ஒரு வெள்ளைத்தோலை கறுப்புத் தோல் வெட்டுறதெண்ட சங்கடம் இருக்கும்தானே. ஆனால் பிறகெல் லாம் வெற்றிகரமாய் முடிந்தவுடன் எல்லாருக்கும் வலு சந்தோசம். பிறகு வந்து மாறி மாறி கைதந்திச்சினம். தங்கட வீட்ட விருந்துக்கு அழைச்சினம். அவையின்ர சந்தோசத்தைப் பார்க்கோணும் அப்பா..." "வேற என்னப்பா கதையுங்கோவன். கதைக்காமல் இருக்கிறியள்" என்று கூறியவன் மீண்டும் அவனே தொடர்ந்தான். இப்ப கன வெள்ளைக்கார குடும்பத்தினர் என்னைத் தங்கட குடும்ப வைத்தி யராய் தெரிவுசெய்திருக்கினம். அவை வீட்டில இருந்து போன் எடுத்தினம் எண்டா நான் அடுத்தநிமிசம் அங்க நிற்பன்.

மகன் தனது பெருமைகளை விளக்கிக்கொண்டிருந்தான்.

ஆனால் அருணாசலத் தாருக்கு அதை ரசித்துப் பெருமைப்பட இப்போ நேரமில்லை. "சரியப்பு கனநேரமாய் கதைக்கிறாய். நானும் ஒருக்கால் வெளியில ஒரு அலுவலாய் போய்வர வேணும். பிறகு கதைப்பம்"

தந்தையின் வழமைக்கு மாறான பேச்சை உணரமுடியாமல் "சரியப்பா நான் பிறகெடுக்கிறன்" தொலைபேசியை வைத்த அருணாசலத்தார் மனைவி வேதனையால் துடிப்பதையும் சத்தம்போடாமல் அடக்கிக் கொள்வதையும் வேதனையுடன் உணர்ந்துகொண்டு கார்க்காரனிடம் புறப்பட்டார்.

இருளைக்கிழித்து இரு கண்களினூடாக ஒளியைப் பாய்ச்சிக்கொண்டு அந்தக் கார் வேகமாக வந்து நின்றது. கோகிலாம்மா வேதனை தாங்கமுடி யாமல் அலற ஆரம்பித்துவிட்டாள். அதை தாங்க முடியாமல் அருணா சலத்தார் ஒருவாறு சமாளித்துக் கொண்டு கார்க்காரனின் உதவியுடனும் மனைவியைத்தூக்கி காரில் ஏற்றிக் கொண்டார். மனைவியின் தலையை தனது மடியில் வைத்துக்கொண்டு ஆறுதல் கூறிக்கொண்டிருக்கக் கார் அந்த ஊர் மருத்துவமனைநோக்கி விரைந்தது. அமைதியாக இருந்த அந்த இரவை கார்ச்சத்தமும் கோகிலாம்மாவின் முனங்கல் சத்தமும் குழப்பியது.

அந்த மருத்துவமனை ஊழியர்கள் அருணாசலத்தாரின் உணர்வை அவசரத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அந்த நகரும் கட்டிலைத் தள்ளிவந்து கோகிலாம்மாவை ஏற்றி உருட்டிச் சென்றனர். அருணாசலத்தார் படபடக் கின்றார். தாதியர்கள் எவ்வளவோ வேகமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த போதும் அருணாசலத்தாரின் மனதின் வேகத்திற்கு அவர்கள் ஆடிஅசைந்து செய்வதுபோல் காட்சியளித்தனர். சினந்து கொண்டார். ஏதோ ஏதோ எல்லாம் மாறி மாறி நடக்கிறார்கள். எதுவும் புரியாமல் ஏங்கியவாறு நின்றிருந்தார்.

"அவவுக்கு உடனடியாக ஒரு ஒப்ரேசன் செய்யவேணும். அதுக் குரிய டொக்ரர் இப்ப இல்லை. அவர் கிழமையில் இரண்டு நாளுக்குத்தான் இஞ்ச வருவார். நீங்க பெரியாஸ்பத்திரிக்குத்தான் கொண்டுபோக வேணும். உங்களிட்ட வசதியிருந்தா நீங்க கூட்டிக்கொண்டு போங்கோ... சீச்சீ இது சொல்லவே இவ்வளவு நேரம் ஓடித்திரிஞ்சனிங்கள்" உள் மனம் நினைத்தபோதும் வெளியில் சொல்லவில்லை அருணாசலத்தார். மீண்டும் அதேகாரில் அந்த நீண்ட பயணம் தொடங்கியது. கோகிலாம்மாவின் முனங்கல் வாகன அசைவிற்கேற்ப கூடிக்குறைந்தது. வேறெந்த வாகனமும் இல்லாத அந்த நெடும் வீதியில் தட்டத்தனியாக இந்தக் கார்மட்டும் சென்றுகொண் டிருக்கிறது. அருணாசலத்தாரின் மனதின் வேகத்திற்கு அந்தக் காராலும் ஈடுகொடுக்க முடியவில்லை. அவருக்கு அது ஊர்ந்து ஊர்ந்து செல்வதுபோலவே தென்பட்டது.

"ஸ்ஸ்..." கிறி-கிறி... ஏதோ தடல்புடலான சத்தம் காரின் அடிப்பாகத்தில் ஏதோ சங்கடம் நடந்துவிட்டதென உணர்ந்தார்கள். ஓரமாய் நிறுத்தப்பட்டது கார். அதன் பின் சக்கரம் தனது மூச்சை இழந்திருந்தது. அருணாசலத்தாருக்கு பயம் ஏற்படத் தொடங்கிவிட்டது.

"அது பிரச்சினையில்லை. நான் டப்பெண்டு சில்லை மாத்திருவன்" சொல்லியபடியே காரியத்தில் இறங்கினார். அருணா சலத்தாருக்கு ஆரை நோவதென்று தெரியாமல் தனது ஊர் மருத்துவ மனையைத் திட்டினா[illegible]

"அவசரத்துக்கு ஒரு [illegible]ர் இல்லை. கிழமையில இரண்டுநாள் தானாம் வருவார். அந்த இரண்டு நாளைதான் மனுசருக்கு வருத்தம் வரவேணுமாக்கும். மற்றைய நாளிலை வந்தால் என்ன செய்யிறது..." தனக் குள்ளேயே திட்டித் தீர்த்துக்கொண் டார்.

ஒருவாறு கார் திரும்பவும் உயிர்பெற்று ஓடத் தொடங்கியது. யாழ்.போதனா வைத்தியசாலை இரவென்றும் பாராது அவரை வரவேற்றது. சக்கரப்படுக்கை கோகிலாம் மாவைச் சுமந்தவாறு மருத்துவமனைக்குள் சென்றது. பின்னால் அருணாசலத்தார். நோய் பரிசோதிக்கப்பட்டு நோயின் வேகத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அருணாசலத்தாரிற்கு என்ன ஏது என்று விபரமாக அறியத்தான் ஆசை. ஆனால் அவருடைய ஆவலை மருத்துவர்கள் நிறைவுசெய்யவில்லை. அவர்கள் தம் வேலையில் கண்ணாக இருந்தனர். மனங்கேட்காமல்

"டொக்ரர் எப்படியிருக்கு" பணிவாகக் கேட்டார். டொக்ரர் முகத்தில் மலர்ச்சியில்லாமல்

"கொஞ்சம் நேரத்துக்குக் கொண்டுவந்திருக்கலாம்" என்று கூறிவிட்டு "இன்று மாலை இரண்டு மணிக்கு ஒப்ரேசன். ஒண்டும் குடிக் கக்கொடுக்கவேண்டாம்" கூறிவிட்டுப் போய்விட்டார்.

அப்போதுதான் நேரத்தைப்பார்த்தார் பொழுதுவிடிந்து ஏழுமணியாகி விட்டது. தாம் மருத்துவமனைக்கு வந்துசேரும்போது விடியத்தொடங்கிவிட்டதென்று.

"சீச்சீ எமதூர் ஆஸ்பத்திரியில டொக்ரர் இருந்திருந்தால் இப்ப எல்லாம் ஒப்ரேசன் செய்து முடிந்திருக்கும். டொக்ரரின் பேச்சும் அவருக்குப் பயத்தை அதிகரித்தது. "சீச்சி ஏன் பின்னேரம் ரெண்டு மணி மட்டும் வச்சிருக்கப்போறாங்கள். யோசிச்சுக் கொண்டிருந்தவர். மருத்துவப்பயிற்சி மாணவர்களிடம் கேட்டேவிட்டார்.

"இண்டைக்கு ஐயாவுக்கு இது போல பதினொரு ஒப்ரேசன் இருக்கு. அதுதான் இரண்டுமணிக்கு நேரம் குடுத்திருக்கிறார்" அந்த வருங்கால வைத்தியர் பதில்கொடுத்தார்.





**சாரங்கன்**

"ஈழத்தின் ஒவ்வொரு பறவையும் விடுதலையின் பாடலைத் தன் இறக்கைகளில் சுமந்து உலகெங்கும் பறந்து செல்கிறது!" என்கிறார் ஈழக் கவிஞர் காசி ஆனந்தன்.

தாய்மண்ணைத் தொலைத்து ஈழத்தின் நினைவுகளுடன் உலகெங்கும் அலையும் ஒவ்வொரு ஈழத் தமிழனும், இந்த உணர்ச்சிக் கவிஞரின் கவிதைகளுடன் தான் வாழ்கிறான். விடுதலைப் போராளி இயக்கங்களின் துப்பாக்கி முனைகளுக்கு நிகராக காசி ஆனந்தனின் பேனா முனையும் தங்களை பலவீனப்படுத்துவதாக என்றென்றும் ஒரு கொதிப்பு இலங்கை ராணுவத்துக்கு உண்டு. அதனாலோ என்னவோ... துப்பாக்கிப் பயிற்சிக்கு இலக்காக இவரது கட்-அவுட்களை நிற்க வைத்து சிங்கள ராணுவத்தினர் சுட்டுப் பழகியதாகவும் ஒரு காலத்தில் சொல்வார்கள்.

இன்றும் உலகெங்கும் தன் உணர்ச்சிக் கவிதைகளால் ஈழத் தமிழர்களுக்கான விடுதலைவிளக்கை எடுத்துச் செல்லும் இந்தக் கவிஞர் இப்போது தமிழகத்தில் முடக்கப்பட்ட அகதி வாழ்வு வாழ்கிறார். மிக நீண்ட இடைவேளைக்குப் பிறகு விகடனுக்காக தன் மௌனம் கலைக்கிறார் காசி ஆனந்தன். உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த விடுதலைப் புலி திலீபன் பற்றிப் பேச்சு வந்ததும், நொடிப் பொழுதில் கவிஞரின் கண்கள் குளமாகின்றன.

'திலீபனின் தியாக மரணம் என் வாழ்வில் என்றும் மறக்க முடியாத தருணம். ஈழத்தின் விடுதலை உணர்வு தமிழகத்திலும் தீயாகக் கொந்தளித்த நேரம் அது. அங்கே நல்லூர் முருகன் கோயிலில் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். நான்தான் அந்தத் தம்பியை அழைத்துப் போய் விரத மேடையில் அமர வைத்தேன். 12 நாட்கள் சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் வீர மரணம் அடைந்தான் தம்பி, உடல் துவண்டு உயிர் அடங்கும் நேரத்திலும் கண்களில் ஒளி குன்றாத அந்தத் தம்பி, 'தன் கடைசித் தறுவாயில் காசி அண்ணாவின் கவிதை வரிகள் என் இதயத்தை நிரப்ப வேண்டும்' என்று ஆசைப்பட்டான்.


'நம்புங்கள் தமிழ் ஈழம் நாளை பிறக்கும்'
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்!' என்ற எனது வரிகளைக் கேட்டபடியே திலீபனின் மூச்சு அடங்கியது. மரணத்தைத் தன் பக்கத்திலேயே வைத்து நேசித்தவன் திலீபன். அவனுடைய தியாகத்தை நினைக்கும்போது, ஈழத்துக்குள் காலடி எடுத்து வைக்க முடியாமல் இங்கே அகதி வாழ்க்கை வாழ்கிற எனது துயரம் ஒரு பொருட்டாக எனக்குத் தோன்றுவதில்லை' என்கிறார் காசி ஆனந்தன்.

அன்று முதல் இன்று வரையிலான தனது வாழ்க்கையின் ஓட்டத்தையும் மெதுவாக நினைவு கூர்கிறார்... ஈழம் இன்று உலகின் முற்றத்தில் நிமிர்ந்து நிற்கிறது என்றால், அதற்குப் புலிகளும் ஈழ மக்களும் கொடுத்த விலை கொஞ்சநஞ்சம் அல்ல. தமிழர்களுக்கு எதிரான வெறுப்பை விதைக்கிற வேலையை காலங்காலமாகச் செய்து வருகிறது சிங்கள அரசு. சிங்களக் குழந்தைகளின் பாடப் புத்தகங்களில் கூட வெறுப்பைக் கக்கி பிஞ்சு உள்ளங்களிலும் தமிழர்களுக்கு எதிரான நஞ்சை விதைக்கும் அரசு அது.

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களை இந்தியாவிலிருந்து வெளியாகும் ஆனந்தன் விகடன் செவ்விகண்டு பிரசுரித்துள்ளது. அந்த செவ்வியை இங்கு நாம் மீள் பிரசுரம் செய்கின்றோம்.**

# சுதந்திரம் என்பது; சலுகையல்ல... உரிமை..!

## உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன்



நான் சிறுவனாக இருந்த போது தமிழர்களை 'தமிழ் பள்ளோ என்று தான் சிங்களவர்கள் அழைப்பார்கள். பள்ளோ என்றால் 'நாயே' என்று சிங்களத்தில் பொருள். பள்ளோ என்று அழைத்தவர்களை 'கொட்டியா' என்று அழைக்க வைத்தோம். கொட்டியா என்றால், 'புலி' என்று பொருள்!

எழுபதுகளின் துவக்கத்தில் என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தது சிங்கள இராணுவம். என் தம்பிகள் சிவஜெயம், சுதர்சனையும் (பின்னர் சயனைட் அருந்தி இறந்தார்) என் தங்கை சிவமலரையும் சிறையில் அடைத்தார்கள். நான் ஐந்து ஆண்டுகள் சிறையில் இருந்தேன்.

'பத்துத் தடவை பாடை வராது பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா... செத்து மடிதல் ஒரே ஒரு முறைதான்.. சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா!' என்று ஒரு கவிதை எழுதினேன். அந்தக் கவி தைதான் 'என்னை'யே இலக்காக வைத்து அவர்கள் சுட்டுப் பழகும் அள வுக்கு அவர்களின் கோபத்தைப் பெரிதாக மூட்டிவிட்டது!

என்னோடு சேர்ந்து என் மனைவி சரோஜினிதேவியும் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டாள். அப்போது தான் நாங்கள் அங்கிருந்து அகதியாக இன்னும் சிலருடன் தமிழ்நாட்டுக்கு வந்தோம். மீண்டும் நான் அங்கே போனபோது, மிகப் பெரிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

(20ஆம்பக்கம் பார்க்க)

"ஏன் வேற டொக்ரர் இல்லையோ" இது அருணாசலத்தார்.

"இல்லை இவர் ஒராள்தான் அறுவைச்சிகிச்சைக்கு இருக்கிறார்" அருணாசலத்தாருக்கு அந்தப் பயிற்சி வைத்தியரைப் பார்த்தவுடன் தனது மகன் பிரகலாதனும் இப்படித்தானே இந்தக் கொஸ்பிற்றலில வைத்தியப் பயிற்சி பெற்றவன் என்பது ஞாபகம் வந்தது.

பிரகலாதனுக்கு இனியும் இந்த விடயத்தை சொல்லாமல் மறைக்கக் கூடாது எனத் தீர்மானித்தார். வெளிநாட்டில் வைத்தியராகக் கடமை புரியும் பிரகலாதனின் கையடக்கத் தொலைபேசி சிணுங்கியது. ஒப்ரேசன் ஒன்றில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதும் அப்பாவின் அழைப்பு என்பதால் கதைப்பதற்குத் தயாரானான்.

"ஹலோ அப்பா சொல்லுங்கோ" நான் தியட்டரில ஒரு முக்கியமான ஒப்ரேசன் செய்துகொண்டிருக்கிறன். "ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுக்குத்தான்..."

"நீங்க சொல்லுங்கோ ஏன் இப்ப எடுத்தனீங்க?"

அருணாசலத்தாருக்கு சங்கடமான நிலைதான். இந்தத் தகவலைச் சொன்னால் அவன் நிலைதடுமாறிவிடுவான் என்பது தெரியும். இதனால் அந்த ஒப்ரேசன் பிழைத்துவிடலாம். சிந்தனை வேகமாக சிறகடித்தது.

"இல்லையப்பு நான் சும்மா எடுத்தனான். பிறகு வேலை முடிஞ்சவுடன எடு கதைப்பம். தொலை பேசியை" வைத்துவிட்டார்.

ஒப்ரேசனுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோகிலாம்மா பலமணி நேரத்தின் பின் அசைவு ஆட்டமின்றி சில்லுப்பூட்டிய கட்டிலில் அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தள்ளிச் செல்லப்பட்டாள். அவள் மயக்கம் தெளிவதற்கு இரண்டுநாள் சென்றும் முடியவில்லை. தொடர் கண்காணிப்பு நடைபெற்றது. வெளிநாட்டிலிருந்து பிரகலாதன் தொலைபேசியில் தொடர்ச்சியா கேட்டுக் கொண்டேஇருந்தான். அம்மாவின் நிலை எப்படியிருக்கு? எப்பிடியிருக்கு? என்று இரண்டுநாட்களாக அவன் வேலைக்குப் போகவில்லை. பாய்ந்துவந்து அம்மாவைப் பார்க்கவேணும்போல இருந்தது. முடியவில்லை. கடைசியாக அப்பாவின் "அம்மா போயிற்றாடா..." என்ற இடியோசை வந்து சேர்ந்தது.

## புல(ம்)புதல்

காவலில்லாது
காவலிருக்கிறது
வாசற் கதவு!

திறக்கப்பட்டும்
தென்றல் வராது
திகைப்பிலிருக்கிறது
சாளரம்!

வெறுமையாக
வேதனையோடு
சாய்ந்து தூங்குகிறது
நாற்காலி!

விரிக்கப்படாது
விளிம்பறுந்து
புலம்புகிறது
பனையோலைப்பாய்!

ஓய்ந்துபோய்
தலைசாய்த்து
ஓலமிடுகிறது
மின்விசிறி!

வெம்மையை
கக்கியபடி
தன்னுள்ளே
வெறியுடன்
குளிரூட்டி

வெளுத்த
வெளிச்சமுடன்
துடிக்கிறது
மின்குமிழ்கள்

இருள்படம்
காட்டி
எதையோ
இயம்பத்துடிக்கிறது
தொலைக்காட்சி

யாருடைய
அழைப்பேனும்
வராதா-என்று
எதிர்பார்த்து...
வெறுத்திருக்கிறது
தொலைபேசி

இவைகளோடு
கூடிவிளையாட
உறவுகள் இல்லாது
நான்..!

கு.பா.தீபச்செல்வன்

## மனசின் சிகரம்

நெஞ்சத்திற்கான
நிறைவை நிஜமாக்க...
ஒழுக்கம் ஒரு
உன்னத தோழன்!

நமது
நிமிர்விற்கான நித்தியம்
ஒழுக்கத்தின் உயிரிலிருக்கிறது.
வஞ்ச(க)மில்லா வாழ்வு...
வள்ளுவனின் சொல்...
உயிர் போன பின்னாலும் வாழும்
உன்னதம்...
ஒழுக்கத்திற்கான சிறப்பு!

ஒழுங்கு மாறாத
சூரியனின் உதிப்பு
இருளுக்கான முடிவின் தொடக்கம்.
கட்டுக்குள் கிடக்கும்
கடல் நீரின்
ஒழுங்கு தவறும்போது...
தரையின் கனவுகள்
தகர்ந்து போகும்!

உண்மைச் செல்வத்தின்
உத்தரவாதம்-ஒழுக்கம்
அதுவே...
நாளைய நமது
நாட்களுக்கான
நித்திய வேதம்!

பு.ரதீசியா

# சொற்சிலம்பு-110

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | று | ங் | டு | னா | அ | ன் |
| மா | கு | லி | பா | ந் | மி | ல |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | ட |
| ளே | னா | ப | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ர் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| ப் | உ | கே | ன் | சி | த் | பி |

## சொற்சிலம்பம் -108 இன் விடைகள்

01. பாகிஸ்தான்.

02. இயன் மார்ட்டின்

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் - 108 இன் பரிசுக்குரியவர்

J.பிறைன்சி மரடானோகுலாஸ்
தரம் -8,
பெரிய பண்டிவிரிச்சான் ம.வி,
மருக்கோவில்.

## சொற்சிலம்பம் - 108 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ச.வேனிலன், இல:79, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

02. க.கமலதாசன், கற்சிலைமடு அ.த.க -பாடசாலை.

03 ந.டயாழினி, தரம்-9B, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

04. ஆ.மாயவரன், அம்பத்தைலேன், மல்லாகம்.

05. பா.லினோசிகா,தரம்-5A, கற்சிலைமடு அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.

06. வே.கேஷாலினி தரம்-6B, வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்.

07. அ.எழில்மதி, தரம்-5A கிளி/இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம்.

08. S.சிவசங்கரன், செபஸ்ரியார் கோயில், மன்னார்.

01. பென்சிலைக் கண்டு பிடித்தவரின் பெயர்?

01) ..............................................

02. கலப்பு உலோகம் ஒன்று?

01) ..............................................

பெயர் :- ..............................................

முகவரி :-..............................................

..............................................

..............................................

சொற்சிலம்பம்-110
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## அன்னை

பத்து மாதம் கருவறையிலே
பாதுகாத்து வளர்த்தவளே
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டி வளர்த்தவளே
அரவணைத்து உணவூட்டி
அன்பையும் அறிவையும்
தந்து வளர்த்தவளே
அன்னை மண் மீது
பாசத்தை வளர்த்தவளே
தரணியில் தாயின் அன்பு
யாருமிலர்
தாயே என்நெஞ்சில் வாழும்
தெய்வம் நீயே.


சி.சாந்தினி,
புதுக்குடியிருப்பு.



# இளைய நாதம்

## பவளம்

வெப்ப நீக் கடல்களில் ஆழமற்ற பகுதிகளில் புதர் போல் மண்டிக் கிடக்கும் பவளங்கள் ஒரு தொகுப்புயிரி. கடலடியை வண்ணச் சோலைகளாக அமைத்திடும் உயிரினம் இது. இந்தத் தொகுப்புயிர்களில் உலர்ந்த எலும்புச் சட்டகம் தான் பவளங்கள். இது சுண்ணச் சத்தினாலானது. முட்ப வளம், காளான் பவளம், ∴.பேவியா



எனப்படும் தேன் கூடுப் பவளம், குழாய்ப் பவளம், மியாண்டிரினா எனப்படும் மூளைப் பவளம், அல்சோனியம் போன்ற தசைப் பவளம், கடல் விசிறி வகைகள், கரும் பவளம், நீலப்பவளம். விலை மதிப்புடைய செம்பவளம் முதலானவை பவளப் பாறைகளை உண்டாக்கும் உயிரினங்களில் முதலிடம் வகிக்கின்றன.

பவளங்களை உண்டாக்கும் உயிரியை பாலிப்புகள் என்பார்கள். இதுமென்மையாக நீளுருளை வடிவிலோ மணி வடிவிலோ இருக்கும். இதன் கீழும் சுற்றியும் கோப்பை போலிருக்கும். இந்த உயிரி சுரக்கும் சுண்ணச் சத்தினாலானது இந்தக் கோப்பை. இதன் உடலின் மேற்புறத்தில் ஒரு வாய்த் திறப்புள்ளது. அதைச் சுற்றிலும் ஆறு அல்லது எட்டு உணர்க்கைகள் உள்ளன. இது ஒரு இரவு இரை தேடி. இதன் உணவு நுண்ணுயிரிகள், சிப்பி நத்தை, சிறு மீன்கள் முதலியன.

இது கலவி முறையிலும் இனப்பெருக்கம் செய்யும். கலவியிலா முறையில் குருத்துவிடுதல் மூலமும் இனப்பெருக்கம் செய்யும். சாதாரண பவளத்தின் சட்டகத்தில் சுண்ணாம்புத் துகள்கள் பரவலாக இருக்கும். குழாய்ப் பவளத்திலும் செம்பவளத்திலும் சுண்ணாம்புத் துகள்கள் ஒன்றோ டொன்று இணைந்து உறுதியான சட்டகமாக அமைந்திருக்கும்.

## ஓவியம்



செ.செல்வக்குமாரி,
வள்ளிபுனம்.


## நகைச்சுவை



"நான் நடித்துக் காட்டிய கட்ட பொம்மன் நாடகம் எப்படி இருந்தது"

"அபாரம்! கண்ணை மூடிக் கொண்டே ரசிக்கலாம்!"

# குடை வியாபாரம்




நன்றி:- பன்டேடைம்ஸ்

(முற்றும்)

ஒரு நாட்டின் பொருண்மியத்தை உறுதிப்படுத்துவதில் வங்கிகளின் பங்கு முக்கியமானது. பணத்தினை ஒரு இடத்தில் தேங்கவிடாது வைப்புகள், சேமிப்புகள், கடன்கள் என்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் பணச் சுழற்சியினை தூண்டி நாட்டின் உற்பத்தி நிலையை மேம்படுத்தும்.



1990 களைத் தொடர்ந்து எமது பகுதிகளில் சிங்கள அரசு தொடர்ச்சியாக மேற்கொண்ட பல்வேறு அடக்கு முறைகளில் ஒரு வடிவமாக வங்கிகளின் பூரணமான செயற்பாடு இல்லாமல் போனது.

## பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

விவசாயத்தையும் ஏனைய சிறு கைத்தொழில்களையும் அடிப்படை வாழ்க்கைக்கு ஜீவாதாரமாகக் கொண்ட எமது மக்கள் இதனால் பெரிதும் கஷ்டப்பட்டார்கள்.

இந்த நிலையில் 1993 களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக கிராமிய நிதியம் என்ற பெயரில் வங்கிச் செயற்பாட்டினை ஆரம்பித்தார்கள்.

அன்று தொடக்கம் எமது கிராமப்புற மக்களின் வங்கியாகவும் ஏனைய தொழில்கள் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் தரும் வங்கியாகவும் இது வளர்ச்சி பெற்றுள்ளது.

2001 ஆம் ஆண்டு கிராமிய அபிவிருத்தி வங்கி என்ற பெயரினை மாற்றிக்கொண்டு எமது பிரதேசத்தின் பொருண்மிய மேம்பாட்டுக்காக 10 கிளைகளை ஸ்தாபித்து வளர்ச்சி பெற்றுள்ளது.

எதிர்வரும் 30.10.2005 ஆம் திகதி சர்வதேச சேமிப்புத் தினமானபடியால் 24.10.2005 தொடக்கம் 30.10.2005 வரையிலான காலப்பகுதியை சேமிப்பு வாரமாக கிராமிய வங்கி பிரகடனப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

வங்கித் தொடர்புகள் அற்ற கிராமப்புற மக்களுக்கு சேமிப்பு தொடர்பான நன்மைகளை வழங்கி அவர்களை வங்கியின் வாடிக்கையாளர்களாக மாற்றுவதன் மூலம் அர்களது வருமானத்தின் மூலம் மேற் கொள்ளப்படும் ஆடம்பரச் செலவுகளை குறைத்து அவர்களை சிறந்த முதலீட்டாளராக்குதல்.

கவர்ச்சிகரமான திட்டங்களை முன்வைத்து அரச மற்றும் தனியார் வங்கிகளில் சேமிக்கும் நடைமுறையினை மாற்றுதல்.

தமிழீழ மக்கள் அனைவரும் கிராமிய அபிவிருத்தி வங்கியின் வாடிக்கையாளர்களாக மாற்றுவதன் மூலம் வங்கிப் பழக்கத்தை சகல மக்களிடமும் உருவாக்குதல்.

அனைத்து தமிழீழ மக்களும் சேமிப்பாளராக மாறுவதன் மூலம் எமது தேசத்தின் மொத்தச் சேமிப்பு அதிகரித்து அதன் ஊடாக முதலீடுகள் அதிகரித்து மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு அளித்தல்.

எமது ம்க்களின் சேமிப்புப் பணம் மீண்டும் எமது மக்களின் முதலீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் நாட்டின் பொருண்மிய மேம்பாட்டுக்கு ஒரு படிக்கல்லாக அமையும்.

என்ற பல்வேறு முக்கிய நோக்கங்களை வைத்து இந்த சேமிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. பல்வேறு சேமிப்புகளுக்கு கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களும் பரிசுகளும் வங்கியால் வழங்கப்படுவதால் வங்கியுடன் தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

**இக்கட்டுரை கிராமிய அபிவிருத்தி வங்கியின் சேமிப்பு வாரத்தை (ஒக்டோபர்-24-30) முன்னிட்டு பிரசுரிக்கப்படுகின்றது.**

எம் முன் வாழ்ந்த எமது மூத்த தமிழ் உறவுகள் தமது வாழ்வை சிக்கனமாக வாழ்ந்து, சேமித்து சிறப்புடன் வாழ்ந்தார்கள். இன்றும் எம்முடன் வாழும் பாட்டிமாரிடம் கேட்டால் சிக்கன மென்றால் "பிடிஅரிசி" என்றும்; சேமிப்பு என்றால் "சீட்டுப் பிடித்தல்" என்றும் உடனடியாகவே கூறுவார்கள்.

அந்தக் காலத்தில் வாழ்ந்த குடும்பத் தலைவிகளே சிக்கனம், சேமிப்பு என்பவற்றில் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் கூறும் "பிடிஅரிசி" என்பதன் அர்த்தம் இன்று எம்மில் பலருக்குத் தெரியாது இருக்கலாம்.

"பிடியரிசி" என்பது, ஒரு தாய் தினமும் சமையலுக்கு சோறாக்க எடுக்கும் அரிசியில் ஒருபிடி அரிசியை எடுத்து பிறம்பாக ஒரு பானையில் இட்டு சேமித்து வருவாள். பின்பு ஒரு நாள் அல்லது சில நாட்களுக்கு சோறு ஆக்க அரிசி இல்லாத போது இது வீட்டுப்பசியைப் போக்க அவளுக்கு கை கொடுக்கும். இவ்வாறு சிறுகச் சேர்த்த அரிசி ஒரு/ சில நாட்களுக்கு உதவும் என்பதனை யாரும் மறுக்க முடியாது.

"சீட்டுக் கட்டுதல் " என்னும்போது இது பலவகைப்படும். தினம், வாரம், மாதம், வருடம் என அது விரிந்து செல்லும். ஓர் சிறிய தொகைக்கு தினம் சீட்டுப்பிடிப்பவர்கள். பின் அதில் கிடைக்கும் பணத்தினைக் கொண்டே வாரச் சீட்டுப் பிடிப்பார்கள். இவ்வாறே வாரச் சீட்டு மாதச் சீட்டென விரிந்து சென்று ஈற்றில் வருட இறுதியில் சிறு துளி பெருவெள்ளம் என்பதற்கு உதாரணமாக எல்லோரிடமும் ஒரு பெருந்தொகை கையில் இருக்கும். அவர்கள் அவ்வாறு கிடைக்கும் பணத்தினை ஏதாவது நன்மை பயக்கும் வகையில் மூலதன முதலீடாக்கிக் கொள்வார்கள்.

அன்று வாழ்ந்த எம் மக்களில் பெரும்பாலானோர்க்கு போதாமை அல்லது பற்றாக்குறை என்பது தெரியாமலே இருந்திருக்கும். அதற்குக் காரணம், அவர்கள் சிக்கனமாக வாழ்ந்து மீதியை சேமித்து வந்தமையே ஆகும். அத்துடன் அவர்கள் பெரும்பாலும் தமது ஓர் "எழுதப்படாத விதி" ஆகும். இவ்வாறு வாழும் குடும்பமே ஓர் சிறப்பான குடும்பம் எனக் கருத முடியும். இவ்வாறு சேமிக்கும் பணம், நீங்கள் நோய்யுற்ற காலத்தில் அல்லது உங்கள் முதுமைக் காலத்தில் கை கொடுத்து உதவுவதுடன், உங்கள் பிள்ளைகளின் கல்வி, திருமணம் போன்றவற்றுக்கும் பயன்படும் அல்லவா?.

மேலும் குடும்பத்தலைவனும், சிறப்பாக தலைவியும் சரியான முறையில் திட்டமிட்டு, சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி மிகுதியைச் சேமித்து தமது பிள்ளைகட்கு முன்மாதிரியாகத் திகழ்வதுடன் அவர்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் தங்கள் பிள்ளைச் செல்வங்கட்கு ஓர் சுபீட்சமான எதிர்காலத்துக்கு வழிகாட்டுவதுடன் மலரப்போகும் தமிழீழத்துக்கு நற்பிரஜைகளை உருவாக்கிக் கொடுத்த பெருமைக்கும் உரியவர்களாவர் என்பது திண்ணம்.

பெற்றோர்களே உங்கள் மழலைச் செல்வங்களிடம் சிறு வயதிலிருந்தே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவியுங்கள். சத்தான உணவுகளை ஊட்டி ஆரோக்கியமாக உங்கள் குழந்தைகளை வளருங்கள். மாறாக கண்டதையும், கடியதையும் பெருமளவு பணச்செலவில் வாங்கிக் கொடுத்து அவர்களைக் கெடுப்பதுடன், அவர்களது ஆரோக்கியம் கெட நீங்களே காரணமாக இருக்காதீர்கள். இவ்வாறு வீணே செலவழிக்கும் பணத்தை அவர்கள் பெயரில் வங்கிகளில் வைப்பிலிட்டு சேமியுங்கள். இது போலவே அவர்களின் பிறந்ததினம் மற்றும் சுப தினங்களில் வீண் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து அவ்வாறு செலவழிக்கும் பணத்தினை அவர்கள் பெயர்களில் சேமியுங்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது உங்கள் சேமிப்பு வளர்ந்து ஓர் பெரிய தொகையாக அவர்களது எதிர்கால நலன்கட்கு பயன்படும்.

# சிறுகச் சேர்ப்போம் பெருக வாழ்வோம்

உணவுத்தேவைகட்கு தமது சூழலில் உள்ள இயற்கைப் பயிர்களிலும் விவசாயப்பயிர்களிலுமே தங்கி வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக இயற்கையான இலைகறிவகைகள், காய், பழம் மற்றும் பயிரிட்டுப்பெறும் தானியங்கள் இதில் அடங்கும்.

இவற்றிலிருந்து நாம் நம் முன்னோர் "இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்ந்தார்கள்" என்பதனைத் தெட்டத்தெளிவாகப் புரிந்துகொள்ள முடிவதுடன், அதன் காரணமாக நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்பதனையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஆனால் இன்றோ பெரும்பாலான குடும்பங்களைப் பார்த்தால் எங்கும், எதிலும் போதாமை, பற்றாக்குறை தான். இவற்றுக்கான காரணங்களை நாம் ஆராயின், எமக்குக்கிடைக்கும் பதில்:-

01.குடும்ப வருவாய்க்கேற்ப செலவுகளைத் திட்டமிடாமை.
02.பிறர் போல் ஆடம்பரமாக வாழத் தலைப்படல்.
03.இயற்கையில் இலகுவாக அல்லது மலிவாகக் கிடைக்கக் கூடிய தாவர உணவுவகைகளைத் தவிர்த்தல் என்பதே ஆகும்.

ஒவ்வொரு குடும்பமும் தத்தமது குடும்ப வருமானத்துக்கு ஏற்ப செலவுகளைத் திட்டமிட வேண்டும். செலவுகள் என்னும்போது சில செலவுகள் அத்தியாவசியமானவை. உதாரணமாக உணவு, உடை, உறையுள், கல்வி, மருத்துவம் என்பன . இவை தவிர்க்க முடியாதவையாக இருந்தபோதும், இவற்றை சரியான முறையில் திட்டமிடுவதன் மூலம் மட்டுப்படுத்த முடியும். மேலும் பிறர் போல் வாழவேண்டுமென்ற ஆசையை (ஒப்பீட்டு நோக்கில்) தவிர்ப்பின் பெரும்பான்மையான குடும்பங்களில் பற்றாக்குறை என்பதற்கு இடமேயிருக்காது. இவ்வாறு சரியான முறையில் திட்டமிட்டு செலவுகளை மேற்கொள்ளும்போது வருமானத்தில் எஞ்சும் தொகையை சேமிக்க முடியும். சாதாரணமாக எந்த ஒரு குடும்பத்தினதும் கட்டாய சேமிப்பாக 10% (மிகக் குறைந்த சேமிப்பு வீதம்) இருக்கவேண்டும் என்பது

மேலும் உறவினர்கள், நண்பர்களும் சிறுவர்களின் பிறந்ததினம், வேறு சுபதினங்களில் எந்தவித பயனும் கருதாது ஏதோ ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதற்காக பெரும்தொகைப் பணத்தினை கொடுத்து கண்டதையும் கடியதையும் வாங்கிப் பரிசளிப்பதனால் எவ்வித பயனுமின்றி வீணே அவர்களது வீட்டு "காட்சிப் பெட்டிகளையே" (Show Cax)நிறைந்து இருக்கும். ஆதலால் இச்சிறார்களின் எதிர்கால நன்மை கருதி இப்பணத்தை வணிக வங்கிகளால் விற்பனை செய்யும் "சேமிப்புச் சான்றிதழ்களை" வாங்கி பரிசளிப்பீர்கள் ஆயின் அவர்களின் வளர்ச்சிக்காலத்தில் அவர்களுடன் சேர்ந்தே வளர்ந்து ஓர் பெரும் தொகையாகி மேல் கல்வி, திருமணம் போன்ற நல்ல விடயங்களுக்கு பயன்படும் அல்லவா!

இறுதியாக சிறுவர்களே உங்கட்கு பாடசாலைச் செலவு, வேறும் செலவுகளின் பொருட்டு, உங்கள் பெற்றோரால் அல்லது உறவினர்கள், நண்பர்களால் தரப்படும் பணத்தினை சிக்கனமாகச் செலவழித்து மிகுதியை ஓர் உண்டியலில் இட்டு சேமித்து பின் வங்கிகளில் உங்கள் பெயர்களில் சேமிப்பீர்களாயின் எதிர்காலம் உங்கள் கையில்.

"ஆளாகும் பிள்ளைக்கு அரைச்சல்லி போதும்" என்பது முதுமொழி.

"சிறந்த வாழ்வு வாழ - சிக்கனமும்- சேமிப்பும்- அத்திவாரமாகின்றன"

"சிறுதுளி பெருவெள்ளம்"

"இன்றைய சேமிப்பு- நாளைய பொருளாதாரம்"

என்பவற்றுக்கு ஒப்ப

"சிறுகச் சேமிப்போம்- பெரு வாழ்வு வாழ்வோம்"

"வீட்டின் தன்னிறைவு- நாட்டின் தன்னிறைவு"

எனவே நாம் அனைவரும் சேமிப்பு பழக்கத்தைக் கைக்கொண்டு நமது தமிழீழ தேசத்தின் பொருண்மியத்தை நாமே கட்டிஎழுப்புவோம்.


## நான்காம் ஆண்டு நினைவில்

மண் மகிழ 04 ★ 04 ★ 1936



மண் நெகிழ 28 ★ 10 ★ 2001

நாட்டுப்பற்றாளர்

**கணபதிப்பிள்ளை கந்தசாமி (லோயர் ஐயா)**

தருமபுரம்

(தருமபுரம் சி.க.கூ.சங்கத் தலைவரும் சமூகசேவையாளரும்)

கூப்பிடும்போது எங்கள்
குரலாக ஒலித்தீர் நீவீர்
சாப்பிட மறந்தும் எங்கள்
சந்ததி உயர உழைத்தீர்.

விடுதலைக்காய் நாளும்
வீறுடன் உழைத்தீர் நீரும்.
நாட்டுப் பற்றாளராகி
சரித்திரமாய் வாழ்கின்றீர் ஐயா.

*தருமபுர வாழ் மக்களும்,*
*விசுவமடு பிரதேச மக்களும்.*

(சி-12990)

# ஏ9 – ஏரம்பு

# எதையும் தரம் அறிந்து மனசுக்குள்ள அனுமதிக்கோணும்..!

உலா 56



**உள்ளூர்த்தேவையளுக்காக இறக்குமதி செய்யப்படிற அரிசி வகையளைச் சமைச்சுக்கொண்டு எங்கட சுதேசிய பொருளாதாரத்தைச் சிதைக்கிற இரண்டகம் செய்யிற மனப்பான்மையில இருந்து நாங்கள் விடுபடுகிறோம்.**

எல்லாருக்கும் வணக்கம்! என்னண்டாலும் நடந்ததை உங்களுக்கு நான் சொல்லிப்போடுவன் தானே! (உந்த வைரவர் மேல சத்தியமாய் இது நடந்த சம்பவம்). அப்பிடித்தான் உங்கால வன்னிக்குத் திரும்பிறதுக்கு முன்னால இஞ்சை தெரிஞ்ச வீடுகள் எல்லாத்துக்கும் போய் ஒருக்கால் முகத்தைக் காட்டுவோம் எண்டு ஒரு சுற்று அடிச்ச நேரம், தெரிஞ்சதொரு தங்கச்சி வீட்டை போனனான்.

நான் தங்கச்சி எண்டு சொன்னது, என்ரை வயசுக்கணக்கை வைச்சு. ஆளுக்கு எப்பிடியும் 50-55 இற்குக் கிட்ட வரும், உதவி நிறுவனம் ஒண்டில வேலைசெய்யிறா. நாலு பேரைச் சந்திக்கிற ஊருக்குள்ளை தெரிஞ்ச ஆள் எண்டதால நானும் கன விசயங்களை அறிஞ்சுகொள்ளக் கூடியதாய் இருந்திச்சிது. “சே ! முந்தி இயக்கம் இருந்த காலத்தில தெருவழியில எல்லாம் திரியக்கூடியதாய் இருந்திச்சிது. காதலிச்சுப்போட்டு கைவிடிறதுகளும் குறைவாய் இருந்திச்சிது. இப்ப நிலைமை சரியான மோசம்.

பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நியாயம் கேட்டு பொலிசுக்குப் போனாலும் அவன் சிங்களவன் சும்மா பதிஞ்சு போட்டு விடிறான். உப்பிடியே போனால் நிலைமை படுமோசமாய் போயிடும் எண்டு குமுறிக்கொண்டிருந்தா.

இதே நேரம் இதுக்காகத்தான் காவல் துறை, நீதிமன்றம், சீர்திருத்த வளாகங்கள் எண்டு பலதும் எங்களுக்காக பரிணமிஞ்சிருக்கு. இப்பிடியான ஏற்பாடுகள் வழங்கிற சேவையை பாதிக்கப்படிற எங்கட சனங்கள் ஒவ்வொன்றும் முன்வந்து பெற்றுக் கொள்ளப் பார்க்கோணும். காவல் துறை சமூகப்பாதுகாப்பை பொதுவாக உறுதிப்படுத்திற அதேநேரம், சட்டம் பாதிக்கப்படுற ஆளுக்கான பிரத்தியேகப் பாதுகாப்பையும் வழங்கும். இப்பிடி இரண்டு விசயம் இருக்குதெண்டதை நாங்கள் உணர்ந்து பிரயோசனமடையலாம்.”, எண்டு அவாவுக்கு மனசில பட்டதைச் சொன்னன்.

“நீங்கள் சொல்லிறதெல்லாம் வன்னியில எல்லோ ! இஞ்சை ராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில இருக்கிறவை என்ன செய்யிறதாம்?”. “ஏன் நீங்கள் இஞ்சையிருந்தாலும் என்ன பிரச்சினை எண்டு தெளிவாய் தமிழீழ நீதிமன்றத்தில ஒரு வழக்கைத் தாக்கல் செய்யலாம் தானே !”.

“வழக்குத் தாக்கல் செய்யிறதுக்காக இஞ்சையிருந்து அங்கை மட்டும் உவ்வளவு தூரம் மினைக்கெடிறதே ? உங்களை மாதிரி என்ன வேலைவெட்டி இல்லாமலே இருக்கிறம். கைவிடப்பட்ட எத்தினை பொம்பிளையளை நாங்கள் கவனிக்கிறம் எண்டு உங்களுக்குத் தெரியுமே?”. “பிள்ளை! உமக்கொண்டு நான் சொல்லிறன்: நேரம் மினைக்கேடு எண்டு நீர் சலிச்சுக்கொள்ளிறதாலயே எத்தினைபேர் இன்னும் கெட்டுப்போக வாய்ப்பளிக்கிறீர் எண்டு யோசிச்சனிரோ? ஒருக்கால் உதிலை பஸ்ஸில போய் வழக்குப்போட உங்களுக்கெல்லாம் பஞ்சி. ஆனால், நீங்கள் நோகாமல் இருக்க, உள்ள காவாலி, கள்வாலி எல்லார் மேலயும் இயக்கம் நடவடிக்கை எடுக்கோணும் எண்டு நினைக்கிறீர்.

உது நியாயமோ ? இந்த யாழ்ப்பாண மண் மீட்கப்படேக்கிளை எங்கட நிறுவனங்களின்ரை பாதுகாப்புகளை முழுஅளவில நாங்கள் இஞ்ச அனுபவிக்கலாம். இருந்தாலும் அதுக்கு மேலாக ஒவ்வொரு தனிமனுசன்ரை விழிப்புநிலையும் தான் அவன அவனுக்குப் பாதுகாப்பு. ‘விழிப்புத்தான் விடுதலைக்கான முதற்படி’ எண்டெல்லே தலைவர் சொன்னவர். ஆக மற்றவனால ஏமாற்றப்படிற அளவுக்கு ஏமாளியளாய் இருக்கிற தங்கட நிலையில இருந்து ஒவ்வொருத்தரும் திருந்தோணும். சும்மா சினிமா பிம்பங்களை நம்பி வாழ்க்கையைத் தொலைச்சுக்கொள்ளப் படாது”.

நான் நீளத்துக்குச் சொல்லிக் கொண்டு போக, அதே நீளத்துக்கு அவாவின்ரை மூஞ்சை நீளமும் அதிகரிச்சுக்கொண்டு போனாலும், சினிமா எண்டு நான் சொன்னநேரம் திடீரெண்டு முகம் மலர்ந்தது. “அந்நியன் பார்த்தனீங்களே அப்பு ? அந்தமாதிரி! இன்னுமொருக்காய் பார்க்கவேணும்”. “இதென்ன கேள்வி! அந்நியத் துலைவான்கள் எல்லே உங்கை சந்திக்குச் சந்தி தடைமுகாம் களை அமைச்சுக் கொண்டு ஆயிரக்கணக்கில இருக்கிறாங்கள். அந்தச் சாபத்தை இன்னுமொருக்கால் வேற பார்க்கவேணும் எண்டு ஆராவது ஆசைப்படுவினமே?”. “ஐயோ அப்பு ! நான் சொன்னது அந்நியன் எண்ட சினிமாப் படத்தை. .”.

“பிள்ளை ! நான் கண்ணால பார்க்கிற அந்நியனின்ரை அட்டகாசப் படங்களும், சுதேசியின்ரை சோகப் படங்களுமே எனக்கு அதிகம். அது காணாத குறைக்கு இறக்குமதி செய்யப்படிற இந்தியக்குப்பை வேற பார்க்கோணுமெண்ட அவசியமில்லை. சொல்லிறனெண்டு குறை நினைக்காதையும் : கி.மு. காலத்திலை புறம் மட்டுமில்லாமல் அகத்திணையாகிய காதலிலையும் இலக்கியம் வளர்த்த எங்கட பாரம்பரியம் ஏன் இண்டைக்கு சினிமாத்தனத்துக்குள்ளை கவிண்டுபோனது எண்டு எனக்கு விளங்கேல்லை.

‘நீ எதை விரும்புகிறாயோ, அதுவாக நீ ஆகிறாய்’ எண்ட பொன்மொழி போல ‘நீ எதை அதிகம் பார்க்கிறாயோ, அதற்கு நீ அடிமை ஆகிறாய்’, எண்டு இருக்குமோ எண்டு நினைக்கிறன். அதாலதான் கண்டகிண்ட சினிமாப் பிரமுகரிகள் எல்லாம் கற்புக்கு விளக்கம் கொடுக்கத் தொடங்கீட்டினம், இண்டைக்கு விளக்குமாறு ஊர்வலம் வைக்கிறவைதான் 15 வருசத்துக்கு முன்னால கோயில் கட்டினவை. ஆக ஒவ்வொண்டின்ரை தாற்பரியங்களையும் உணர்ந்து, தரம் அறிஞ்சு எதையும் எங்கட மனசுக்குள்ளை அனுமதிச்சால் ஆபத்தோ, சிக்கலோ ஏற்படிறதுக்கான வாய்ப்புகள் மிச்சம் குறையும். இண்டைக்கு நடக்கிற 99 வீதமான சமூகச்சீரழிவுகளுக்கு சினிமா மனித மனங்களுக்குள்ளை ஏற்படுத்திற மலிந்தமானதும் மட்டமானதுமான போக்குகள் தான் முழுக்காரணம். நல்லதை மட்டும் எடுத்துக்கொள்ளிறதுக்கு மனிசர் ஒணடும் அன்னப்பிறப்புகள் இல்லை”, எண்டிட்டு எழும்பீட்டன்.

மற்றது பிள்ளையள் உங்களை ஒரு கேள்வி: கெதியில காசு சம்பாதிக்கிறதுக்கான வழி உங்களில ஆருக்குத் தெரியும் ? ஐயோ வங்கிக்கொள்ளை, வழிமறிப்பு அப்பிடி ஒண்டுமில்லை. இது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கொள்ளையடி. நான் உங்களுக்குச் சொல்லிறன், இருந்தாலும் அச்சாப்பிள்ளையள் இப்பிடி உழைக்க ஒருத்தரும் வெளிக்கிட்டிடாங்கோ! ‘2கிழமையில் கம்பியூட்டரில் டிப்ளோமா, 2 நாட்களில் e-mail (மின்னஞ்சலில்) டிப்ளோமா அப்பிடியிப்பிடி டிப்ளோமாப்பட்டங்களை ஏங்களிட்டை வேண்டலாம் எண்டு விளம்பரப்படுத்தலாம். இல்லை சாதாரணமாய் டிப்ளோமா பட்டம் கொடுக்கிற ஸ்தாபனம் தகைமை நிறைஞ்சதொரு, அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனமாய் இருக்கோணும்.

அதிட்டை டிப்ளோமாப்பட்டம் பெற்றவர் குறிப்பிட்ட துறையில நிபுணத்துவம் அடைஞ்சவராயும் இருக்கோணும். அதை விட்டிட்டு காசு அறவிடிறதையே நோக்கமாகக் கொண்டு பலரும் ஏதாவதொரு இங்கிலிஷ் நகரத்தின்ரை பேரை முன்னால போட்டு ஒண்டைத்தொடங்கிறது இப்பை அறம்புறமாய் நடந்து வருகிது. ஒரு எடுத்துக்காட்டுக்காக சொல்லிறதுக்குக்கூட மிச்சம் வைக்காமல் அமெரிக்க, பிரித்தானிய, கனேடிய, அவுஸ்ரேலிய நகரங்களின்ரை பெயர்கள் எல்லாமே பயன்பாட்டில இருக்கிது. நான் வெளியால போன காலத்தில உங்களுக்கு ஈ-மெயில் ஊடாகத்தானே எல்லாம் எழுதி அனுப்பினனான். எந்த முட்டாளும் பத்து நிமிசத்தில பழகிக் கொள்ளக்கூடிய விசயம் பாருங்கோ அது. என்ன கிட்டத்தட்ட முத்திரை ஒட்டி கடிதம் அனுப்பிறது மாதிரித் தானே! அதுக்கு வேற ‘டிப்ளோமா இன் ஈ-மெயிலிங்’ எண்டு பேர் வைச்சு பகற்கொள்ளை அடிக்கப்படிறதை நான் என்னண்டு சொல்ல ! உதை மாதிரித்தான் மற்றைய கொம்பியூட்டர் படிப்புகளும்.

நான் எல்லா கல்வி நிறுவனங்களையும் குறிப்பிடேல்லை. ஆனாலும், சும்மா இவ்வளவு காலம் படிச்சதெண்டு சான்றிதழ் வழங்கிறது வேற, டிப்ளோமா எண்டு குடுக்கிறது வேற. ஒவ்வொண்டுக்குமான கனதி அது அதில இருக்கோணும். அப்பிடியிருந்தால்தான் பொருத்தமான தகைமையளைச் சமூகம் உள்வாங்கிப் பயனடையமுடியும். அதைவிட்டிட்டு சும்மா கவர்ச்சிகரமான விளம்பரங்களைப் பார்த்து ஏமாந்து போயிடக்கூடாது குஞ்சுகள் !

ஆ.. கவர்ச்சிகரமான விளம்பரம் எண்டேக்கிளை தான் இன்னுமொரு விசயம் ஞாபகத்துக்கு வருகிது. வன்னியில அறுவடை செய்த நெல்லைச் சந்தைப்படுத்தேலாமல் விவசாயிகள் பெரும்பாடு படுகினம்.

மற்றது உள்ளூர்த்தேவையளுக்காக இறக்குமதி செய்யப்படிற அரிசி வகையளைச் சமைச்சுக் கொண்டு எங்கட சுதேசிய பொருளாதாரத்தைச் சிதைக்கிற இரண்டகம் செய்யிற மனப்பான்மையில இருந்து நாங்கள் விடுபடுகிறதும் ஓரளவுக்கு இந்தப் பிரச்சினைக்கு வழியாய் விளங்கும். ஓம் பிள்ளையள்! ருசியாய் இருக்கிதெண்டு பஸ்மதி அரிசியைச் சமைக்கிறதால பாகிஸ்தான், இந்தியாவுக்குத்தான் எங்கட காசு போகுது. ரின்னிலை இறக்குமதி செய்யிற ஸ்ரோபெறியையும், அப்பிள்- ஒறேஞ்சுகளையும் கரைச்சும், ஐஸ்கிறீம் தயாரிச்சும் வித்துத்தள்ளிற கடையள் கொஞ்சம் அயலுகளைப் பற்றியும் யோசிக்கோணும்.

உதாரணத்துக்கு மிச்சக்காசுக்கு மினுங்கல்பேப்பரில சுத்தின அந்நியத் தயாரிப்பைத் திணிக்கிற நாங்கள், ஏதோ ஒருசில கடையளில மட்டும் விக்கிற போசாக்குள்ளதும் மலிவானதும், ருசியானதுமான உள்ளூர்த் தயாரிப்புகளை ஒட்ட ஒட்ட வெறுங்கையால எடுத்துக்குடுக்கிறம். இந்த இடத்திலதான் சந்தைப்போட்டியை மனசில வைச்சு கவர்ச்சிகரமான விற்பனை உத்தியளைப் பின்பற்றோணும். நான் இதைச் சொல்லிறதுக்குக் காரணம் இருக்கிது.

உங்களுக்கு ஜோர்ஜ் வோஷிங்ரனைத் தெரியுமெல்லோ ? இல்லை.. இல்லை.. அமெரிக்காவின்ரை முதல் ஜனாதிபதிக்கும் உதே பேர்தான். ஆனால், நான் குறிப்பிடிறது 19ஆம் நூற்றாண்டின்ரை இறுதியில பல கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட கறுப்பு-அமெரிக்கர் ஜோர்ஜ் வோஷிங்ரன் காவர் எண்ட விவசாய ரசாயனவாதியை.

அவரின்ரை 1864-1943 காலப்பகுதியில நிலவின கடுமையான நிறவாதத்தால தன்னோட குடும்பம் பிரிக்கப்பட்ட நிலையிலையும், கல்லூரிக்கான அனுமதியள் பலமுறை மறுக்கப்பட்டாலும், கஷ்ரப்பட்டுப் படிச்சு முன்னேறினவர் அவர்.

ஒருக்கால் அமெரிக்காவில பருத்திப்பயிர்ச்செய்கையை பூச்சி தாக்கின நேரம் மாற்றுப்பயிராக கடலையைப் பயிரிட இவர் ஆலோசனை குடுத்தார். ஆனாலும், அந்தக் காலத்தில கடலையை பெரிசாய் விற்கேலாத அளவுக்குப் பயன் அறியப்படாததாய் அது இருந்திச்சிது. ஆலோசனை குடுத்த இவர் கூடவே பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி, ரொபிகள், சவர்க்காரம், முகப்பவுடர், கறைநீக்கி, சாய வகைகள், வர்ணங்கள் எண்டு 300 வரையிலான கடலையில இருந்து தயாரிக்கக்கூடிய விசயங்களை எடுத்துவிளக்கினதால ஆளாளுக்கு முண்டியடிச்சுக்கொண்டு கடலைப்பயிர்ச்செய்கையில ஈடுபட்டு லாபம் அடைஞ்சிச்சினம்.

இதே மாதிரி வள்ளிக்கிழங்கில இருந்தும் மா வகைகள், பசை, பூச்சுகள், சொக்லேற், வர்ணங்கள் எண்டு அவர் பலதையும் அறிமுகப்படுத்தினர். ‘அமெரிக்காவில உதெலலாம் செய்யிறதுக்கு வசதி இருந்திருக்கும், செய்திருப்பினம் ! நாங்கள் என்னண்டு...’ எண்டு உங்களில சிலர் இழுக்கிறது எனக்குக் கேட்கிது.

(20ஆம் பக்கம் பார்க்க....)

# யாருக்கு கிண்ணம்..?

# இளந்தாரகை எதிர் தோழர்கள்-

இளந்தாரகை அணிக்கும், தோழர்கள் அணிக்குமிடையிலான இறுதிப் போட்டி பலப் பரீட்சை நிறைந்ததொன்றாக இருக்குமெனில் மிகையாகாது. அத்துடன் உள்ளூர் கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு விருந்தாகவும் அமையவுள்ளது.

விசுவமடு வர்த்தக சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிக்கு யோகீசன் தலைமையிலான தருமபுரம் இளந்தாரகை அணியும், சீலன் தலைமையிலான விசுவமடு தோழர்கள் அணியும் தெரிவாகியுள்ளன.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள இப்போட்டியில் இரு அணிகளுமே தங்கள் முழு வலிமையையும் வெளிப்படுத்தி ஆடவேண்டிய தேவைக்குள்ளாகியுள்ளனர்.



யோகீசன் தலைமையிலான தருமபுரம் இளந்தாரகை அணி கிளிநொச்சி மாவட்டத்தில் வீழ்த்தப்படமுடியாத அணியாக வலம் வரும் அதே வேளை, அவ்வணி பங்குபற்றிய தொடர்ச்சியான மூன்று போட்டித் தொடர்களில் சம்பியனாகி சாதனை படைத்திருக்கின்றது.

இதில் கனகபுரம் விளையாட்டுக்கழகம் நடாத்திய சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த போட்டியில் நியூஸ்ரார் அணியை ஆறு விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்று தமது முதலாவது சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

அடுத்து கிளிநொச்சி விளையாட்டு அபிவிருத்திச் சங்கம் தருமபுரம் விளையாட்டு மைதானத்தில் நடாத்திய போட்டியில் தோழர்கள் அணியை மூன்று விக்கெட்டினால் வெற்றி பெற்று தமது இரண்டாவது கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மேஜர் துளசி ஞாபகார்த்தமான போட்டியில் பெரும் பரபரப்புக்கு மத்தியில் தோழர்கள் அணியை ஐந்து ஓட்டங்களினால் வெற்றி பெற்று மூன்றாவது கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தற்போது விசுவமடு வர்த்தக சங்கத்தினால் நடாத்தப்படும் மேற்படி போட்டித் தொடரின் இறுதிப் போட்டித் தெரிவாகி ரகிகர்களுக்கு ஒரு எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ளது.

அடுத்து சீலன் தலைமையிலான தோழர்கள் அணி இறுதிப் போட்டிகளில் அதிர்ஷ்டம் இல்லாத அணியோ என்ற எண்ணப்பாட்டை தோற்றினாலும் லெப்.கேணல் நிரோஜன் கிண்ணத்தை தக்கவைத்ததன் மூலம் அதை தகர்த்தெறிந்துள்ளது.

அதாவது, தோழர்கள் அணி பற்குபற்றி மூன்று இறுதிப்போட்டிகளில் தோல்வியைத் தழுவியிருக்கிறது. இதில இளந்தாரகை அணியுடன் இரண்டு இறுதிப் போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது.



ஆனால், இறுதிப் போட்டிகளில் தோழர்கள் அணி அதிர்ஷ்டம் இல்லாத அணியாக வலம் வந்தாலும் இவ் இறுதிப் போட்டித் தோல்விகளிலும் முன்னேற்றம் மிக்கதொன்றாகவே இருக்கின்றது.

அதாவது, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் வித்தியா அணியிடம் எட்டு விக்கெட்டுக்களினால் படுமோசமாக தோல்விய்டைந்தது.

அடுத்து கிளிநொச்சி விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் இறுதிப் போட்டியில் இளந்தாரகை அணியிடம் மூன்று விக்கெட்டுக்களினால் தோழர்கள் அணி தோல்வியுற்றது.

மூன்றாவதாக நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்திய மேஜர் துளசி ஞாபகார்த்தமான போட்டித் தொடரில் மிகவும் பரபரப்புக்கு மத்தியில் ஐந்து ஓட்டங்களினால் இளந்தாரகை அணியிடம் தோல்வியுற்றது. இதில் முதலில் ஆடிய இளந்தாரகை அணி 15 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றியிலக்கு நோக்கிய ஆடிய தோழர்கள் அணி 15 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப்பெற்று ஐந்து ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

இறுதிப் போட்டிகளில் தோழர்கள் அணி தோல்வியுற்றாலும் அதில் ஒரு முன்னேற்றத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன் லெப்.கேணல் நிரோஜன் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் அதற்கு ஒரு முற்றுப் புள்ளிவைத்தது.

அதாவது, உடையார்கட்டு லெப்.கேணல் நிரோஜன் விளையாட்டுக்கழகம் நடாத்திய நிரோஜன் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் இறுதிப்போட்டியில் கடற்புயல் அணியை 63 ஓட்டங்களினால் தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியதன் மூலம் இனிவருகின்ற இறுதிப் போட்டியில் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளக்கூடிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

தற்போது மேற்படி வர்த்தக சங்க இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் என்பதை மேற்படி போட்டித தொடர்கள் உணர்த்தப் போதுமானதாக இருக்கும் அதே வேளை இரு அணிகளும் தங்கள் முழுப் பலத்தையும், புதிய வியூகங்களையும் பயன்படுத்திக் கிண்ணத்தை கைப்பற்ற முற்படுவார்கள் என்பதை சொல்லித்தான் புரியவேண்டி அவசியமில்லை.

எனவே, இப்போட்டியில் எந்த அணி கிண்ணத்தை சுவீகரிக்கின்றதோ இல்லையோ உள்ளூர் கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு அணிகளும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வார்களா என்பதை நாளை பார்ப்போம்.

-சுபியன்




# பணம் புரளும் கிரிக்கெட்

கோடிக்கணக்கில் பணம் புரளக்கூடிய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதில் கோஷ்டி பிளவு காரணமாக அப்பிரச்சினை உயர்நீதிமன்று வரை போனது.

எனினும் இப்போது தேர்தலை நவம்பர் 30ஆம் திகதி நடத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளனர். நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற நீதிபதி பி.பி. சிங்,எஸ்.பி.சின்கா, பி.கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய குழு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நவம்பர் 30ஆம் திகதி தேர்தலை நடத்த நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்று மனுத்தாக்கல் செய்தார்கள்.தேர்தல் கண்காணிப்பாளருடன் கலந்து பேசி இறுதி அறிவிப்பு வெளியிடப்படும்.



# அக்தரின் கோபம்

பாகிஸ்தான்-இங்கிலாந்து இடையே கிரிக்கெட் போட்டி நடப்பதை அடுத்து பாகிஸ்தான் வீரர்களுக்கு கராச்சியில் பயிற்சி நடந்து வருகிறது. இதில் பாகிஸ்தான் அதிரடி பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் பங்கேற்றுள்ளார்.

அதுபற்றி எஸ். பி.என் விளையாட்டு சானலில் இந்த நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது. அதில் அக்தரின் ஒழுங்கீனமான நடவடிக்கைகளை ஒப்பிட்டு "நாய் வாலை நிமிர்த்தமுடியாது" என்று விமர்சனம் செய்தனர்.

இது அக்தருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த அலைவரிசை மன்னிப்புக் கேட்கவேண்டும். இல்லை என்றால் வழக்குத் தொடர்வேன் என்று கூறியுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினரும் புகார் கூறியிருக்கின்றனர்.

எப்போதுமே அக்தருக்கு எதிராக இருக்கும் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாமும் அக்தருக்குஆதரவாக மாறியிருக்கிறார்."எங்கள் அணி வீரரை யார் விமர்சனம் செய்தாலும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்"என்று கூறினார்.


ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி

(துறைசார் ஆலோசனை வழங்குனர், நிர்மாணதாரர்)

**பணிநிலை வேண்டுகை**

கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைகளிற்கு தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

பணிநிலை :- கட்டட தொழில்நுட்பவியல்,
1. படவரைஞர், மதிப்பீட்டாளர்,
2. மேற்பார்வையாளர், நிலஅளவையாளர்.

கல்வித்தகமை :- க.பொ.த.(சா/த)த்தில் தமிழ், கணிதம், உட்பட 06பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 20 தொடக்கம் 35 வரை

சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு
நடைபெறும் இடம:- ஜெனரல்இன்ஜினியரிங் கொம்பனி
45A கனகபுரம் கிளிநொச்சி.
காலம :- 31.10.2005 (திங்கட்கிழமை)
நேரம் :- காலை 10.00

மேற்குறித்த பணிநிலைகளிற்குத் தகுதியானவர்கள் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

மேலாளர்,
ஆளணிப்பகுதி,
ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி. (சி.13151)

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1972-இல் கொல்வின் ஆர். டி.சில்வா வினால்- அதாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால்- கொண்டுவரப்பட்ட அரசியல மைப்புத் திட்டத்தின் மூலம் முன்னைய அரசியல் யாப்பில் வழங்கியிருந்த 29 ஆவது சரத்து நீக்கப்பட்டது.

1978- இல் ஜே ஆரால் மற்றொரு அரசியல் யாப்புக் கொண்டுவரப்பட்டு பௌத்த மதம் அரச மதமாகியும், ஒற்றையாட்சியை வலியுறுத்தியும் சட்ட விதிகள் இயற்றப்பட்டன.

1996-இல் சந்திரிகாவின் அரசியல் தீர்வுப் பொதியை ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தது.

2002-இல் ஐக்கிய தேசியக் கட்சியின் சமாதான நடவடிக்கையின் ஓரம்சமாக தன்னாட்சி அதிகார சபை வரைவு விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்டபோது சந்திரிகா ரணிலின் அரசு கவிழக் காரணமானார்.

2005 சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்புத் தேவை என்ற ரணிலின் கோரிக்கைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தகுந்த பதில் சொல்லவில்லை.

சிறுபான்மை இனத்துக்கு பாதுகாப்பு. இவ்வாறு ஒன்றையொன்று காரணம் காட்டி ஒன்றைவிட மற்றது உத்வேகமாக இனப் பிரச்சினையை வளர்த்தார்களே தவிர தீர்த்து வைக்க முன்வரவில்லை. அதாவது அதிகாரத்தை தங்களுக்குள் வைத்தி ருப்பதில் தமக்கிடையே பிரிவினை வாதத்தை வளர்த்தார்கள். மக்களிடையேயும் பிரிவினை வாதத்தை வளர்த்தார்கள்.

மொழிப்பிரிவினையை, மதப்பிரி வினையை, நிலப்பிரிவினையை, வளர்த்தார்கள். இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமையை பறித்ததன் மூலம் இந்தியத் தமிழர் இலங்கைச் சிங்களவர் எனப் பிரிவினையை வளர்த்தார்கள்.

உத்தியோகங்களில், பதவி உயர்வுகளில், சலுகை வழங்குவதில் சிங்களவர் தமிழர் எனப் பிரிவினையை வளர்த்தார்கள். தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்ததன் மூலம் பிரிவினையை வளர்த்தார்கள்.

பிரதேச அபிவிருத்திகளில் சிங்களப் பிரதேசம், தமிழ் பிரதேசம் எனப் பிரிவினையை வளர்த்தார்கள். பயணங்களில், நடமாட்டங்களில், குடியிருப்புத் தொகுதிகளில் தமிழர் சிங்களவர் என்ற பிரிவினையை வளர்த்தார்கள்.

ஆக்கிரமிப்பவர்கள் சிங்களப்படையின ராகவும் அடக்கிவைத்திருப்போர் தமிழர்கள் என்றும் பிரிவினையை வளர்த்தார்கள். சந்தேகப் படுதலில், விசாரணைகளில், கைதுகளில் சிங்களவர் தமிழர் எனும் பிரிவினையை வளர்த் தார்கள். தடுப்புக்காவலில் சிறை வைப்புக்களில், நீதி மன்றத்தீர்ப்புக்களில் பிரிவினையை வளர்த்தார்கள்.

இப்படி இருக்கும்போது பிரிவினை யைத் தோற்கடிப்போம் என அவர்கள் உரைப்பது வேடிக்கையாகத் தெரியவில்லையா? அவர் களால் எவ்வாறு பிரிவினையை தோற்கடிக்க முடியும். பிரிவினையை யார் வளர்த்தார்களோ அது அவர்களையே பயமுறுத்திக் கொண்டி ருப்பதை நாம் காண்கின்றோம் அல்லவா?

அவர்களால் பிரிவினையைத் தோற் கடிக்க முடியாது என்பதே யதார்த்தமானது. ஏனெனில், அவர்களால் வளர்க்கப்பட்டதே அது.

"பிரிவினையைத் தோற்கடிப்போம்" என்ற எழுச்சிப் பிரகடனத்துடன் தமிழர்கள் எழுந்து நிற்கிறார்கள் என்பதை உலகம் காண்கிறது. தம்மை வெறுத்து, ஒதுக்கி, அடக்கி, ஒடுக்கி வைத்த பிரிவினையைத் தோற்கடிக்க- அவர்கள் உறுதி பூண்டுள்ளனர் என்பதை யதார்த்த பூர்வமாக ஏற்க வேண்டியது சர்வதேசக் கடப்பாடாகும்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் உதிலை குறிப்பிட்ட கண்டு பிடிப்புகள் எல்லாம் 1864-1943 காலப் பகுதிக்குரியவை. இண்டைக்கு 100 வருசம் கழிஞ்சிட்டிது. இப்பிடி பிள்ளையள் ! ஒரேயடி யாய் ஒதுக்கவேணும் எண்டு நான் சொல் லேல்லை. வாங்கிற ஆக்களும் விற்கிற ஆக் களும் சமூகப்பொறுப்போட, நீண்டகால லாபத்தை நோக்கமாகக் கொண்டு விழிப்போட செயற்படோணும்.

இந்த விழிப்புணர்வை பாடசாலையில இருந்து எல்லா இடத்திலையும் கொண்டு வரோணும். ஏ9 இல எல்லாக் கடையிலையும் கன்டோஸ் வாங்கலாம். ஆனால், கச்சான் அல்வா ஒரிடத்திலையும் இல்லை. குடும்பக் கைத்தொழில்களை முடக்கிப்போட்டு கொழும்பில இயங்கிற பன்னாட்டுக்கொம் பனியளின்ரை ருசியளுக்குப் பலியாகிப்போகி றோம். ஆரியரால தமிழன் கெட்டது கடந்த காலம். கண்மூடித்தனமாய் வாய்ருசிக்கு அடிமையாகி வாழ்விழந்துபோறவன் தமிழன் எண்ட நிகழ்காலம் எங்களுக்கு வேண்டாம் பிள்ளையள்! கோவப்படாமல் தயவுசெய்து சகல தரப்புகளும் தகுந்த நடவடிக்கை எடுக்கிறதுக்கு முன்வரோணும். வாறகிழமை சந்திப்போம் !

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது அங்கு நிலைமை மோசமடைய மீண்டும் இந்தியாவுக்கு வந்தேன். இதோ, இப்போது பதினைந்து வருடங்களாக சென்னையில் தான் இருக்கிறேன். இப்போது நான் ஈழம் செல்ல விரும்பினால் கூட அரசு அனுமதிக்காது. நான் கண்காணிக்கப்பட்டு முடக்கப்பட்டு இருக்கிறேன்." என்கிற காசி ஆனந்தனின் சிரிப்பில் சிலிர்ப்பு வழிகிறது.

"இந்திய அரசு ஏன் உங்களை முடக்கி வைத்துள்ளது?"

"அது ஏன் என்று தான் எனக்கும் தெரியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய தாயார் சுகவீனமாகி ஈழத்தில் இறந்தபோது ஈமக் காரியங்கள் செய்யக்கூட எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. என் மீது சுமத்தப்பட்ட எந்தக் குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் எந்தத் தவறுகளும் நான் செய்யவில்லை.

இந்தியாவும் ஈழமும் நட்புடன் இருக்கவேண்டும் என்று எவ்வளவோ முயன்றோம். எங்களுடைய நோக்கம் ஒன்று தான்... இந்தியா-ஈழத்தின் உறவை வலுப்படுத்துவதும், ஈழத்தில் இந்தியா வின் உதவியுடன் அமைதியைக் கொண்டுவருவதும் அனுமதிப்படை ஏற்படுத்திய காயங்களைத் துடைப்பதும்தான் எங்கள் நோக்கம். நல்லெண்ணத்துடன் செயற்பட்ட என்னை மீண்டும் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்துவது மிகப் பெரிய துன்பமாக இருக்கிறது. என்னுடைய கடவுச்சீட்டு (பாஸ்போட்) முடக்கப்பட்டுள்ளது.

'ஈழம் எங்கள் தாய் நாடு.... இந்தியா எங்கள் தந்தை நாடு' என்று அன்ரன் பாலசிங்கம் சொன்னதைத்தான் நினைவுகூர்கிறேன். தந்தையின் மடியில் தான் என் உயிர் போகவேண்டும் என்றிருந்தால் அதை யாரால் மாற்ற முடியும்?"

"இப்போது இலங்கையில் நிலவும் அமைதி நிலையானதா நிஜமானதா?"

"சிங்களவர்களும் தமிழர்களுமான மோதல் என்பது இன்று நேற்றல்ல... 1500 ஆண்டு காலமாக நடந்து வரும் மோதல். சிங்களவர்களின் நோக்கம் சிக்கலைத் தீர்ப்பதல்ல.... தமிழர்களைத் தீர்ப்பதாக இருக்கிறது. சமாதானம் பேச வந்த நோர்வேயைக் கூட சிங்கள அரசால் சகித்துக்கொள்ள முடியவில்லை. நோர்வே அரசுக்கு எதிரான போராட்டங்களை சிங்களப் பிக்குகளைத் தூண்டி விட்டு சந்திரிகா செய்கிறார். ஒரு பக்கம் அமைதிப் பேச்சுவார்த்தை என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் விடுதலைப் புலிகளை தடை செய்யக் கோரி உலக நாடுகளுக்குக் கடிதம் எழுதுகிறார் சந்திரிகா.

ஒன்று தெரியுமா... வியட்நாம் தன்னுடைய விடுதலைக்குப் போராடியபோது சீனாவும் ரஷ்யாவும் வியட்நாமுக்கு உதவின. பலஸ்தீனத்துக்கு அரபு நாடு களின் ஆதரவு இருந்தது. பங்களாதேஷ் ஆக்கிரமிக்கப்பட்ட போது இந்தியா தன் கைகளில் தாங்கிப் பிடித்தது. ஆனால் 28 ஆண்டு காலமாக விடுதலைப்புலிகள் எந்த நாட்டின் தயவும் இல்லாமல் வீரம் செறிந்த ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அமைதிப் பேச்சுவார்த்தைக் காலத்தைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான புலிகளைச் சிங்கள இராணுவம் கொன்று குவித்துள்ளது. இதனால் நிலவுவது அமைதியா போரா என்ற ஐயம் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது. சுனாமிக்குப் பிறகு உயிரையும் உடமை களையும் வீட்டையும் இழந்த தமிழர்களுக்கு உலக நாடு கள் வழங்கிய உதவிப் பொருட்களைக் கூட கொடுக்காமல் நீதிமன்றத்தின் மூலம் தடுத்து வைத்திருக்கிறது சிங்கள அரசு. ஆழிப் பேரலையின் கோர தாண்டவத்தைப் பார்க்க வந்த கிளிண்டனைக் கூட ஈழப் பகுதிகளுக்குச் செல்ல பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மறுத்திருக்கிறது. மீண்டும் மீண்டும் தமிழர்களை யுத்த முன்னக்குக் கொண்டு செல்வதே சிங்கள அரசின் விருப்பமாக இருப்பதுதான் வேதனை!"

"விடுதலைப்புலிகள் தங்கள் பெயரை சர்வதேச சமூகத்திடம் கெடுத்து வைத்திருக்கிறார்களே?"

"புலிகளை ஒரு போராளி அமைப்பாகப் புரிந்து கொண்டால் இந்த அவப் பெயரின் மீது இருக்கும் அரசியல் புரியும். உலகெங்கிலும் தேசிய இன விடுதலைக்காகப் போராடும் போராளிக் குழுக்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுதான் இது. ஈழ மக்கள் நிராயுதபாணிகளாக நின்றபோது எமது மக்களைப் பாதுகாக்க ஆயுதம் எடுத்தவர்கள் புலிகள்.

புலிகள் இல்லையென்றால், இலங்கையில் தமிழர்களின் கதி என்னவாகியிருக்கும் என்பதை நினைத் துப் பாருங்கள். அமைதிப் படையுடனான மோதல்கூட தங்களைத் தற்காத்துக்கொள்ள நடத்தப்பட்டதுதானே தவிர, இந்தியாவை எதிர்த்து அல்ல!

ஈழ மக்கள் கேட்பதெல்லாம் ஒன்று தான்... பலஸ்தீனப் போராட்டத்தைப் புரிந்துகொண்டதைப்போல, ஈழப் போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கட்டும். புலிகள் தங்கள் மீது சுமத்தப்படுகிற எல்லா களங்கத்தையும் துடைத்தெறிவார்கள்.

எம் மண்ணின் விடுதலையை நாங்கள் மீட்டெடுப்போம். ஏனெனில் சுதந்திரம் என்பது சலுகை அல்ல... உரிமை!"


IIS IIS IIS

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்-2006

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

ஒரு புலமைப்பரிசில் → இரு Diploma

தெரிவு செய்யும் முறை :

இரு வேறுபட்ட முறைகளினூடாக மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

1. போட்டிப் பரீட்சை அடிப்படையில்
இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் போட்டிப்பரீட்சையில் (பொதுஅறிவு, நுண்ணறிவு) தோற்றுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.

2. A/L பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில்
இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் உங்கள் A/L பரீட்சைப் பெறுபேற்றினைக் கொண்டு தெரிவுசெய்யப்படுவீர்கள்.

விண்ணப்பிக்கும் முறை :

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து ரூபா 200 விண்ணப்பக்கட்டணத்துடன் (பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 150 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

காசுக்கட்டளையாக அனுப்பவிரும்புவோர் :
**Director, Institute of Informatics Studies** எனும் பெயரிட்டு பணம் பெறும் நிலையம் **Post Office, Jaffna** எனக் குறிப்பிடவேண்டும்.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி
**Director, IIS, # 100, Clock Tower Road, Jaffna.**

புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| PROGRAMME 1 (P1)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Computer Programming | PROGRAMME 2 (P2)<br>ı. Dip. in Internet Technology<br>). Dip. in Computer Programming |
| PROGRAMME 3 (P3)<br>a. Dip. in Internet Technology<br>b. Dip. in Java Programming | PROGRAMME 4 (P4)<br>ı. Dip. in Internet Technology<br>). Dip. in Hardware Technology |
| PPOGRAMME 5 (P5)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Visual Basic . NET | PROGRAMME 6 (P6)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Desk Top Publishing |
| PROGRAMME 7 (P7)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in Internet Technology | PROGRAMME 8 (P8)<br>a. Dip. in MS Office<br>b. Dip. in AutoCAD |
| PROGRAMME 9 (P9)<br>a. Dip. in Hardware Technology<br>b. Dip. in AutoCAD | PROGRAMME 10 (P10)<br>a. Dip. in Visual Basic . NET<br>b. Dip. in AutoCAD |

A/L 2006 பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காகவே May மாதத்தில் விசேட பிரிவு

IIS இன் 10வது ஆண்டு நிறைவையொட்டி வழங்கப்படும் இப்புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பல்வேறு சிறப்புச் சலுகைகளை மாணவர்கள் அனுபவிக்க முடியும்

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

கணனிக்கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்

- IIS தலைமை அலுவலகம்
- IIS City Campus, நாவலர் வீதி, யாழ்.
- IIS Office Automation, பிரதான வீதி, யாழ்
- PC Paradise, யாழ்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.
- ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்.
- நாயகபாலன் புத்தகசாலை, மானிப்பாய்.
- துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.
- பொதிகை புத்தகசாலை, கொம்பியூட்டர் கிரபிக்ஸ், சாவகச்சேரி.
- மொடேண் ஸ்ரோர்ஸ், நெல்லியடி (சி-12986)

INSTITUTE OF INFORMATICS STUDIES IIS

HEAD OFFICE :
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831 Fax : 021 222 6933

BRANCH :
Nelliady, Karaveddy
T.P : 021 226 3335

## வீடு

# வாழநினைத்தால் வாழலாம்

**துன்பங்களே எம் வாழ்வுக்கு உறுதி ஊட்டும் தூண்கள். வெறுமனே இன்பத்தை மட்டும் அனுபவிக்க நினைக்கும் மனித மனம் இன்பத்தின் பெருமையை உணரமுடியாது.**

வாழ்வில் ஏற்படும் சுமைகளை தாங்கமுடியாமல் நாம் யாவரும் துவண்டு விழுவது இயற்கையே. ஆயினும் விதியையும் மதியால் வெல்லலாம் என்பதைப் போல் எம்முடைய புத்தி சாதுரியமான செயற்பாட்டினால் எம் சுமைகளை சுகமானதாக்கிக் கொள்ளலாம்.



எந்த விடயமானாலும் அதற்கான தீர்வு நிச்சயமுண்டு. நம்மில் பலபேர் வாழ்வில் ஏற்படும் சின்னச் சின்ன விடயங்களைக்கூட தாங்குகிற சக்தியின்றி நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். "மலையே வந்தாலும் தலையே சும" என்ற நிலைப்பாடான மனம் எமக்கு இருந்தால் சுமைகள் எமக்கு சுமையாக முடியாது. எந்தவொரு மனிதனும் பலவிதமான துன்பங்களை வாழ்வில் அனுபவிக்கின்றானோ அவனே வாழ்வில் உறுதி உடையவனாகிறான்.

துன்பங்களே எம் வாழ்வுக்கு உறுதி ஊட்டும் தூண்கள். வெறுமனே இன்பத்தை மட்டும் அனுபவிக்க நினைக்கும் மனித மனம் இன்பத்தின் பெருமையை உணரமுடியாது. துன்பம் இல்லா வாழ்க்கை உப்பு இல்லாப் பண்டம். எம்முடைய உணவுக்கு உப்பு அளவோடு இருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அந்த உப்பினால் உணவு கழிக்கப்படுகிறது. அது போன்றுதான் எம் வாழ்வும். பலதரப்பட்ட துன்பங்கள் எம் மனதை துளையிடலாம். ஆனால் அவற்றை தாங்கும் சக்தி பெற்றவர்களாக எம்மை நாம் மாற்றவேண்டும்.

இன்பம் மட்டுமே வாழ்வு என்றால் இவ்வுலகில் மனிதர்களே இல்லாமல்தான் இருக்கவேண்டும். ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு பிரச்சினை. பிரச்சினையின் வடிவம் மாறலாம் பிரச்சினை இல்லாமல் யாரும் வாழ்ந்ததாக நாம் அறிந்தோமா?


புண்பட்டான் பண்பட்டான் என்பதைப் போல் ஒருவன் துன்பப் பட்டுத் துடிக்கும் வேளைகளிலெல்லாம் அவன் பட்டுப்போகவில்லை பண்பட்டுக்கொண்டிருக்கிறான் என்றுதான் சொல்லவேண்டும்.

மனிதனாகப் பிறந்த நாம் யாவற்றுக்கும் முகம் கொடுத்தே ஆகவேண்டும். அப்போதுதான் எங்கள் பிறவியின் பொருள் புலப்படும்.

எந்தத் தீமைக்குள்ளும் சிறு நன்மை உண்டு என்பதை நாம் ஒரு நிமிடமும் மறக்கக்கூடாது. எமக்கு ஏற்படும் எந்த விடயமானாலும் அதனை நாம் நினைக்கும் நோக்கில் தான் இருக்கிறது. சிலர் சும்மா காரணமில்லாமல் தம் மனதை குழப்பிக் கொண்டிருப்பார்கள். எம் மனம் நிலை குலையுமளவுக்கு எம் செயற்பாடுகள் இருக்கலாமா?

எம்மிடம் சகலதும் சரியாக இருந்தும் அவற்றை சரியாகத் தெரியாமல் முழிக்கிறோம். ஆனால் வாழ்வு முழுவதும் சகல வழிகளிலும் தடைகள் இருக்கையிலும் தன்னம்பிக்கையை தளரவிடாமல் வாழ்வை மகிழ்வாய் ஓட்டி வாழப்பழகிக் கொள்ளவேண்டும். இருப்பதை நாமும் உண்டு பசியோடு துடிக்கும் மனித உறவுகளையும் உண்டு மகிழவைப்போம். பிறரும் வாழவேண்டும் என்று நினைத்தால் நாமும் வாழ்வோம்.

**சு.சிவாஜினி**



# மாறுங்கள்... மாற்றுங்கள்..!

**தீய குணத்தினால் எதிர்கால உயர்வை குழிதோண்டிப் புதைக்காதீர்கள். நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு தீங்கு எண்ணாமல், நாம் எவ்வாறு முன்னேறலாம் என்பதை மட்டும் மனதில் கொண்டு, ஏன் வாழலாகாது?**

எவர்களிடம் இனிய குணம் உள்ளதோ அவர்களை நாம் நேசிக்கின்றோம். பொறாமை,கோபம், ஏமாற்றுவித்தை இருக்குமானால் அவர்களை நாம் வெறுக்கின்றோம். சிலரைப் பார்த்தவுடனே வெறுக்கின்றோம். சிலரைப் பார்த்தவுடனே விரும்புகின்றோம். இதற்கு இவர்களிடம் உள்ள நற் குணமும், நற்பண்புமே காரணமாகும். தீய குணம் உள்ளவர்களை எல்லோரும் வெறுக்கத்தான் செய்வார்கள். தீயகுணங்களை வெறுப்பது உலக இயல்புதான்.

தீயகுணம் உள்ளவர்கள் நல்ல குணம் கொண்டவர்கள் போன்று பாவனை செய்தாலும், குறுகிய காலமே அவர்களால் அவ் நாடகத்தை நடிக்கமுடியும். பின் அவர்களுடைய தீயகுணங்கள் அவர்களை அறியாமலேயே கட்டவிழ்த்தப்பட்டுவிடும்.

இத் தீயகுணங்களின் விளைவுகளால்தான் வீண்பிரச்சினைகள், சண்டைகள் உருவாவதற்குத் தூண்டுகோலாக அமைகின்றது. சில சிறிய பிரச்சினைகள் கொலை வரை சென்று முடிவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதற்கு அவர்களுடைய அதீத கோபமே காரணமாகும். கோபம் வரத்தான் வேண்டும், அதற்காக மின்னல் வேகத்தில் கோபம் வரக் கூடாது. இவ்வாறான குணவியல்பு உள்ளவர்கள் மனவிரக்தி, வாழ்க்கையில் வெறுப்பு போன்ற அம்சங்களிற்குள்ளாகுவார்கள்.

உங்களது தீய குணத்தினால் எதிர்கால உயர்வை குழி தோண்டிப் புதைக்காதீர்கள். நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு தீங்கு எண்ணாமல், நாம் எவ்வாறு முன்னேறலாம் என்பதை மட்டும் மனதில் கொண்டு, ஏன் வாழலாகாது? எம்மிடமுள்ள நல்ல எண்ணங்களினால் பிறர் நன்மையடைய வேண்டும் என்பதை மனதில் கொண்டு ஏன் நாம் பிறரிற்கு உதவி செய்யலாகாது? இது அணை வருக்கும் சாத்தியமான விடயம் தானே! ஏன் இதை சிலர் சிந்திக்க மறுக்கின்றனர்.

தீயகுணம், தீய எண்ணம் உள்ளவர்கள் தமது தீய செயல்களை முற்றிலும் இல்லாது ஒழித்து, சமூகத்தவர்களிற்கு கருணையுள்ளம் கொண்டவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும், நற்பண்புள்ள நேர்மையான, உண்மையான மனிதர்களாகவும் வாழ்ந்து காட்டுங்கள்.

**த.யாழ்வேங்கை**



# உன்னால் முடியும்..!

**எந்தத் தோல்வியையும் எதிர்கொண்டு செயற்படும் வல்லமை உங்கள் மனதில் முதலில் முளைவிடவேண்டும்.**

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்', 'முயற்சி திருவினையாக்கும்' என்பதெல்லாம் நல்லோர் எமக்கருளிய வார்த்தைகள். இந்த முயற்சியை சினிமா கூட எமக்கு பாடலாகத்தருகிறது. 'முயற்சி என்ற ஒன்றை மட்டும் மூச்சுப் போல சுவாசிப்போம்'. ஆம்,அந்த முயற்சி இருந்தால் மனிதன் முழு மனிதனாக மாறிவிடுவான்.

ஆமையும்,முயலும் பந்தயத்தில் ஆமை வெல்லவில்லையா? அது போல, எந்தவொரு செயலானாலும் 'என்னால் முடியும்' என்று மனதில் எண்ணுங்கள், நிச்சயம் வெற்றியடைவீர்கள்.

ஒரு காரியத்துக்குச் செல்லும் போது உங்கள் மனநிலையை நன்கு தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். 'இந்தக் காரியத்திலும் நிச்சயம் நான்தான் வெல்லுவேன்' அப்படி எண்ணிச்செயற்பட்டால் வெற்றி உங்கள் பக்கமே. முயற்சியின் பயனும் எட்டிவிடும். அதனை விட்டுவிட்டு 'ஐயோ என்னைவிட அவ(ன்)ள் நன்கு செய்வாளே(னே)' என்று நினைத்து உங்கள் மனதை நீங்களே குழப்பிக்கொள்ளாதீர்கள். அது உங்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லாது முயற்சிக்கு மிகத் தடையாக இருக்கும்.

எந்தத் தோல்வியையும் எதிர் கொண்டு செயற்படும் வல்லமை உங்கள் மனதில் முதலில் முளைவிட வேண்டும். அவ்வாறு வளருமானால் அமெரிக்காவின் நாசா விண்ணாய்வு நிறுவனத்திலும் பெரியதொரு ஆய்வு நிறுவனமொன்றை எங்கள் நாட்டிலும் உருவாக்கிவிடலாம். உண்மையல்லவா.....?

ஆகவே, வெற்றி தோல்விகளை சமமாக எண்ணி எம் தேசத்தைப் புனரமைக்கும் நோக்கில், முழு மனித ஆற்றலையும் பயன்படுத்தி, மூச்சுப் போன்ற முயற்சியால் சுவாசிப்போம்.

**இ.தாரணி**

## மாஸ்மலோ




தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சீனி | -500 கிராம் |
| ஜெலற்றீன் | -30 கிராம் (1பைக்கற்) |
| தண்ணீர் | -2 கப் |
| கலரிங் | -விரும்பிய அளவு |
| எலுமிச்சம்பழச் சாறு | -2 தே.க |
| கோன் பிளவர் | -அளவாக |

செய்முறை:-

★சீனியைத் தண்ணீர் சேர்த்துப் பாகு காய்ச்சவும்.

★பாகு நூல் பதமானதும் இறக்கி வேறொரு பாத்திரத்தில் ஊற்றி ஜெலற்றீனை 1/4 கப் தண்ணீரில் கரைத்துப் பாகுடன் சேர்த்து நன்கு ஆற விடவும்.

★பின் முட்டை அடிகருவி அல்லது கேக் அடிகருவியினால் நூன்றாக அடிக்கவும்.

★பின் நுரையாக இறுகும் பருவத்தில் கலரிங், எலுமிச்சம் பழச் சாற்றை சேர்க்கவும்.

★பின் ஒரு தட்டில் கோன் பிளவரை லேசாகத் தூவி அத்தட்டில் கலவையை ஊற்றி குளிரூட்டியில் வைக்கவும். அல்லது தண்ணீர்ப் பாத்திரத்தின் மேல் வைக்கவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்— 71**

பெயர்:.................................................

முகவரி:.................................................

.................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# உளவியல் நவீனம்...


## அத்தியாயம்- 17

### பகுதி -70

அப்போ டிப்ஸு க்கு வாசிக்கமுடியும் என்று அவனுடைய தகப்பனுக்குச் சொன்ன போது எனக்கு மூளை கழன்று போச்சு என்று அவர் சொன்னவர். எந்த இரண்டு வயதுப் பிள்ளையும் வாசிக்கக் கற்றுக்கொள்ள முடியாது என்று அவர் சொன்னவர். ஆனா அவனுக்கு வாசிக்க முடியும் என்று எனக்குத் தெரிந்திருந் தது. நான் தான் அதை அவனுக்குக் கற்றுக் கொடுத்தேன்''

"அவன் எப்படி வாசிக்கக் கற்றுக் கொண்டான்?"

"அரிச்சுவடி எழுத்துகளின் தொகுதி கள் இரண்டை அவனுக்கு வாங்கிக்கொடுத்தன். தனித்தனியாக வெட்டி எடுக்கப்பட்ட எழுத்துக் கள் அவை. நான் ஒவ்வொரு எழுத்தாக எடுத்துக்காட்டி அது என்ன எழுத்து என்று



சொல்லி, அதனை ஒலிப்பது எப்படி என்றும் கூறினன். பிறகு அவற்றை அவற்றினுடைய ஒழுங்கில் வரிசையாக அடுக்கிவிட அவன் அங்கேயே அமர்ந்து அதுகள பார்த்துக்கொண்டி ருந்தான். பிறகு அதுகளை குழப்பி விட்டு, நான் செய்தமாதிரி செய்யும்படி அவனிடம் சொன்னன். ஆனால் அவன் அறையை விட்டு வெளியே ஓடிவிட்டான். பிறகு நான் முதல் செய்தது போல் எழுத்துகள ஒழுங்கா அடுக்கி விட்டு, அவற்றின் அருகே மற்ற எழுத்துகள் இருந்த பெட்டியையும் வைத்துவிட்டன். பிறகு நான் அறைக்கு வெளியே போய்விட்டன். அவன் திரும்பி வந்து எழுத்துக்களைப் பார்த்தான். நான் போய் ஒத்த எழுத்துக்கள அருகருகே அடுக்கினன். அந்த எழுத்துகள் எதெதெண்டு சொன்னதோட, அதுகளட மேல் கீழ் பக்கங்கள் எவை என்று சொல்லிச் சொல்லியே அடுக்கினன். பிறகு நான் இரண்டாவது தொகுதிய குழப்பி விட்டு, நான் செய்ததுபோல ஒத்த எழுத்துக்கள அருகில அடுக்கச் சொன்னன்.

மறுபடியும் அவன் அறைக்கு வெளியே ஓடிவிட்டான். அவனை அவன்ர பாட்டில் விட்டுவிட்டால், அவன் மீண்டும் வந்து அதுகளப் பார்ப்பான் என்று தெரிந்து கொண்டே நானும் அங்கிருந்து போய்விட்டேன். மீண்டும் ஒரு முறை இதேபோல் செய்தேன். மூன்றாம் முறை அவனை அவன்ர பாட்டில் விட்டுப் போனபோது, ஒத்த எழுத்துக்களை தானாகவே அருகருகே அடுக்கி வைத்திருந் தான். மிக விரைவிலேயே தானாக அவற்றை அவற்றின் ஒழுங்கில் அடுக்கக்கூடியவனாக ஆகிவிட்டான்.

"பிறகு எல்லாவகையான படங்களை யும் அவனுக்கு பெற்றுக்கொடுத்தன். ஒவ்வொரு படத்திலயும் என்ன இருக்குதெண்டு அவனுக்குச் சொல்லி அதை படத்தில எழுதியும் விட்டன். பிறகு வெட்டியெடுத்த வகை எழுத்துக்களைக் கொண்டு அந்தச் சொற்களை எழுத்துக் கூட்டிக் காட்டினன். விரைவிலேயே டிப்ஸும் அதைச் செய்யத் தொடங்கினான். ஒரு வார்த்தையை எழுத்துக்களைக் கொண்டு அமைத்துவிட்டு அதற்குரிய சரியான படத்தை அதற்கருகில் வைப்பான். அவனட வாசிப்புத் திறனை வளர்ப்பதா அது இருந்தது. பிறகு நான் சொற்களும் படங்களும் இருக்கிற பல புத்தகங்கள வாங்கிக் கொடுத்தேன். சின்னச் சின்னக் கதைப் புத்தகங்கள அவனுக்கு வாங்கிக் கொடுத்து திரும்பத் திரும்ப அவற்றை அவனுக்கு வாசித்துக் காட்டினன். பாடல்கள் மூலமான விளையாட்டுகள், கதைகள், கவிதைகள் கொண்ட இசைத்தட்டுக்களை வாங்கிக் கொடுத்தன். எப்போதுமே நான் புதிய புதிய விசயங்கள முயற்சி செய்துகொண்டிருந் தேன். இசைத்தட்டுகள ஒலிக்க விடுகிற கருவிய இயக்க அவன் கற்றுக்கொண்டான். இசைத்தட்டுகளின்ர தலைப்புகள வாசிக்கவும் கற்றுக்கொண்டான். சின்னக்கோச்சி பற்றின இசைத்தட்டைக் கொண்டு வாங்கோ என்று நான் சொல்லுவேன். அவன் தன்ர இசைத்தட்டுகளுக்குள்ள தேடிச் சரியான இசைத்தட்ட எடுத்து வந்து எனக்கு முன்னால மேசையில வைப்பான். எப்போதுமே அதச் சரியாச் செய்வான். 'மரம் எண்டு சொல்லுற வார்த்தைய கொண்டுவாங்க' எண்டு சொன்னா அவன் அத கொண்டு வருவான். நான் கேட்கிற எந்த வார்த்தையையும் கொண்டு வருவான்.

கொஞ்சக் காலத்துக்குப் பிறகு அவன் வாசிக்கிறான் போலத்தான் இருக்குது என்று அவனது தகப்பனும் ஏற்றுக்கொண்டார். டிப்ஸிட பத்தகங்கள தகப்பன் பார்ப்பார். சில நேரங்களில அவர் டிப்ஸுக்கு புத்தகங்கள வாசிச்சும் காட்டுவார். ஏதாவது பொருட்கள அவர் கொண்டு வந்து அவை என்ன பொருட்கள் எண்டு விளக்கமா சொல்லுவார். பிறகு டிப்ஸ் வந்து எடுத்துப் பார்த்திட்டு அவன்ர அறைக்கு எடுத்துப் போறதுக்கெண்டு அங்கேயே விட்டுப்போவார். பிறகு இலக்கங்கள சொல்லிக்கொடுக்கத் தொடங்கினன். அது களையும் அவன் விரைவாகக் கற்றுக்கொண் டான். அவன் நிறைய முணுமுணுப்பான். அவன் தனக்குள்ளேயே கதைத்துக்கொள்கிறான் என்று நான் நினைக்கிறனான். ஆனா எப்பவுமே எங்க ்ங்குள்ள நெருக்கம் இருக்கயில்ல. அத தான் அவனப் பற்றி இவ்வளவு கவலைப்படுகிறன்''

அவளுடைய குரல் மெது மெதுவாய் தேய்ந்து அமைதிக்குள் போனது.




யன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்தபடி நீண்டநேரம் அமர்ந்திருந்தாள். நான் எதுவுமே சொல்ல வில்லை. டிப்ஸுடனான தனது வாழ்வு பற்றிய அவளது வெளிப்பாட்டில் ஒரு வகைப் பயங்கரம் இருந்தது. அந்தப் பிள்ளை தன் சுயத்தையும் கருத்துக்களை உள்வாங்கும் திறனையும் இந்தளவுக்கு பேணிக்கொண்டதே பெரிய ஆச்சரியமாக இருந்தது. அவன் எதிர்கொண்ட அழுத்தங்கள் எந்தப்பிள்ளை யையும் தற்பாதுகாப்புக்கூடு ஒன்றினுள் விரட்டி விடப் போதுமானவையாக இருந்தன. தான் டிப்ஸுக்கு வழங்கும் இடுபணிகளை டிப்ஸால் கற்றுக்கொள்ளமுடியும் என்பது குறித்து அவள் தனக்குத்தானே மெய்ப்பித்துக்கொண்டிருந்தாள். ஆனால், தனது மகனோடு தனக்கு நெருக்க மான உறவு இல்லை என்பதை அவள் உணர்ந்துகொண்டிருந்தாள். சமநிலைப்படுத்தப் பட்ட உணர்வு பூர்வமான வாழ்வினை புறந்தள்ளிவிடும் அளவில் ஒரு பிள்ளையினு டைய இயலுமையை துர்பிரயோகம் செய்வ தென்பது அப்பிள்ளையை நாசமாக்கிவிடக் கூடும்.

"டிப்ஸின் மீது கவனம் செலுத்த வென்றே அவனது சகோதரியை தூர இருந்த பாடசாலை ஒன்றுக்கு... என்னுடைய சகோதரி யுடைய பாடசாலைக்கு அனுப்பிவைத்தோம்'' தாழ்ந்த தொனியில் வந்தது அவள் குரல்.

"இந்த அடைவுகள் எல்லாம் மிக முக்கியமானவை என்று ஏன் எண்ணினேன். என்று இப்போதும் கூட நான் என்னைக் கேட்டுக் கொள்கிறேன். தன்னைத்தானே எனக்கு மெய்ப்பித்துக் காட்டும்படி அவனை விரட்டத் தொடங்கியபோது அவன் ஒரு குழந்தையாகவே இருந்தான்.டிப்ஸை குழந்தையாகவே இருக்க நான் ஏன் விடவில்லை? என்னுடைய பிள்ளை யாக இருக்கவிட்டு அதில் ஏன் மகிழ்ச்சி கொள்ளவில்லை. அவன் என்னை நிராகரித்து விட்டான் என்று உங்களுக்குச் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. ஏன்? என்னுடைய சொந்த உணர்வுகளையே நான் ஏன் நிராகரித்தேன்? உணர்வுபூர்வமான ஆளாக இருக்க நான் ஏன் பயப்படுகிறேன்? எனக்கும் எனது கணவருக்குமிடையே வளர்ந்து வந்த உறவைச் சீர்குலைவுக்கான பழியை டிப்ஸ்மீது ஏன் தீர்த்துக்கொண்டேன்? ஓம் அதுதான் நடந்தது. ஒரு தாய் வகிக்கும் பாத்திரம் அவ் வளவு திறமையான ஆளுக்கு • ஆர்வமூட்டு வதாகவோ அல்லது அவரைப் பிணைத்து வைத்திருக்கக் கூடியதாகவோ இருக்காது என்றே நான் நினைக்கிறேன். பிள்ளைகள் பெற்றுக்கொள்வதை ஒருபோதுமே அவர் விரும்பியதில்லை. எங்கள் மீதுதான் தவறு என்பதை பொய்ப்பிக்க நாங்கள் போராடினோம். குற்ற உணர்வு, தோல்வி, விரக்தி, தவறுதல் இவைதான் எங்களுடைய உணர்வுகளாக இருந்தன. அவற்றை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நாங்கள் டிப்ஸ் மீதே பழிசொன்னோம். பாவம் டிப்ஸ். எங்களிடையே பிசகிப்போன எல்லாமே அவனுடைய தவறாகவே ஆகின. எல்லாமே அவனுடைய தவறாகப் போயின. எப்போதாவது நாங்கள் அவனுடன் ஒட்டுறவாகப்போக முடியுமா? என்று நான் ஐயப்படுகிறேன்''

"இந்த உறவிலே முனைப்பானதும், குழம்பிப்போய் விட்டதுமான பல உணர்வுகள் பின்னிப்பிணைந்திருக்கின்றன'' என்று தொடங் கிய நான், "அவற்றுள் சிலவற்றை நீங்கள் வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். உங்களுடைய கடந்தகால உணர்வுகளைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். உங்களுடைய இப்போதைய உணர்வுகள் என்ன?'' என்று கேட்டேன்.

"எனது... உணர்வுகள்... இப்போ... மாறிவிட்டன'' மிக மெதுவாகச் சொன்னாள். தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கின்றன. டிப்ஸைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். நான் அவனை நேசிக்கிறேன், இப்போது ஒவ்வொரு நிமிடமும் அவன் தன்னைத்தானே எனக்கு மெய்ப்பித்துக்கொள்ள வேண்டியதாக இல்லை. ஏனென்றால் அவனும் மாறிவிட்டான். அவனே முதலில் மாறவேண்டியிருந்தான். என்னைவிட அதிகம் மாறவேண்டியிருந்தான். அவனுடைய தகப்பனாரின் உணர்வுகளும் மனப்போக்குகளும் மாறிவிட்டன. நாங்கள் எல்லோருமே எங்களைச் சுற்றி உயரமான சுவர்களை எழுப்பிக்கொண்டிருந்தோம். டிப்ஸ் மட்டுமில்லை. நானுந்தான். என்னுடைய கணவருந்தான். இந்தச்சுவர்கள் நொருங்கிவீழ்ந் தால்... அவை நொருங்கிக்கொண்டுதான் இருக்கின்றன... நாங்கள் முன்னெப்போதையும் விட மகிழ்ச்சியாகவும் நெருக்கமாகவும் இருப்போம்''

"மனப்போக்குகளும் உணர்வுகளும் மாறுகின்றவைதான்'' என்றுவிட்டு, "நீங்கள் அதைப் பட்டறிந்துகொண்டிருப்பீர்கள்'' என்றேன்.

"ஓம். கடவுளுக்கு நன்றியாக... நன்றாகப் பட்டறிந்துவிட்டேன்'' என்று அவள் சொன்னாள். (தொடரும்)

---

# உலகை ஆட்டிப் படைக்கும் புதிய புதிர் விளையாட்டுக்கள்

**புதிர் நான்கிற்கான விடையினை சரி பார்த்துக் கொள்ளுங்கள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 6 | 5 | 1 | 7 | 9 | 8 | 4 |
| 5 | 9 | 4 | 3 | 6 | 8 | 1 | 7 | 2 |
| 8 | 1 | 7 | 2 | 9 | 4 | 5 | 6 | 3 |
| 4 | 7 | 9 | 6 | 2 | 3 | 8 | 5 | 1 |
| 6 | 5 | 3 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 |
| 1 | 8 | 2 | 4 | 7 | 5 | 3 | 9 | 6 |
| 9 | 2 | 1 | 7 | 5 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 4 | 8 | 1 | 3 | 9 | 6 | 2 | 5 |
| 3 | 6 | 5 | 8 | 4 | 2 | 7 | 1 | 9 |

**புதிர் -05**

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின் பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத் துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங் கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரை யான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகி யிருப்பது சுடோக்கு ஆகும்.

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங் கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எது வும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையான தெல்லாம் தர்க்கபூர்வமானமன மும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப் பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 3 | | 6 | | | 7 |
| | | | | 8 | 5 | | 2 | 4 |
| | 9 | 8 | 4 | 2 | | 6 | | 3 |
| 9 | | 1 | | | 3 | 2 | | 6 |
| | 3 | | | | | | 1 | |
| 5 | | 7 | 2 | 6 | | 9 | | 8 |
| 4 | | 5 | | 9 | | 3 | 8 | |
| | 1 | | 5 | 7 | | | | 2 |
| 8 | | | 1 | | 4 | | 7 | |

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# தென்கிழக்காசிய உணவகங்கள்

ஐரோப்பாவில் புலம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை உயர்வதினால் தென்கிழக்காசிய உணவகங்களின் தேவை அதிகரித்துள்ளது. எனவே இவைஎல்லாம் கலாசாரங்களையும் இணைக்கும் பாலமாகவே உள்ளது. ஆசிய நாடுகளில் சோறு பிரதான உணவாகிறது. ஆனால் மேற்கத்திய நாடுகளில் கோதுமை பண்டத்திற்குத்தான் முதலிடம். இந்தியாவில் வடக்கிற்கும் தெற்கிற்கும் உணவில் பல வித்தியாசங்கள் உள்ளன.

தமிழ் நாட்டில் தோசைக்கும், இட்லிக்கும் இருக்கிற மதிப்புப் போல் வட இந்தியாவில் ரொட்டிக்கு உண்டு. மத்திய கிழக்கு நாடுகளில் இறைச்சி வகைகளை ரொட்டியுடன் சேர்த்து உண்பார்கள். அமெரிக்காவில் விரைவாக எடுத்துச் செல்லக்கூடிய உணவாக கருதப்படும் மெக்டொனலட் இந்தியாவில் விலை அதிகம் என்ற காரணத்தால் குடும்பத்தாரோடு போயிருந்து உண்ணும் உணவகமாக (Family Restaurant) கருதப்படுகின்றது.

வெளிநாட்டு பற்பசைகளில் மூலிகைக்கள் கலக்கப்படவில்லை என்பதனால் பல இந்தியர்கள் உள்ளூர் மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட பற்பசைகளை விரும்பிப் பாவிக்கிறார்கள். கெளொக்ஸ் Kellogs என்ற தானிய உணவானது மேற்கத்திய நாடுகளில் காலை உணவாக பாவிக்கப்பட்டாலும் இந்தியாவில் அதற்கு காலை உணவிற்கான சந்தையிருக்கவில்லை. அதனால் அப்பொருளை சற்று வேறு நிலையில் நினைத்த நேரம் கொறிக்கக் கூடிய உணவாக விற்றனர்.

Tropican Juice என்ற ஒரேஞ்சுச்சாறை சந்தைப்படுத்தி அதன் கலவையை மாற்றி அமைத்து ஆரோக்கியத்திற்கான சுவை என விற்பனை செய்கிறார்கள். காரணம் இந்தியர்கள் கலவை சேர்க்கப்பட்ட குடிபானத்தை அவ்வளவுக்கு விரும்பி அருந்துவதில்லை. ஆனால் தேகநலம் என்று வந்தவுடன் அப்பிள்,திராட்சை, ஒரேஞ்சு போன்றவற்றை சாறு பிழிந்து குடிப்பார்கள். அதனால் சந்தையை பிடிக்கமுடிந்தது.

இந்தியர்கள் பொருளின் மதிப்பிற்கும், மத உணவுகளுக்கும் முதியோர்களின் மதிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுப்பதனால் விற்பனை செய்யும் பொருளானது இம் மூன்றுக்கும் எதிரானதாக இருப்பின் சந்தையைப் பிடிப்பது கடினம். அமெரிக்காவில் மெக்சிக்கோ நாட்டினரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அத்தோடு கூட அமெரிக்க கறுப்பினத்தினரும் ஆசியர்கள் தொகையும் அதிகரிக்கிறது. அதனால் வெள்ளைக்கும் கறுப்புக்கும் இடைப்பட்ட சருமத்திற்கான அழகு சாதனப் பொருட்களின் சந்தை வளர்கிறது.

இந்தியப் பெண்கள் தமக்கு இயற்கையாக கிடைத்த அழகை மேலும் மெருகுபடுத்த விரும்பினாலும் இராசயனம் கலந்த அழகுசாதனங்களை அவ்வளவாகப் பாவிக்க விரும்புவதில்லை. தமது சருமம் மிருதுவானதாகவும் இறுக்கமானதாகவும் ஊடுருவும் ஊதாக் கதிர்களில் இருந்து பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்க பொருத்தமான அழகு சாதனங்களை விரும்பி வாங்குவதால் அதற்கென தனியான சந்தை உண்டு.

இங்கிலாந்தில் வெள்ளையர்கள் விரும்பி உண்பது சீன, இந்திய உணவு வகைகளே. கறிஎன்று விருப்ப்மாக அவர்கள் சுவைத்து உண்பதும் கோழிக்கறியும், ஆட்டுக்கறியும்தான். சீன நூடுல்ஸ"ற்கும் தனிமதிப்புண்டு. சைனாடன் என லண்டன் மத்தியில் பரபல்யமான சொஹோ, சதுக்கத்திற்கருகில பல சீன உணவகங்கள் போட்டிப் போட்டுக் கொண்டு வணிகம் செய்கின்றன. அதில் நிரம்பி வழிகின்றார்கள் வெள்ளையின வடிக்கையாளர்கள். ஆசிய உணவுகளின் விலை குறைவு. அதுவும் வாடிக்கையாளர்களை கவர்வதற்கு முக்கிய காரணமாகும்.

மேற்கத்திய உணவுகள் இந்தியாவிற்குள் நுழைந்து பல உணவகங்கள் பெருகுகின்றன. அதே போல் லண்டன் மற்றும் அமெரிக்க நகரங்களில் ஆசிய உணவகங்களின் எண்ணிக்கை வளர்கின்றது. உணவுக் கலாசாரத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதற்கு பிறநாட்டு மனித வளத்தின் ஊடுருவலும் ஒரு காரணமாகும்.

இ.றஜித்




''மெய்யேப்பா-மூத்தவளுக்கும் பேப்சுக்கால் சரி வந்திட்டுது. இளையவளின்ர பாட்டையும் பார்த்தா.... கரைச்சல் குறையும்.

''ம்...ம்..முதல் இவள் கரை சேரட்டும்.பிறகு அவளின்ரை பாட்டைப் பார்க்கலாம்."

''என்ன இப்பிடிச் சொல்லுறியள், செலவுகள் கூடிக்கொண்டு போறது தெரியாதே. உதுக்குத்தான் முதலே சொன்னனான் இன்னும் இரண்டு வரியம் போகட்டுமெண்டு. கேட்டாத் தானே''.

"பைத்தியம் மாதிரிக்கதையாத பிறகு குமர்முத்தி குரங்காப்போன கதையாய், நாளைக்கு அவளுக்கு மாப்பிழை தேட ஏலுமே."

"ம்..இப்ப மாப்பிழை தேடாட்டி என்ன? மெல்ல மெல்ல வேலையில முன்னுக்கு வரட்டன். அதுக்குப்பிறகு நல்ல வருமானத்தில ஒரு வரன் பார்த்திருக்கலாம்."

''பேராசை பெருநட்டம். பொம்பிளை பிள்ளையள வச்சிருக்கிற மாதிரியே கதைக்கிறாய்''

''பேராசை எனக்கோ உங்களுக்கோ-சும்மா கண்ட கண்ட பிளானுகளைப் போட்டுக் கொண்டு அவதிப்படுறன்''எண்டு சொல்லப் போறியள்''

"பின்ன என்னடி ரெண்டு குமர் வீட்டில இருக்க விட்டிட்டுப்போய் மோன் வெறும் பொம்பிளை எடுத்திட்டான். உன்ர வளப்பு"

"ஓகோ.. அதென்னப்பா அவன் ஓட்டப் போட்டியில பரிசெடுத்த நேரம் உங்கடபிள்ளை, பொம்பிளை எடுத்தா என்ரபிள்ளையே. ஆணாதிக்கம் ஆணாதிக்கம்..."

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –143




நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை நீர் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–143

......................................................................

......................................................................

......................................................................

......................................................................

பெயர் : ......................................................

முகவரி : ......................................................

......................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –142



ஆர்.ஆர்.சீலா,
ஆயப்பகுதி,
புளியங்குளம்.

### பரிசுக்குரிய வரிகள்

*உலக சிறுவருக்கு உரிமைதேடும் வல்லரசுகளே!*
*உன்கரங்களே! சிறுவர்களை சிறைப்படுத்தும் போது*
*மாற்றானை பிடித்து சிறுவர் உரிமை மீறல்*
*என ஏன்? சிறைப்படுத்துகின்றாய்?*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இளையவனே என்ன*
*இப்போதே சிறைக்கூட்டுப் பயிற்சியா?*
*ஏன் நீயும்*
*தமிழ்க்குடியில் பிறந்தவனா?*

விருத்தி,
புதுக்குடியிருப்பு.

*விந்தை உலகிலே வினோதமாய்-சின்னஞ்*
*சிறுவர்கள் சாதனைகள் பல செய்து*
*தடைகள் பல உடைத்து நாட்டில்*
*தலைவர்களாய் நாம் மிளிர்வோம்.*

வே.அகமொழி,
வட்டக்கச்சி.

*தாயே கொடிய எதிரிப்படைகளின் கொடுமைக்கு பயந்து*
*கண்மூடி நீயிருந்தால்-உந்தன் கண்மணிகள்*
*சுதந்திரமாய் வாழ்வது எப்படி? துணிந்து நீ*
*தூக்கிடு துப்பாக்கி-தூள்தூளாகும் எனி எதிரிபடை.*

சு.சிவாஜினி,
ஸ்கந்தபுரம்.

*வீசிய புயலில் வீடிழந்தோம்-கொட்டிய*
*மழையில் உணவிழந்தோம்- எழுந்த*
*பூகம்பத்தில் எம் நகரமிழந்தோம்-இன்னும்*
*எத்தனை நாள்? இயற்கையின் சீற்றத்தின் முன்.*

தி.சதன்,
கிளிநொச்சி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்


அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# குமரகுருவில் தீபாவளித் திருவிழா!



20% சிறப்புத்தள்ளுபடியுடன் மாபெரும் மலிவு விற்பனை!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
காஞ்சிபுரசாறிகள். பட்டுவேட்டிகள். சல்வார். சோலிகிட்
மற்றும் சிறுவர்கள்.பெரியோர்களுக்கான ஆடைகளை
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள விரையுங்கள்... குமரகுருவிற்கு....



## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5971

(சி-12989)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

உள்நாட்டு அழைப்புகளுக்கு 5/-

Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing,Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories.

யாழ். - கொழும்பு, கொழும்பு - யாழ். விமான டிக்கெட்டுக்களும் செய்துகொடுக்கப்படும்

வெளிநாட்டு அழைப்புகளுக்கு 4/-

WESTERN UNION

பணப் பரிமாற்றம்

துரித பொதிகள் சேவை

FedEx Express

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel : 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்,
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 2027 Fax - 021 226 2993



# Sanshigaa

JEWEL HOUSE

எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!

## சன்சிகா நகையகம்

සන්ෂිගා ජුවෙල්හවුස්



சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL; 024-2224028

யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,
கொழும்பு -11

(சி-12988)

# EXPOAIR எக்ஸ்போ ஏயார்

*your friend in the skies...*

வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

(C-11725)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி–11 | 28–10–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–253



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12957) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## உயரியதான சுதந்திர வாழ்வு வேண்டும்

# வவு.வில் பல்லாயிரம் தமிழ்மக்கள் திரண்டெழுந்து எழுச்சிப் பிரகடனம்!

## சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை

(வவுனியா)

**உன்னதமானதும் உயரியதுமான சுதந்திர வாழ்வு தமிழ்மக்களுக்கு வேண்டுமென வவுனியாவில் திரண்டெழுந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் எழுச்சிப் பிரகடனம் செய்தனர். மேலும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.**

வவுனியாவில் யூலை மாதத்தில் தமிழ் பேராளர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்தை வலியுறுத்தியும், தமிழ்மக்களின் தன்னாட்சி உரிமைகளை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அங்கீகாரம் கோரியும் வவுனியாவில் நேற்று பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கூடிய மாபெரும் எழுச்சி நிகழ்வு உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

(IV ஆம் பக்கம் பார்க்க)



## தடை அவசியமில்லை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளில் சனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்கால தடை அவசியமில்லை என உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

எனினும் எதிர்வரும் ஏழாம் திகதி மீண்டும் இது தொடர்பிலான விசாரணையை நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் சனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடாது என்ற இடைக்காலத் தடையை விதிக்கக்கோரி முற்போக்கு முன்னணி இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தது.

இந்த மனுவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மாற்றுக்கொள்கைக்கான மையமும் இடையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தன.

இந்த நிலையில் இடையீட்டு மனுவின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள உயர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை

திருகோணமலையில் ஓட்டோ சாரதியொருவர் இனந்தெரியாத நபர்களினால் நேற்று வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் சிங்கள அமைப்பைச்சேர்ந்த வீரசேகர அனுர (வயது-28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

திருமலை மரத்தடி ஓட்டோ தரிப்பிடத்தில் நின்றிருந்த வேளை

(IV ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களத்தலைவர்களை இனியும் நம்பிப் பயனில்லை சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்போம்!

## யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமைப்பு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு தமிழ்மக்களை யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

"சிங்கள மக்கள் தமது தலைமையைத் தெரிவு செய்யும் தேர்தல் 2005 நவம்பர் 17" எனத் தலைப்பிட்டு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அன்று சிங்கள தேசம் நீதியான அரசியல் தீர்வை வழங்காது என்பதையும், தமிழ் மக்கள் விடுதலை விருப்பினையும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் நிரூபிக்க வேண்டிய தேவை இருந்ததெனத் தெரிவிக்கும் அவ்வறிக்கை இவை தேர்தல் மூலம் சர்வதேச சமூகத்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ தேசியப் பண்ணினை ஆக்கும் அருமுயற்சியில் பங்கேற்க அழைப்பு!

## இனிய தமிழுறவுகளுக்குப் புலிகள் அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தேசியப் பண்ணினை ஆக்கும் அருமுயற்சியில் பங்கேற்குமாறு தாயகத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற எமது இனிய தமிழுறவுகளுக்கு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்; எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களது வழி காட்டுதலோடும் நெறிப்படுத்தலோடும் கடந்த கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வந்த விடுதலைப் போராட்டத்தினூடாக ஈழத்தமிழர் தாயகத்தில் ஒரு நடைமுறை அரசு நிறுவப்பட்டுள்ளது.

அதை நிலை நிறுத்துகின்ற வகையில் தேசியக் கொடி, தேசிய மலர் என்பன ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆயினும், தேசியப் பண் ஆக்கப்படாத நிலையில், எமது கொடி வணக்கப் பாடலையே தேசியப் பண்ணுக்கு மாற்றாக நாம் பயன்படுத்தி வருகின்றோம்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் கலந்து கொள்ளச்சென்றோர் வவு. நுழையத் தடை



வவுனியா தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ் வடமராட்சியிலிருந்து தேசியத்தலைவரின் படத்தைத்தாங்கிய ஊர்தி பவனியுடன் ஈருருளியில் தேசியக் கொடியைத் தாங்கியவண்ணம் சென்ற பொதுமக்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில்

(IV ஆம்பக்கம்பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**MS.Word,**
**MS-Excel, MS-Access,**
**MS-Powerpoint, Windows.**
***வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.***
தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம்,
டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)


# கைக்குண்டு மீட்பு!

(திருமலை)

திருகோணமலை கண்டி வீதியில் நேற்று முன்தினம் மதியம் கைக்குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது. டவுண் ரவுண் என்னும் விடுதிக்கு முன்பாகவே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ் இடத்திற்கு முன்பாக இராணுவக் காவலரண்கள் உள்ளன என்ப தும் இப்பகுதிகளில் அடிக்கடி படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இதுபடையினரதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.




## தமிழீழ நுண்கலைப்பிரிவு நடாத்தும்
## "சங்கீத கலாவித்தகர்" திரு.சிவநாதன் சிவசத்தியமோகன்

அவர்களின்

**இசை அரங்கேற்ற அழைப்பிதழ்**

தமிழீழ நுண்கலைப்பிரிவைச் சேர்ந்தவரும் "சங்கீத பூஷணம்" அளவையூர் வ.க.நடராஜா அவர்களின் மாணவனும் திரு.திருமதி.சிவநாதன் அவர்களின் புத்திரனுமாகிய

"சங்கீத கலாவித்தகர்" திரு.சி.சிவசத்தியமோகன்

அவர்களின் இசையரங்கேற்ற நிகழ்விற்கு தாங்களும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். காலம் – 29.10.2005 (சனி) பிற்பகல் – 2.00மணி
இடம் – பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி.

| | |
|---|---|
| பாட்டு:- | சங்கீத கலாவித்தகர் திரு.சி.சிவசத்தியமோகன் |
| வயலின்:- | இசைஞானரசு திரு.அ.ஜெயராமன் |
| மிருதங்கம்:- | நுண்கலைமாணி திரு.க.கண்ணதாஸ் |
| கெஞ்சிரா:- | வித்துவான் திரு.இரா.சிவராமன் |
| கடம்:- | கலாவித்தகர் திரு.என்.மாதவன் |
| முகர்சிங்:- | கலாவித்தகர் திரு.எஸ்.செந்தூரன் |
| தம்புரா:- | திருமதி.மணிமொழி கிருபாகரன் |

கலைஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,
நுண்கலைப்பிரிவினரும்,
மகளிர்கலைபண்பாட்டுக்கழகத்தினரும்.

(சி. 13127)



## தமிழீழ தேசியதொலைக்காட்சி

# பணிநிலை வேண்டுகை

உலகெங்கும் தன் ஒளிபரப்பு வீச்செல்லையை விரித்துள்ள தமிழீழ தேசிய தொலைக்காட்சியில் கண்ணியமான காட்சிப்படுத்தலுடன் கூடிய விளம்பரங்களில் நடிப்பதற்கான ஆண்கள், பெண்கள் உடன் வேண்டப்படுகின்றனர்.

### பணிக்கான ஆற்றல் நிலை

*18 – 30 வயதுக்கு உள்ளடங்கியோர்.

* தமிழை வழுவின்றியும் ஆற்றொழுக்காகவும் உச்சரிப்பதுடன் விளம்பரத்துக்கு ஏற்ற குரல் வளத்தையும் கொண்டிருத்தல்.

*முகக்குறிப்புகளுடன் கூடிய கொஞ்சம் நடிப்புத்திறன்.

* பலதரப்பட்ட விளம்பரங்களையும் வெளிப்படுத்தும் ஆளுமை.

*காட்சிகளில் தோன்றும் பணியென்பதால் பார்வையாளர்களின் கவன ஈர்ப்பை தம்பக்கம் எடுக்கும் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

*நடன ஆற்றல் மேலதிக ஆளுமையாகக் கொள்ளப்படும்.

*அண்மையில் எடுத்த முழுஅளவு நிழற்படத்துடன் நேரில் வருகை தரவும்.

தொடர்புகளுக்கு:-
தமிழீழ தேசிய தொலைக்காட்சி தொடர்பகம்,
யாழ்.முதன்மைச்சாலை,
கிளிநொச்சி. T.P. 021 228 5816

(சி.13160)


## 06 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

**********************************************



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 31 | 28 |
| □ | □ |
| 07 | 10 |
| □ | □ |
| 1976 | 1999 |

**தமிழீழ காவல்துறை,**
**தலைமைக்காவலர் நகுலேஸ்வரன்,**
**தெய்வேந்திரம் நகுலேஸ்வரன்,**
**சுதுமலை தெற்கு , மானிப்பாய்,**
**யாழ்ப்பாணம்.**

திண்ணிய தோள்தனில் பீரங்கிக் குண்டுகள் சுமந்தவனே-வெடிஓசை
விண்ணதிர தமிழ் மண் விடிய எதிரிப்படைகளை வீழ்த்தி நிமிர்ந்தாயே
கண்ணியமாய்க் காவல்துறைப் பணி ஏற்று நடந்தவனே-நண்பா
கண்ணொத்த தமிழீழ விடுதலைப்பாதையில் நீ விரைந்தாயே-எம்
எண்ணமெல்லாம் உன்னுடனே விண்வரையில் பின் தொடர-தமிழீழ
மண் விடிய நாமெல்லாம் தொடர்வோம் உன் பணியில்.

சம்பவம் – அம்பகாமம் பகுதியில் ஜெயசிக்குறு எதிர்ச்சமரில் சிறிலங்கா இராணுவத்தினருடானன நேரடி மோதலின் போது 28.10.1999 அன்று வீரச்சாவடைந்தார்.

**-தமிழீழ காவல்துறையினர்-**

(6818)


## திருநெல்வேலியில் ஓர் புதிய உதயம்

பூமியில் புதிதாக கால்பதிக்கும் உங்கள் குழந்தையை வரவேற்க....



குழந்தைகளுக்கான * பால்மா வகைகள்
* உடைகள்
* விளையாட்டுப்பொருட்கள்

உட்பட உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் மற்றும் தாய்மாருக்கான பொருட்களையும் ஒரேகூரையின் கீழ் அதிசயிக்கத்தக்க மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.




**Mother And Baby Care**

**108/I,palaly Road, Thirunelvely.T.P:0717556677**

(சி.13097)



ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

***ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தும் பாதிப்பு....***

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே

வாசியுங்கள்

## அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

தொடர்புகளுக்கு AHAVILI,3,Torrlngton Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili@Viluthu.org

# வவுனியா தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வின் பதிவுகள்










(10,21)

# கூலியாட்களாக வந்தவர்களுக்கு கண்டியை தாரைவார்க்க முடியாது

## முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய

(கொழும்பு)

கூலியாட்களாக வந்தவர்களுக்கு கண்டியைத் தாரைவார்க்க முடியாதென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. உடரட்ட எனப்படும் மலைநாட்டுப் பிரதேசத்தை அந்நியர்களிடமிருந்து காப்பாற்றிய பெருமை சிங்களவர்களுக்கே உரியதெனவும், தென்னிந்தியாவிலிருந்து கூலியாட்களாக வந்தவர்களுக்கு இந்தப் பிரதேசத்தை தாரைவார்க்க முடியாதெனவும் ஜாதிக ஹெல உறுமயவின் நிர்வாகசபை உறுப்பினரும், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான கொட்டகதெனிய கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கை சிங்கள நாடெனவும், இதன் ஒருபகுதி உடைந்து செல்வதற்கு அனுமதிக்க முடியாதெனவும் அங்கு குறிப்பிட்ட கொட்டகதெனிய, 15 ஆயிரம் பேரைக்கொண்ட விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிட சிங்களப் படையினரால் ஏன் முடியாதுள்ளதெனவும் கேள்வியெழுப்பினார். நாட்டை ஒற்றுமைப் படுத்துவதாகக் கூறிக்கொண்டு பிரித்தாள முயற்சிப்பவர்களே ரணிலுடன் ஒன்றிணைந்து செயற்படுவதாகவும், நாட்டைப் பிரிப்பதற்கு ஒன்றிணைந்து நிற்பவர்கள் தேசத்துரோகிகள் எனவும் கொட்டகதெனிய அங்கு மேலும் தெரிவித்தார்.

## 'பசுந்தேசம்' ஒலிப்பேழை அறிமுக விழா

(புதுக்குடியிருப்பு)

சிறிகுகனின் இசையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிய பசுந்தேசம் பாடல் ஒலிப்பேழை அறிமுக விழா நாளை சனிக்கிழமை காலை பத்து மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒன்றுகூடல் மண்டபத்தில் சிறப்பான முறையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (08)

தீபாவளிக்கான
மாபெரும் மலிவு விற்பனை
கண்ணைக்கவரும் கட்டிங் காட்டுகள் (இந்தியா, சிங்கப்பூர், இலங்கை)
இலங்கையின் முன்னணி வெளியீட்டாளர்களான சீமைஸ், சுஜிகவா, நியூகவா, ஜூனம்ஸ் போன்றோரின் வாழ்த்துக்கள்.
உங்கள் எண்ணம்போல் நீங்கள் கேட்ட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி–6693 (சி.13125)

## வாழ்த்துகின்றோம்



28-10-2005 இன்று ஓராண்டு திருமண நிறைவு நாளைக் கொண்டாடும் திரு திருமதி ஜெயச்செல்வன் (செல்லப்பா) தேன்மலர் (செல்வி) ஆகிய இருவரும் அனைத்துச் செல்வமும் பெற்று நீடுழி காலம் வாழ்கவென்று வற்றாப்பளை அம்மனை வேண்டுகின்றோம்.



கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

(சி.13094)

சகோதரர்கள்.

03-10-2005 முதல் 01-11-2005 வரை
SALE SALE SALE SALE
தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்
விசேட கழிவு
உடனே விஜயஞ்செய்யுங்கள்:
லைடன் புடைவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
222 2381 (சி-13090)
தீபாவளித் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிறும் கடை திறந்திருக்கும்.

## சாவு அறிவித்தல்

### மாரியம்மாள்

பயனியர்பாகம் ஒலுமடு மாங்குளத்தைச் சேர்ந்த மாரியம்மாள் 27.10.2005 அன்று அகாலச்சாவடைந்துள்ளார். அன்னார் உதயகுமார் (பெரியவன்) அவர்களின் அன்பு மனைவியும், உதயன், டிலக்ஸன், டிலக்ஸனா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆர். கதிரமலை, கோவிந்தம்மாள் ஆகியோரின் பாசமிகு மகளும், ஆனந்தராசா, உதயகுமார், சந்திரசேகர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 28-10-2005 இன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ. உதயகுமார் (கணவன்)

(சி-13159)

# சு.கட்சியைப் பாதுகாத்து வழி நடத்துவேன்

# அதற்கு ரணிலின் உதவி தேவையில்லை

-பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கும் கடமை எனக்குள்ளது. அதை நான் செவ்வனே முன்னெடுப்பேன் அதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் அதரவு ஒருபோதும் தேவையில்லை எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழிநடத்துவது போல், எதிர்காலத்தில் நானும் பாதுகாத்து வழிநடத்துவேன் என சனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நான் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மூலம் அரசியலுக்குள் பிரவேசித்து 35 ஆண்டு அனுபவத்தைப் பெற்றுள்ளேன். அதேபோன்று சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு எனக்கு உரிமையுள்ளது. நான் எதிர்காலத்தில் கட்சியைப் பாதுகாப்பேன் அதற்கு ரணிலின் அதரவு தேவையில்லை. சுதந்திரக்கட்சி நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை நானும் முன்னெடுத்துச் செல்வேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

# நிலையான பயண அனுமதி அட்டை புதுப்பித்தல்

(அலுவலக செய்தியாளர்)

மண்ணிற நிலையான பயண அனுமதி பெற்றவர்கள் அவ் அனுமதிக்கான செல்லுபடியாகும் காலம் முடிவடையும் போது புதுப்பித்தலுக்கான வேண்டுகையைப் பூர்த்தி செய்து நிலையான பயண அட்டையினை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் காலம் முடிந்த நிலையான பயணஅனுமதி புதிப்பித்தலுக்கு பயணத்தேவை வரும்வரை காத்திருக்காது முற்கூட்டியே (செல்லுபடிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்குள்) புதுப்பித்து வைப்பதன் மூலம் அவசரத்தேவைகளின்போது ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

நிலையான பயண அனுமதி புதுப்பித்தல் தொடர்பான மேலதிக விபரங்களை போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு பிரதேச செயலகங்களில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் போக்குவரத்துக்கண்காணிப் புப்பிரிவினர் அறியத்தருகின்றனர். (கு.தீ)

## நேற்றைய போட்டிகள் இன்று

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பெற்று வந்த இரண்டாம் சுற்றுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் முதல்போட்டிகள் நேற்று தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை. எனவே நேற்று நடைபெறவிருந்த போட்டிகள் இன்று நடைபெறுமெனவும் தொடர்ந்து திங்கள் வரை உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறுமெனவும் மேற்படி விளையாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (கு)

## ஓட்டோ....

இவரின் வண்டியை வாட்கைக்கு அமர்த்திய இரு பெண்கள் ஓர்ஸ் ஹில் எனும் இடத்தில் இவரின் ஓட்டோவுக்குள் வைத்தே சுட்டுள்ளனர்.

இவர் மீது பிஸ்டலாலே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதென்றும் அவர் சம்பவ இடத்திலேயே என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

திருமலையில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையடுத்து தற்போது அங்கு விசேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தடை....

நீதிமன்றம் தீர்மானித்தது.

தேர்தல் ஆணையாளர் கொத்தணி வாக்குசாவடிகளின் மூலம் வாக்கெடுப்பை நடத்தக்கூடிய சூழல் காணப்படுவதாக நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

தேர்தல் ஆணையாளரின் இந்த அறிவிப்பை ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணி ஏற்றுக்கொண்டார்.

இதனையடுத்து இந்தச் சூழல் தொடர்பில் கட்சித்தலைவர்களை அழைத்து தெளிவுப்படுத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது

## தமிழீழ....

தேசியப் பண் இன்றைய சூழலில் காலத்தின் இன்றியமையாத் தேவையாகிவிட்டது. எதிர்காலத்தில் மீக்குயர் பண்ணாக ஒலிக்கவிருக்கும் தமிழீழத் தேசியப் பண்ணினை ஆக்கும் அருமுயற்சியில் பங்கேற்குமாறு தாயகத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற எமது இனிய தமிழுறவுகளை அன்புடன் அழைக்கின்றோம்.

தேசியப் பண்ணினை ஆக்க முன்வருவோர் தேச விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த மானமறவர்களினது விடுதலை வேட்கைக்கும் தாயகம் பற்றி அவர்கள் கொண்டிருந்த எதிர்பார்க்கைக்கும் உயிர் கொடுக்கும் வகையில், துள்ளல் நடையில் மிடுக்கோடு கூடியதாகத் தேசியப் பண்ணினை ஆக்குதல் வேண்டும்.

எமது தாயகத்தின் சிறப்பு, பெருமை, வளம் என்பவற்றை வெளிப்படுத்துகின்ற வகையில் அமைக்கப்படும் தேசியப் பண், ஈழத்தமிழர்களின் விடுதலை வேட்கையையும் அதற்கு எம்மினம் கொடுத்த விலைகளையும் எமது வழித்தோன்றல்களின் நினைவில் நிலை நிறுத்தக் கூடியதாக பிறமொழிக் கலப்பற்றதாக அமைதல் வேண்டும்.

இவ்வாறாக எமது தேசியப்பண் ஆகக்கூடியது பதினெட்டு வரிகளுக்குள் உயர் வீச்சைக் கொண்டதாக அமையவேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

தேசியப் பண்ணுக்குரிய ஆக்கங்களை அனுப்புபவர்கள் தமது முழுப் பெயர், முகவரி உள்ளிட்ட விபரங்களையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

உருவாக்கப்படும் தேசியப் பண்ணுக்குரிய ஆக்கங்கள் 27.11.2005 ஆம் நாளுக்கு முன்னதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் தாயகத்தில் உள்ளவர்கள் தத்தம் பிரதேச அரசியல்துறை செயலகங்கள் ஊடாகவும் அனுப்பி வைக்கலாம்.

ஊடகப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
அரசியல்துறை,
கிளிநொச்சி-தமிழீழம்,
மின்னஞ்சல்- editorial @ viduthalaipulikal. com
தொலை பேசி : - 94212285010
தொலை நகல் : -94212283941
(லோ)

## வவுனியாவில்....

மாவட்ட ரீதியாகத் தமிழர் தாயகம் எங்கும் கடந்த இரண்டு மாதங்களில் இடம்பெற்றுவந்த இத்தேசிய எழுச்சி நிகழ்வுகள் நேற்று மாலை 3.00 மணிக்கு வவுனியா மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் எழுச்சி நிகழ்வு நிகழ்ந்த மைதானமும், அதனைச் சூழவுள்ள பகுதிகளும், வவுனியா நகரமும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு எழுச்சிக் கோலம் கொண்டிருந்தது.

இந்த நிகழ்விற்கு வவுனியா மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களில் இருந்தும் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட போக்குவரத்தில் மக்கள் அனைவரும் அழைத்துவரப்பட்டனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து பெருமளவான மக்கள் அழைத்துவரப்பட்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் மற்றும் வவுனியா மாவட்ட தற்காலிக அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் உட்பட பல அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வில் பொதுச்சுடர்கள் 18, வந்திருந்த சிறப்புப்பிரதிநிதிகள் ஏற்றினார்கள். தமிழீழத்தேசியக்கொடியினை மாவீரர்களின் தந்தையாரான கந்தையா ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட போராளிகளையும், சிறிலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் எழுச்சி உரைகளும், அரங்க செயற்பாடுகளும் இடம்பெற்றன. எழுச்சியுரைகளும், அரங்க நிகழ்வுகளும் நடைபெற்ற ஏககாலத்தில் தமிழீழத் தேசியக் கொடி மைதானத்தைச் சுற்றி ஊர்தி பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு மக்களின் கொடி வணக்கம் நடைபெற்றது.

நிகழ்வின் இறுதியில் தமிழீழ மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமையை வலியுறுத்தியும், ஐரோப்பிய ஒன்றியத்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள பயண வரவேற்பு மறுப்பை மீளப்பெறுமாறு கோரியும் எழுச்சிப்பிரகடனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வை முன்னிட்டு இராணுவம், பொலிசார் வவுனியா நகரிலும் அதனை அண்டிய பிரதேசத்திலும் பெருமளவாகக் குவிக்கப்பட்டிருந்தனர். வீதியால் சென்று வந்தவர்கள் சோதனையிடப்பட்டபோதும் எந்தவிதமான பிரச்சினைகளும் இடம்பெறவில்லை. தம்து பாதுகாப்புக்கடமைக்காகவும் ஏற்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவே தாம் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையினைச் செய்ததாக வவுனியாப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.சி.அபேசிங்க பண்டா தெரிவித்தார்.

அரங்கின் செயற்பாடுகள் அனைத்தையும் வவுனியா அரங்க செயற்பாட்டுக்குழுவினர் செய்திருந்தார்கள்.

# சென்னையில் பெருவெள்ளம்

# பாடசாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டன

(சென்னை)

தமிழ்நாட்டில் பெய்துவரும் கடும் மழையினால் சென்னை நகரம் உட்பட அனைத்துப்பகுதியும் நீரால் மூழ்கின.

நேற்றுக்காலை முதல் பெய்துவரும் இந்தக்கடும் மழையினால் நகரின் பிரதான வீதிகள் உட்பட விமானநிலையம், புகையிரதநிலையங்களும் மழைவெள்ளத்தில் மூழ்கியதால் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டன. அத்துடன் பாடசாலைகள் மற்றும் வியாபாரநிலையங்கள் தொழிற்சாலைகள் என்பன மூடப்பட்டன.

மழைவெள்ளம் பெருமளவு வீடுகளில் புகுந்தமையினால் பல்லாயிரக் கணக்கானோர் தமது இருப்பிடங்களை இழந்த நிலையில் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக்கடும்மழை வீழ்ச்சியின் அளவு 27 சென்றிமீற்றராகப் பதிவாகியுள்ளது. மழை தொடர்ந்தும் கொட்டிவருவதால் பாடசாலைகள் அனைத்திற்கும் விடுப்பு அறிவிப்பட்டுள்ளது.

# வீரவேங்கை அருணனின் நினைவுக்கல் திரைநீக்கம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைக்கடற்பரப்பில் கடந்த 13.03.1997 அன்று சிறிலங்காக் கடற்படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அருண் அல்லது அருணன் (சித்திரவேல்-சண்முகலிங்கம் சேனையூர் திருமலை) தற்போதைய முகவரி அன்புத்திட்டம் புதுக்குடியிருப்பு என்பவரது நினைவுக்கல் நேற்று (27.10.2005) முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

முன்னதாக இவரின் தற்போதைய இல்லத்திலிருந்து உருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

## சிங்களத்....

திற்கு நிரூபித்ததாகவும் தெரிவித்தது.

மேலும் அவ்அறிக்கையில், 2002 பெப்ரவரி-புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலம் - சர்வதேசத்தின் முன்பு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட களத்தில் சில விடயங்களை நிரூபிக்க வேண்டிய தேவை உங்களுக்கு இருந்தது. 2005 நவம்பரில் அவ்வாறான தேவை ஏதேனும் உள்ளதா எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பாதை திறப்பு-பொருளாதாரம் தடை நீக்கம் இராணுவ முகாம்களை அகற்றல் மீள் குடியேற்றம் புனர்வாழ்வு புனர்நிர்மாணம் அரசியல் தீர்வு ஆறு வேலைத்திட்டங்கள் பேச்சுக்கான களத்திலிருந்தன. பாதை திறந்தது! பொருளாதாரத்தடை நீங்கியது! அதுவும் கூடச் சிங்களம் எம்மால் இரங்கி அல்ல தமது பொருளாதார அரசியல் அனுகூலங்களை கருத்திற் கொண்டு மட்டுமே! வேறென்ன நடந்தது?

அரசியல் தீர்வுக்காய் ஆறுகட்ட பேச்சுக்கள் ஒப்பந்த விதிகளை அமுலாக்க உபகுழுக்கள் அமுலாக்கப் பட்டதா? சிங்கள அரசு முயலவில்லை! விரும்பவில்லை! உபகுழுக்கள் செயறபடாமல் செத்தன! அரசியல்பேச்சுக்கள் அர்த்தமற்றுப் போயின! இயல்பு வாழ்க்கை என்ற ஆரம்பக் குறிக்கோள்களைக்கூட நாம் இன்றும் எட்டவில்லை. எமது விளைநிலப்பரப்புக்களில் எமது கடல்களில் , எமது வீடுகளில் , எமது பாடசாலைகளில், எமது தாயக பூமியில் இன்னமும் சிறிலங்கா இராணுவம்! இப்போது அச்சமின்றி மரண பயமின்றி நிம்மதியாக உறங்குகிறது கூடிக் கும் மாளமிடுகிறது.

இதற்காகவா-எம்மைப்பலி கொடுத்தவர்களின் ஓய்வுக்காவா- எமது 17,000இற்கு மேற்பட்ட இளம் குருத்துக்களை இழந்தோம். பல்லாயிரக்கணக்கான எமது மக்களை தாரைவார்த்தோம்!

சர்வதேசத்தின் விருப்பத்திற்கிணங்க தமிழர் தரப்பு முன்வைத்த இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபைக் கண்டவுடன் போருக்கு அஞ்சி ஒளிந்திருந்த சிங்கள தேசத் துப்பேரினவாதிகள் சீறியெழுந்தனர். பேரினவாத புயல் ஆட்சியைக் கலைத்தது. கொழும்பு அரசியல் குழம்பியது.இன்னும் குழப்பம் விடுபடவில்லை. இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டே வெறும் போர் ஓய்வுடன் மூன்றரைஆண்டுகளைக் கடந்து விட்டோம்.இந்தப்போர் ஓய்வைப்பயன்படுத்தி சிறிலங்கா அரசு போரினால் உருக்குலைந்து போன தனது இராணுவத்தை மீளக்கட்டியெழுப்பியது. கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான நிழல் யுத்தத்தை ஆரம்பித்தது. போராளிகளும் தேசப்பற்றாளர்களுமாய் நூறுபேர் வரை பலியெடுத்தது தற்போது நிழல் யுத்தத்தை வடக்கிற்கும் நகர்த்தியிருக்கிறது.

2004 ஏப்ரல் (?)சிறிலங்கா பாராளுமன்றத்தேர்தலில் நாம் வாக்களித்தது அப்பாராளுமன்றத்தின் பால் எமக்கிருந்த நம்பிக்கையினாலல்ல! அத்தேர்தலைப்பயன்படுத்தி சர்வதேச நடுவர்கள் முன்னிலையில் 1977ஆம் ஆண்டு மக்கள் ஆணையை மீளப் புதிப்பித்தோம். எமது ஏகப்பிரதிநிதிகள் யார் என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்ட வழிமுறையில் நிரூபித்தோம் இனிமேலும் நாம் எதைநிரூபிக்க வேண்டும் ? எனத்தெரிவிப்பதோடு 2005 நவம்பரில் சிங்களதேசம் தனது சனாதிபதிகளைதேர்ந்தெடுக்கும் தேர்தலில்- தமிழர்களாகிய நாம் செய்ய என்ன உள்ளது? இத்தேர்தலில் தமிழர் தேசம் கலந்து கொண்டால் சிங்களத்தலைவர்களை இனிமேலும் நம்புபவர்களாக இருக்கின்றோம் என்றல்லவா அர்த்தமாகிவிடும் எனத்தெரிவிக்கும் அவ்வறிக்கை சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவும் ,ரணில் விக்கிரமசிங்கவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கான திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆகையினால் தமிழீழ மக்களே எச்சரிக்கையாக இருங்கள் மகிந்த , ரணில் இருவரும் கோழி பிடிப்பவர்கள் தான். மகிந்தவுடன் செந்தோழர்களும் காவி உடையினரும் கதறக்கதற கலைத்துப் பிடிப்பார்கள் ஆனால் ரணில் ஈரச்சாக்குப் போட்டுப்பிடிப்பார். இவர்களுக்கா நாம் வாக்களிக்கப் போகிறோம். எனவே எமதுஇனிய மக்களே! 2005 நவம்பர்சிறிலங்கா சனாதிபதித்தேர்தலை பகிஷ்கரித்து தமிழர் தேசம் சிங்களத்தலைவர்களை இனியும் நம்பத்தயாரில்லை என்ற செய்தியை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க தயாராகுங்கள். (33,27,10,21)

## தேசிய...

சிறிலங்காப் படையினரால் பிற்பகல் 3.30 மணிக்கு தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனையடுத்து அவர்கள் விடுதலைப்புலிகளின் சோதனை நிலைத்திற்கும் இராணுவ சோதனை நிலையத்திற்கும் இடையிலான நடு நிலைப்பகுதியில் அமர்ந்து போராட்டம் நடத்தினர். ஆனாலும் படையினர் அவர்களை வவுனியாவிற்குள் நுழைய அனுமதிக்கவில்லை.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.